


# தீர்வும் தீர்ப்பும்

நாடகங்கள்


கலாபூஷணம்

பேராதனை ஏ. ஏ. ஜுனைதீன்

# தீர்வும் தீர்ப்பும்

## மேடை நாடகங்கள

## ஆசிரியரின் பிற நூல்கள்



- "ஷாமிலாவின் இதய ராகம்" (நான்காம் பதிப்பு : 2000)
- "எனது வானொலி நாடகங்கள்" (முதலாம் பதிப்பு : 1999)
- "கானல் நீர்" (சிறுகதைத் தொகுதி – அச்சில்)
- "உமர் முக்தாரும் ரோமியோ ஜூலியட்டும்" (வானொலி சரித்திர நாடகங்கள் – தொகுப்பு) (அச்சில்)
- "முக்கோணம்" – மேடை நவீன நாடகம் (அச்சில்)

## தயாரித்துள்ள திரைப் படங்கள் :-

- "நெஞ்சுக்கு நீதி" (இலங்கை – இந்தியா – மலேஷியா முதல் கூட்டுத் தயாரிப்பு, இணை தயாரிப்பாளர்)
- "ஷர்மிலாவின் இதய ராகம்" (இலங்கையின் 25வது தமிழ்த் திரைப்படம், முதலாவது வர்ணத் திரைப்படம்)
- "ஒப மட வாசனா" (சிங்களம்)
- "விடிவு கால நட்சத்திரம்"(விவரணம்)

## தொலைக்காட்சி நாடகம்

- "விடிவு"

## பெற்றுள்ள அரச விருதுகள்:

- அரச 'சாகித்திய' விருது
- அரச தமிழ் நாடக விழா விருது – 1998
- அரச தமிழ் நாடக விழா விருது – 1999
- அரச தேசிய விருது "கலாபூஷணம்" – 2000

## "பெற்றுள்ள சமூக விருதுகள்"

- "திரைக்காவலன்" (தமிழக முன்னாள் முதல்வர் கௌரவ செல்வி. ஜெயலலிதா அவர்களின் 47வது பிறந்தநாள் விருது – 1999).
- "திரைவாணன்" (அகில இன நல்லுறவு ஒன்றியம் விருது 1999).
- **பின்குறிப்பு:-** நாடகப்பணி பற்றி இந்நூலில் அறியலாம்.

# தீர்வும் தீர்ப்பும்

மேடை நாடகங்கள்

கலாபூஷணம்
பேராதனை ஏ.ஏ.ஜூனைதீன்

வெளியீட்டாளர்:
**SHAMILA PUBLICATIONS**
21/2-C. Mayura Mawatte,
Nathimala, Dehiwala,
Shri Lanka.
Tel : 728146, 941075 (Colombo)

இந்நூலானது
தேசிய நூலக, ஆவணவாக்கல் சேவைகள் சபையின்
உதவியுடன் வெளியிடப்பட்டுள்ள போதும், இந்நூலின்
உள்ளடக்கமானது தேசிய நூலக, ஆவணவாக்கல்
சேவைகள் சபையின் கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை.

இலங்கைத் தேசிய நூலகம் – வெளியீடுகளில் உள்ள பட்டியற் தரவு

ஜுனைதீன் ஏ. ஏ.
தீர்வும் தீர்ப்பும் / ஏ. ஏ. ஜுனைதீன் – கொழும்பு :
ஷாமிலா பதிப்பகம், 2000
ப. 84 ; ச.மீ.21
ISBN 955-9665-4-X விலை : ரூ.125/=
i. 894.8112 டி. டி. சி 21 ii. தலைப்பு
1. தமிழ் நாடகம்

ISBN 955-9665-4-X

**ஷாமிலா பதிப்பகம் வெளியீடு: 06**
"THEERVUM THEERPPUM" (Stage Plays)
First Edition - 2000
(C) : S. Sumsul Zekieya.
Author : 'Kalaboosana' Peradenai - A.A.Junaideen.
Cover Design by : F. Zulfica Junaideen.
**Price : Rs. 125/=**
Printed by : A.J.Prints.
44, Station Road, Dehiwela.

நூலாசிரியரின் அனுமதியோடு, நாடகக்கரு சிதைவுறாமல்
விரும்பியவர்கள் இந்நாடகங்களை மேடையேற்றலாம்.

# கலைஞர்களின் காவலன்

ஹாஷிம் உமர்.



'கலாநிதி' 'இலக்கியப் புரவலர்', 'மனித நேய மாமணி' இது போன்ற இன்னும் பல இவரை நாடி வந்த சிறப்புப் பட்டங்கள்.

போக்குவரத்து நெடுஞ்சாலை அமைச்சரின் மக்கள் தொடர்பு அதிகாரி, சுயாதீன தொலைக்காட்சி பணிப்பாளர் சபை உறுப்பினர்.

இவைபோன்ற பதவிகள் இவரை நாடிவந்து, அப்பதவிகள் சிறப்பு பெற்றன என்றால் அதற்குக் காரணம் பகைவனுக்கும் அருளும் இவருடைய நன்நெஞ்சசே ஆகும்.

இனம், மதம், மொழி, தகுதி, தாரதரம் போன்ற இன்னோரன்ன பேதங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட 'மனித நேயம்' நிறைந்த இவரின் உயர்பண்பு இதற்கு இன்னுமொரு காரணியாகும்.

இறைக்க இறைக்கத்தான் (கிணறு) ஊறும் என்பதுபோல், தான, தருமங்கள் செய்யச் செய்யத்தான் தனது பொருளாதாரம் பெருகும் என்பதை தெளிவுற உணர்ந்து, உள்நாட்டில் மட்டுமல்ல, கடல் கடந்து தமிழ் நாட்டிலும் அறிந்தவர், தெரிந்தவர், தெரியாதவர் என்ற பேதமின்றி யார் அழைத்தாலும் ஒப்புக்கொள்வார். அவ்வாறு ஒப்புக்கொண்ட அந்நிகழ்ச்சிகளுக்கு இன்று வரை போகாமல், நிதியுதவியாக தனது பங்களிப்பைச் செய்யாமல் இவர் இருந்ததும் இல்லை.

கலை, இலக்கியவாதிகளுக்கு வாரி, வாரி பல்லாயிரக் கணக்கில் நிதி வழங்குவதில் மனம் தளராத தன்னிகரற்ற ஒருவர், இந் நாட்டில் இவரைப்போல் இதுவரை தோன்றியதில்லை.

**அல்ஹாஜ் ஹாஷிம் உமர்** அவர்களை, கலை, இலக்கியவாதிகளோடு இணைந்து "தீர்வும் தீர்ப்பும்" என்ற இந்நாடக நூல் மூலம், இந்நாட்டில் மிகவும் பழமைவாய்ந்த நாடகமன்றமாகிய **'நிழல் நாடக மன்றம்'** "**கலைஞர்களின் காவலன்**" என்று கௌரவித்து அன்னார் நோய்நொடியற்று, நீடூழி வாழ்ந்து, தொடர்ந்து தம்பணி சீராக ஆற்ற பிரார்த்திக்கிறது.

–நிழல் நாடக மன்றம் –

13.06.2000

# அணிந்துரை

சமூகத்தின் ஒரு அங்கமாக வாழ்ந்து வரும் நாம், அதன் பிரச்சினைகளைக் கண்டுகொள்ளாமல் இருக்கமுடியாது. இன்ப, துன்ப நிகழ்வுகள் அதன் தாக்கங்களுக்கு உட்பட்டே சமூகம் சிக்கியுள்ளது. சமூக செயல்முறைகளுக்குள் நன்மைகளும் தீமைகளும் கலந்தே நிகழ்ந்து வரும். இவைகளை நாம் கண்டுகொள்ளும் போது தானே அனுபவம் பிறக்கின்றது. எதையுமே ஆராயாமல் மனிதர் செய்யும் செயல்களின் முடிவுகளை அவன் அனுபவித்தேயாக வேண்டும். நாம் இதை ஏற்க வேண்டும் என்பதும் இயற்கையின் நியதி போலும். நல்லனவைகளைச் செய்யும்போது எற்படும் திருப்தியும். அதன் பயனாக நாம் பெறும் அனுகூலங்களும் தீயவைகளை, செய்யக்கூடாதனவைகளைச் செய்யும்போது அனுபவிக்கும் இன்னல்களையும் கண்டு கொண்டுதானே வருகின்றோம். இருந்தும் என்ன? உலகியல் நடப்புக்களை எம்மால் மாற்ற முடியாமல் உள்ளது.

எம்மால் மட்டும் என்ன செய்துவிட முடியும் என நாம் சும்மா இருந்துவிட முடியுமா? ஏதோ எம்மால் ஏதும் செய்ய முடியும் என்றுணர்ந்து செய்யக்கூடியனவற்றை நாம் வாழும் காலத்தில் செய்துவிட முனைதல் வேண்டும். இதனைச் சமூகம் எதிர்பார்க்கின்றது. நேரிடையாக எம்மைச் சமூகம் இறைஞ்சிக் கேட்டு விடும் என நாம் இருந்துவிட முடியாது. எனவே நாமாக என்ன செய்ய வேண்டும் என நாம் தான் தீர்மானிக்க வேண்டும்.

சுலபமாக சமூகத்தின் மக்களிடையே நல்ல க்ருத்துக்களை எப்படிப் புகுத்தலாம்? அவர்கள் சிரமப்படாமலேயே சந்தோஷமாக எப்படி எடுத்துக் கிரகிக்க முடியும் என்று ஆராய்ந்தால் கலைத்துறை, எழுத்துத்துறை போன்றவை சிறந்த ஊடகமாக உள்ளதை எவரும் மறுக்க முடியாது. இந்த வழியைத்தான் எமது நண்பர் பேராதனை ஏ.ஏ.ஜுனைதீன் அவர்கள் சிறப்பாகச் செய்துள்ளார்.

நாடகம், சினிமா, எழுத்துத் துறைகளில் நீண்டகாலமாக தன்னை இணைத்துக் கொண்ட, தன்னலமற்ற சிறந்த கலைஞர், துணிச்சலானவர். இவரது நாடகங்களை நான் பார்த்திருக்கின்றேன். இவரது **"விடிவு இல்லாத முடிவு", "தீர்ப்பு", "தீர்வு"** போன்ற நாடகங்கள் சமூகத்தில், குடும்பத்தில் உள்ள பிரச்சினைகளை அவர் சுட்டிக்காட்டி விடுவதோடு நிற்காது, தமது பச்சாதாப உணர்வினை மிகத் துல்லியமாக நெகிழ்ச்சி யுணர்வுடன் சுட்டிக்காட்டி நிற்கின்றார்.

குடும்பங்களிடையே சுமுகமான உறவுகள் நன்கு பரிணமித்து களிப்புடன் வாழ்கின்ற நேரத்தில் குரோதங்கள் எப்படிக் கொப்பளிக்கின்றன?, அது உருவாகி ஆசைகளை, குரோதத்தை எவ்வளவு சுலபமாக வளர்த்து விடுகின்றது?, மண்ணாசைக்குத் தூபம் போடுமாற்போல் சம்பவங்கள் நடப்பதும் இந்த ஆசைகளுக்கு அமைவாக எந்த இழப்புக்களையும் ஏற்கத் தயாராக மனிதன் இருப்பதும் எவ்வளவு வேதனையான விடயமன்றோ?

ஆசைகளின் விளைவு இழப்புக்கள்தான். இதனை உணர்த்தும் நாடகம் தான் தீர்ப்பு. நல்ல பல தகவல்களை எமக்குத் திரட்டித் தருகின்றது. இயல்பான எழுத்து நடை, இந்த நாடக வசனங்கள், அன்றாடம் குடும்பங்களில் நாம் கேட்கும் அர்த்தமுள்ள

சொற்களாகவே அமைகின்றன. மேடை நாடகத்தை ரசிக்கக் கூடியவாறு நகர்த்தி எழுதியுள்ளார்.

அடுத்து பெண்கள் தங்களை ஒரு கட்டுக்கோப்பான வாழ்வு நெறிக்குள் அமைத்தேயாக வேண்டுமென்ற நோக்கில் ஒரு எச்சரிக்கை போல இப்படி வாழ வேண்டும், இப்படி வாழாதே என்று கூறுகின்றது. "விடிவு இல்லாத முடிவு" என்கின்ற நாடகம். செய்த வினைப்பயனை அனுபவிக்கும் பாத்திரமாகக் "கண்மணி" படும் அவஸ்தைகள். நெறி மீறியவர்களுக்கு ஒரு பாடமாக அமைகின்றது. இவளது முடிவு பயங்கரமும் பரிதாபகரமுமானது. திரு. பேராதனை ஏ.ஏ.ஜுனைதீன் இந்த நாடகத்தைச் சிறப்பாகவே மேடையேற்றியிருந்தார்.

இன்று புரையோடிக் கொண்டிருக்கம் இனப்பிரச்சினையை மையமாகக் கொண்டு எழுதப்பட்டதுதான் "தீர்வு" என்கின்ற அருமையான நாடகம். இது மேடையேற்றப்பட்டபோது மிக அற்புதமானதென அனைவராலும் பாராட்டப்பட்டதுடன் அந்த நாடகத்தின் நடிகர்கள் மிகச் சிறப்பாக நடித்திருந்தார்கள்.

சுதந்திரம் கிடைத்ததும் அதை அனுபவிக்க முடியாத நிலை, தேவையற்ற வக்கிர புத்திக்கு அநியாயமாக ஆட்படும் அவல நிலை, இவைகளை நன்கு இந்த நாடகத்தில் சித்தரித்துள்ளார். என்ன பிரச்சினைகள் இருந்தாலும் இவைகளை மீறி மனித நேயம் என்கின்ற சங்கிலி எப்படி ஒருவர் மனங்களை மாற்றி விடுகின்றது. நாம் இலங்கையர் மட்டுமல்ல, "மனிதர்கள்" என்று ஆசிரியர் தன் எழுத்தில் சுட்டிக்காட்டுகின்றார். இது இன ஒற்றுமையை வலியுறுத்தும் நாடகம். சகல இன மக்களையும் பிரதிநிதிகளாக்கி பாத்திரங்களைச் சிருஷ்டித்துள்ளார்.

இவரது இந்த நாடகத்துறை முயற்சிக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவிக்கின்றேன். திரு. ஏ.ஏ.ஜுனைதீன் அவர்கள் எந்த முயற்சிக்கும் இலாப, நட்டம் பார்க்கின்றவர் அல்ல. தனது சேவையை எவ்வித தயக்கமும் மயக்கமுமின்றி ஆற்றுபவர். அவரது சேவையை நான் நன்கு அறிவேன். மேன்மேலும் இவரது கலைத்துறை முக்கியமாக, நாடகப்பணிகள் சிறப்படைய வேண்டும் என்பது எனது பேரவா. இவரது நாடகங்கள் நூல் உருப்பெறுவது எமக்கெல்லாம் பெருமையே. வளர்க, வாழ்க, அவர் பணி.

திரு. வீ. விக்கிரமராஜா,
உதவிப் பணிப்பாளர், நிருவாகம்,
இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம்,
இல, 98, வோட் பிளேஸ்,
கொழும்பு – 07.

செளலாளர்,
தமிழ் இலக்கியக் குழு,
கலாச்சார சமய அலுவல்கள் அமைச்சு,
செத்சிறிபாய,
பத்தரமுல்லை.
**26.06.2000.**

# ஆசியுரை

## உண்மைக்கு ஒரு சாசனம்

"ஷாமிலாவின் இதய ராகம்" தொடர் நவீனமாகச் "சிந்தாமணி" யில் பிரசுரமானதும், பின்னர் நாவலாக நான்கு பதிவுகள் பெற்றதும், நம் நாட்டின் முதலாவது வர்ண திரைப்படமாக வெளி வந்ததும் கலாபூஷண பேராதனை ஏ.ஏ.ஜுனைதீன் அவர்களின் கலை, இலக்கிப் பயணத்தின் சிறப்பான அறுவடைகளே.

மாணவர் பருவத்திலிருந்தே நாடகங்களை எழுதி, தயாரித்து, நடித்தும் தன் கலைப் பயணத்தைத் தொடங்கிய பேராதனை ஏ.ஏ.ஜுனைதீன் அவர்கள், இன்று கலைத்துறையில் பேசப்படும் ஒரு சாதனையாளராகத் தன்னை இனங்காட்டி நிற்கின்றார். அவரால் மேடையேற்றப்பட்ட நாடகங்களே அதற்குச் சான்றாகும்.

நீண்டகால உழைப்பு, ஆரம்ப காலத் தமிழ்த் திரைப்படங்களின் கலைப் பங்குதாரராகவும், சகோதர மொழியான சிங்கள மொழியின் கலைத் துணைவனாகவும் கடமையாற்றி, இன்று தமிழ் மேடை நாடங்களின் தயாரிப்பில் தன்னை முதன்மைப் படுத்திக் கொண்டதோடு, சிங்களச் சினிமாத் துறையிலும் வரலாற்றுப் பதிவுகொண்ட ஒரு சிறந்த கலைஞராகவும் திகழ்கின்றார்.

**கலாபூஷண பேராதனை ஏ.ஏ.ஜுனைதீன்** அவர்கள் தன்னை ஒரு கலைஞராக மட்டுமல்லாது, சிறுகதை, நாவல், இசைப்பாடல், வானொலி, மேடை நாடக எழுத்தாளராகவும் இலக்கியத் துறையில் நிலைபெறச் செய்துள்ளார்.

பத்திரிகைத் துறை ஜாம்பவான் எனப் போற்றப்படும் சிந்தாமணி, தினபதி, ஆசிரியர், **அதியுயர் எஸ்.டி.சிவநாயகம்** அவர்களின் வழிகாட்டலில் வளம்பெற்ற ஒரு பத்திரிகையாளராகவும் ஜுனைதீன் அவர்கள் அறிமுகப்பட்டவர்.

ஆங்கிலத் திரைப்படமாகிய "மவுண்டன் இன்த ஜங்கிள்" திரைப்படத்தில் உதவி இயக்குனராகப் பணியாற்றிய பெருமையும் இவருக்கு உண்டு. இதன் மூலம் மும்மொழிகளில் தன் பங்களிப்பைச் செய்தவராகின்றார்,

பட்டம், புகழுக்காய் அலையாத ஒரு பண்பட்ட கலை, இலக்கியவாதி கலாபூஷண பேராதனை ஏ.ஏ.ஜுனைதீன் அவர்கள், தொடர்ந்து தன் பயணத்தை இத்துறைகளில் முன்னெடுத்துச் செல்ல வாழ்த்துவது ஒவ்வொரு தமிழ் பேசும் மகனின்தும் கடமையாகும்.

**"ஜின்னாஹ்" ஷரிபுத்தீன்.**
பொதுச் செயலாளர்,
கொழும்புத் தமிழ்ச் சங்கம்.
27.06.2000

UNIVERSITY OF C... ...ADENIYA · CEYLON
DEPARTMENT OF PHILOSOPHY

29th November, 1968.

TO WHOM IT MAY CONCERN

Mr.A.Junaideen

I have known Mr.A.Junaideen for some years both as a Secondary School student and later as one intensely interested in Cultural activities.

He did not remain at school to continue and complete his secondary education. His range of interests could not be accommodated within the school's programme. As such, he had to leave and associate himself with those engaged in drama and film production.

He has read widely in Tamil and his knowledge of Sinhalese is equally good. Besides, I found him to be very sensitive to human problems as well.

I had attended a Sinhala play he produced to a village audience. It was a creditable achievement on the part of one, who has had very limited opportunities.

I beg that Mr.Junaideen be given a chance to participate in a major venture in the film world. He is a young man with talent and the needed enthusiasm. I am sure he will perform his role with a due sense of responsibility.

V. Ramakrishnan

V.Ramakrishnan.
B.A.(Cey.), M.Phil.(Lond.).

*தமிழ், சிங்கள திரைப்பட கதை, திரைக்கதை, வசனம், மேடை நாடகம் என்பவற்றில் மூத்த கலைஞர் எஸ்.ஏ. அழகேசன் அவர்கள் அளித்த முன்னுரை.*

# முன்னுரை

நாடறிந்த எழுத்தாளரும் கலைஞரும், நானறிந்த நண்பருமான பேராதனை ஏ.ஏ.ஜுனைதீன் அவர்கள் "தீர்வும் தீர்ப்பும்"எனும் தலைப்பில் தனது அடுத்த நூலை வெளியிடவுள்ளார். அதற்கு முன்னுரை எழுதுவதில் நான் பெருமிதமடைகிறேன்.

"தீர்வு – தீர்ப்பு"– "விடிவு இல்லாத முடிவு" என்ற அவருடைய மேடை நாடகங்கள் மூன்றினது ஒரு கோர்வைதான் இந்த "**தீர்வும் தீர்ப்பும்.**"

எழுத்து, நாடகம், சினிமா என எப்படிப் பிரித்துப் பார்த்தாலும் எல்லாத்துறையிலும் சாதனை படைத்த ஜுனைதீனின் மேடை நாடகங்களில் மூன்றைத் தெரிவு செய்து அச்சில் கொண்டு வந்திருப்பது வரவேற்கத்தக்கதே.

இத் தொகுப்பில் முதலாவது நாடகம் "தீர்வு" இன்று நம் நாட்டில் சமாதானம் பற்றிப் பேசாதவர்கள், எழுதாதவர்கள் இல்லை என்று சொல்லுமளவுக்கு "சமாதானம்" என்ற சொல் "கொடி" கட்டிப் பறக்கின்றது. அது போல இன்று நம் நாட்டில் பெரும் பிரச்சினைக்கு உள்ளாகி இருப்பது "தீர்வுப் பொதி".

"தலைவர்கள் மட்டும் சேர்ந்து கொண்டால் சமாதானம் வராது. என்னைப் போலவே, உன்னைப் போல சாதாரண மனுஷங்க மனமொத்து ஐக்கியமானா மட்டும் தான் சமாதானம், சுபீட்சம் உண்டாகும்."

தீர்வு நாடகத்தில் நவரட்ணம் எனும் கதாபாத்திரம் மூலமாக ஜுனைதீன் நாட்டுக்குச் சொல்லும் கருத்து இது.

அதுதான் இன்றைய அவசிய. அவசரத் தேவை என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

அடுத்த நாடகமாக வருவது "தீர்ப்பு".

"பிறக்கும்போது பிறந்த குணம் போகப்போக மாறுது........" என்ற பட்டுக்கோட்டையாரின் பாடலுக்கு ஏற்ப, ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் மத்தியிலும் குணங்கள் மாறுபட்டு சாதாரண வாழை மரத்தால் வந்த சிறு பிரச்சினை பூகம்பமாக உருவெடுத்து பெரும் அழிவைக்கூட கொண்டு வரலாம் என்பதை எடுத்துக் காட்டுகின்றது தீர்ப்பு.

'செந்தமிழில்'தத்துவம் எழுதாமல் அன்றாடப் பேச்சு வழக்கில் வசனம் எழுதியிருப்பது பாராட்டுதலுக்குரியது. இது நாடகத்தைப் பார்ப்போருக்கு மாத்திரமல்ல, நடிப்பவர்களுக்குக் கூட; நடிப்புத்திறனை வெளிப்படுத்த நல்ல வாய்ப்பாக அமையும் என்பது என் கருத்து.

"முடிவில் ஒரு விடிவு வரும்" என்பது தான் பொதுவான அபிப்பிராயம்.

ஆனால் இங்கே இத்தொகுப்பில் மூன்றாவது நாடகமாக வருவது "விடிவு இல்லாத முடிவு".

இளம் வயது, கல்வி இவ்விரண்டிற்கும் எப்போதுமே ஒரு தொடர்பு உண்டு. உயர் கல்வியைத் தொடரும் வேளையில் இளம் வயதும் வந்து விடுவதுதான் அதற்கு காரணியாக அமைந்துவிடுகின்றது.

கல்வி மனதில் தங்கவேண்டிய காலகட்டத்தில் கல்யாண ஆசை குடிபுகுந்து விட்டால்; தனக்கு மட்டுமல்ல தன் குடும்பத்தாருக்கும் விடிவே இல்லாமல் போய்விடும் என்பதை "**கண்மணி**" கதாபாத்திரத்தை உருவாக்கி ஒரு படிப்பினை ஊட்டுகின்றார் நாடகாசிரியர்..

பாராட்டுதலுக்குரியது.

நண்பர் ஜுனைதீன் அவர்களோடு நான் மிக நெருங்கிப் பழகாத போதிலும் கிட்டத்தட்ட 35 வருட காலமாக அவரை நான் அறிவேன். அவரது கலைத் தொண்டினையும் மிக, மிக அறிவேன். **'நிழல்'** என்ற பெயரோடு இருக்கும் நாடகமன்றத்தை 1968 முதல் இன்று வரை நிஜமாக்கி வைத்துக் கொண்டிருப்பதே இந்த ஜுனைதீன் தான். திறமையின் நிழலை இனம் கண்டு நிஜத்தை தேடிப் போவது கலைஞர் ஏ.ரகுநாதனிடம் நான் கண்ட நல்ல பண்பு. அந்தப் பண்பு நண்பர் ஜுனைதீனிடம் இருப்பது இருவருமே நிழல் நாடக மன்றத்தைச் சேர்ந்தவர்களாக இருந்ததாலோ என்னவோ.

"பேராதனை" என்றதுமே எவருக்கும் உடனே நினைவிற்கு வருவது பேராதனைப் பூந்தோட்டம்.

தமிழ்க் கலையோடு சம்பந்தப்பட்டிருக்கும் எல்லோருக்குமே நினைவிற்கு வருவது ஜுனைதீன் அவர்களை...

கலை மணம் பரப்பும் ஜுனைதீன் தன் பெயரோடு ஊர்ப் பெயரையும் சேர்த்து பேராதனைக்கும் பெருமை தேடித் தருகின்றார்.

நல்லவர் ஜுனைதீனின் கலைப்பணி தொடர வேண்டும். இன்னும் அவரது பல புத்தகங்கள் அச்சில் வரவேண்டும் என உளமார விரும்புகிறேன்.

**பேராதனை ஏ.ஏ.ஜுனைதீன் அவர்கள் பாராட்டுக்குரியவர்...**

வாழ்த்துகிறேன்....

**– எஸ்.ஏ.அழகேசன் –**
03.07.2000.

**'சுவர்ண வாஹினி'**
**676,** காலி வீதி,
கொழும்பு–**3.**

# நானும் எனது வாழ்க்கை நாடகமும்!

என்னுடைய நாடக வாழ்க்கை 1960 களின் முற்பகுதியில் கல்லூரி வாழ்க்கையோடு ஆரம்பமாகியது. கல்லூரி வாழ்க்கையில் என் 'நாடக வாழ்க்கை' க்கு உறுதுணையாக நின்றவர்கள் அதிபர் திரு.வீ. கனகசபாபதி, ஆசான்களாகிய ஐ. சின்னமணி, க. ஆறுமுகம், காலஞ்சென்ற பிரபல கவிஞரும், நாவலாசிரியரும் நாடக, சினிமா நடிகருமாகிய 'நவாலியூர்' நா. செல்லத்துரை, பேராசிரியரும் துணை வேந்தருமாகிய கலாநிதி சு. வித்தியானந்தன், பேராசிரியர் திரு. வீ. இராமகிருஷ்ணன் (தற்சமயம் செங்கலடி, பல்கலைக்கழகம்) ஜனாப் ஏ.ஜே.எம். சத்தார், பிரபலமான நாடக, சினிமா நடிகரும் தயாரிப்பாளருமாகிய திரு. ஏ. ரகுநாதன் (தற்சமயம் பிரான்சில் வாழ்கிறார்) சக மாணவ பிராயத் தோழன் திரு. தோமஸ் ரத்தினம் (தற்சமயம் பேராதனை பல்கலைக்கழக ஆய்வு கூட உப – அதிபர்) ஆகியோர் மறக்க இயலாதவர்களாவர்.

'தமிழார்வன்' என்ற புனைப் பெயரிலும் '**தமிழார்வன் நாடக மன்றம்**' மூலம் 'தொழிலாளர் கண்ணீர்' என்ற நாடகம் மூலம் 1966.11.26 இல் என் வெளியுலக நாடக பிரவேசத்தின் அரங்கேற்றம் நடைபெற்றது.

'**புரசந்த நாட்டிய கலா சங்கமய**' (முழு நிலா கலா மன்றம்) என்ற எனது இரண்டாவது நாடக மன்றம் மூலம் (பேராதனை) ஹேந்தெனி என்ற எனது கிராமத்தில் 'னொபி பிந்துனு மல' ('மலராது சிதைந்த மலர்') என்று 1968.08.31 இல் மேடையேறிய சிங்கள நாடகமே என்னை நாடக வாழ்க்கையில் ஸ்திரப்படுத்தியது.

திரு. ஏ. ரகுநாதனை தலைவராகவும் என்னைச் செயலாளராகவும் கொண்டு 1968 இன் பிற்பகுதியில் '**நிழல் நாடக மன்றம்**' உதயமானது. 'நிழல் நாடக மன்றம்' 'நிழல்' என்ற பெயரில் மறைந்த கவிஞர் மு. கனகராஜன் அவர்களையும் பிரபல எழுத்தாளர் பறாளையூர் இ. பிரேமகாந்தன் (தற்சமயம் அட்டன் – டிக்கோயா முருகன் கோயில் குருக்கள்) அவர்களையும் ஆசிரியராக வைத்து ஒரு மாதாந்த கலை இதழை வெளியிட்டது. இது இந் நாட்டில் எந்தவொரு நாடக மன்றமும் நிகழ்த்தாத சாதனையாகும்.

'நிழல் நாடக மன்றம்' மேடையேற்றிய 'துறையூர்' கே. மூர்த்தியின் "உலகம் சிரிக்கிறது", "தேரோட்டி மகன்" (26 தடவைகள் கண்டி, கொழும்பு, யாழ்ப்பாணம், மாத்தளை) கவிஞர் 'மஹாகவி'யின் "கோடை" (கவிதை நாடகம்), கவிஞர் அம்பி யின் "வேதாளம் சொன்ன கதை" (கவிதை நாடகம் – கண்டி, கொழும்பு, மாத்தளை, யாழ்ப்பாணம்), எஸ். பொ.வின் "வலை", நாடக, சினிமா கலைஞரான எஸ்.ஏ. அழகேசனின் 'பாவிகள்' (கொழும்பு, யாழ்ப்பாணம்); புலவர் தெட்சிணாமூர்த்தியின் "ரகுபதி ராகவ ராஜாராம்", எம்.எச்.பௌசுல் அமீரின் "வாடகைக்கு அறை" (எனது) பேராதனை ஏ.ஏ. ஜுனைதீனின் 'விடிவு இல்லாத முடிவு', 'தீர்வு', தீர்ப்பு, 'முக்கோணம்' என்பன குறிப்பிடக்கூடியவைகளாகும்.

எழுபதுகளின் ஆரம்பத்தில் ஏழு நாள் இலவச நாடக விழா இரண்டினை ஏழு நாடக மன்றங்களை இணைத்து கொழும்பு – யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடத்திய சிறப்பும் நிழல் நாடகமன்றத்துக்கு உண்டு.

மேலும் இன்று லண்டனில் தமிழ் நாடகங்களை நடாத்தி புகழ்பெற்றுள்ள திரு. க. பாலேந்திரா (அவைக்காற்றுக் கலைக்கழகம்) 'நிழல் நாடக மன்றம்' மேடையேற்றிய 'ரகுபதி ராகவ ராஜாராம்" என்ற நாடகத்தில் "விபிஷணன்" வேடத்தில் தான் முதன் முதலாக நடித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## தீர்வும் தீர்ப்பும்

"**தீர்வும் தீர்ப்பும்**" என்ற இந் நாடக நூலில், '**தீர்வு**' – '**தீர்ப்பு**', "**விடிவு இல்லாத முடிவு**" – என்ற மூன்று மேடை நாடகங்கள் இடம் பெற்றுள்ளன. இவை மூன்றும் நாடக விழாக்களில் மேடையேறி, ரசிக பெருமக்களின் ஏகோபித்த பெரும் பாராட்டுதல்களைப் பெற்ற யதார்த்த நாடகங்களாகும்.

விமர்சனங்களுக்கும் நண்பர்களுக்கும் நாடகக் கலைஞர்களின் நல் அபிப்பிராயத்துக்கும் எழுதப் பெற்றவைகள் அல்ல இவை. இந் நாடகங்களை பார்ப்பவர்கள், வாசிப்பவர்களின் உள்ளுணர்வுகளைச் சுண்டி அவர்களைச் சிந்திக்க வைத்து, கடுகில் நூறில் ஒரு பகுதியையாவது தன்னைச் சற்றுத் திருத்திக் கொள்ள உதவினால் அதுவே எனக்கு வெற்றி.

இந் நாடகங்கள் மேடையேறி முடிவடைந்த பின்னர் இந் நாடகங்களைப் பாராட்டியவர்களும், வாழ்த்தியவர்களும் ஏராளம் ஏன்? என் '**முக்கோணம்**' என்ற மாபெரும் நாடகம் 18.08.1999 மேடையேறி முடிவடைந்த போது, நாடக உலகில் பெரும் கலைஞனாகிய 'சிலோன் யுனைட்டெட் ஆர்ட் ஸ்டேஜ்' மன்றத்தின் தலைவராகிய திரு.கே. செல்வராஜன் என் வலக் கரத்தை முத்தமிட்டபோது, என் உள்ளார்ந்தமான நல்ல நோக்கங்கள் வெற்றியடைந்திருப்பதைக் கண்டேன். இம் மூன்று நாடகங்களைப் பற்றியும் சிறு குறிப்புகள் எழுதுவது எனது வருங்கால கலைஞர்களுக்கு நல்லதென்றே நினைக்கின்றேன்.

"**விடிவு இல்லாத முடிவு**" – நாடகம் அகில இலங்கை தெலுங்கு காங்கிரஸ் நாடக விழாவில் 21.09.1995 இல் மருதானை டவர் மண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு மேடையேறிய நாடகமாகும். இது ரசிகர் மத்தியில் மிக நல்ல வரவேற்பைப் பெற்ற நாடகமாகும்.

'**தீர்வு**' – அரச நாடக விழாவுக்காக இந்து சமய, அலுவல்கள் கலாசாரத் திணைக்களம் 1997 ஆம் ஆண்டு நடாத்திய நாடக விழாவில் மருதானை எல்பின்ஸ்டன் அரங்கில் 1997.08.19 வெள்ளிக்கிழமை மாலை 7.30 மணிக்கு மேடையேறி, ரசிகர்களினதும் பத்திரிகையாளர்களினதும் பெரும் வரவேற்பைப் பெற்ற நாடகமாகும். யாழ் நகரில் இருந்து வந்திருந்து இந் நாடகத்தைப் பார்த்த பிரபல மரச் சிற்பக் கலைஞன் 'சிற்ப ஜோதி' திரு. ஏ.வீ. ஆனந்தன் "எமக்காக குரல் கொடுக்க கொழும்பில் யாரும் இல்லை என்ற எண்ணத்தை உமது 'தீர்வு' நாடகம் இல்லாமல் செய்து விட்டது" என்று பாராட்டினார்.

எனினும் முதலாம் இடத்துக்கு வரவேண்டிய 'தீர்வு' நாடகம் சில சூழ்ச்சிக்காரர்களின் சூழ்ச்சிகளினாலும் மத்தியஸ்தர்களின் தவறானக் கணிப்பினாலும் இது நாலாம் இடத்தைப் பெற நேர்ந்தது. "இந்த ஆண்டு (1998) கடந்த ஆண்டுபோல் அவ்வாறான தவறுகள் நடைபெறாமல் இருக்க வேண்டும் என மத்தியஸ்தர்களை நான் மிகவும் வினயமுடன் வேண்டுகிறேன்" என்று சுமார் ஓராண்டுக்குப் பின்னர் 05.10.1998 அன்று அரச நாடக விழா பரிசளிப்பின்போது, 1998ஆம் ஆண்டு அரச நாட விழாவுக்கு ஏக பொறுப்பாளராக இருந்த கலாசார, சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் (இந்து விவகாரம்) திருமதி இ. கைலாசநாதன் குறிப்பிட்டதிலிருந்து இந் நாடகத்தின் வெற்றி மிளிர்வதைக் காணலாம். ("தீர்வு" சம்பந்தமான ஒரு பத்திரிகை விமர்சனம் தனியே காணலாம்)

'**தீர்ப்பு**' – அரச நாடக விழாவுக்காக 1998 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆம் திகதி மாலை 7.30 மணிக்கு மருதானை எல்பின்ஸ்டன் அரங்கில் மேடையேறிய நாடகமாகும். இது சிறந்த துணை நடிகைக்கான விருதைப் பெற்றது.

மேற்கண்ட நாடகங்கள் மூன்றும் நாடக விழாக்களிலே மேடையேறி ஏனைய நாடகங்களை விட மக்கள் மத்தியில் மிக, மிக வரவேற்பைப் பெற்ற நாடகங்களாகும். எனினும் ஏனைய நாடகக் கலைஞர்களின் சூழ்ச்சியும் மத்தியஸ்தம் வகித்தவர்களின் நம் தமிழ் நாடக வளர்ச்சி பற்றிய அக்கறையின்மையும் நாடக அறிவின்மையும் எனது நாடகங்களுக்கும் இதில் பங்குபற்றிய கலைஞர்களுக்கும் அநீதியையே தந்தன. இந்த அநீதி என்னை இன்னும் வலுவடையவே செய்தது. இதற்காக ஒரு உதாரணத்தை மட்டும் சொல்லிவிட்டு விடை பெறுகின்றேன்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஒரு கவிதைப் போட்டியில் கலந்து கொண்டாரராம். அக் கவிதைப் போட்டிக்கு அவர் அனுப்பிய "செந்தமிழ் நாடென்னும் போதினிலே..." என்ற கவிதை மூன்றாம் இடத்துக்கு (இரண்டாம் இடம் என்று சொல்லப்படுவதும் உண்டு) வந்ததாம். எனினும் பாரதியாரின் கவிதையைப் பின் தள்ளிவிட்டு முன் வந்த கவிதை (கள்) என்னவென்றே இது வரைக்கும் யாருக்குமே தெரியாது. அதே போல்; இம் மூன்று நாடகங்களோடு போட்டிபோட்டு பின் தள்ளி விட்டு முன்வந்த நாடகங்கள் நாளை வரும் சந்ததிக்கு எவை என்றே தெரியாமல் போகக்கூடும். எனினும் என் நாடகங்கள் நூல் வடிவில் வந்திருப்பதால் இனி காலத்தை வென்று வாழலாம்.

எல்லாப் புகழும் இறைவனுக்கே!

எனவே, இவை நடிக்க மட்டும் அல்ல, படிக்கவும் சுவையானவை. எதிர்கால சந்ததியினருக்கு இது பயன்படும் என நான் மிக உறுதியாக நம்புகின்றேன்.

இந் நாடகங்கள் பெரும்பாலும் ஒரு மேடையமைப்பு (SET) அல்லது இரண்டு மேடையமைப்பு (SETS) கள் கொண்டவைகளாகத்தான் எழுதப்பட்டுள்ளன. இவ்வாறு எழுதப்பட்டுள்ள இந் நாடகங்களை திரையை மூடாமல் காட்சிக்குக் காட்சி மேடை விளக்குகளை மட்டும் பூரணமாக அணைத்து விட்டு மீண்டும் எரிய விடுவதால் காட்சிகள் மாற்றத்தைக் காட்டலாம். இத் தன்மையால் ரசிகர்களின் ரசிகத் தன்மை குன்றாமல் நாடகத்தை நகர்த்தி செல்ல உதவும். மேடையமைப்புக் காட்சிக்கென ஏற்படும் பெரும் செலவு இதனால் தவிர்க்கப்படுகிறது.

நான் சித்திரம் வரையும் சுவராக எனக்கு என்றும் உற்றதுணையாக இருக்கும் என் பேரன்பு துணைவி ஜெக்கியா அவர்களுக்கும் இது நூல்வடிவம் பெற அனுசரணையான "தேசிய நூலகம் மற்றும் ஆவணவாக்கற் சேவைகள் சபை"க்கும் வழமைபோல் என் நூல்களை அச்சிடும் ஏ. ஜே. பிரிண்ட்ஸ் ஸ்தாபனத்தாருக்கும் என் நூல்களை படித்து என்னை ஊக்குவிக்கும் என் அன்பின் வாசகர்கள், கணனி அமைத்துத் தந்த திரு.எஸ்.சேதுராமன், ரசிகர்கள், வாசகர்கள், நேயர்கள் அனைவருக்கும் என் தாழ்மையான, இதய பூர்வமான நன்றிகள்.

**பேராதனை ஏ.ஏ.ஜுனைதீன்**

30.6.200

21/2 C, Mayura Mawatte,
Nathimala,
Dehiwela, Shri Lanka.
T. 01-728146 / 01-941075.

## பேராதனை ஏ.ஏ.ஜுனைதீனின் இரு நூல்கள் சென்னை - மதுரை பல்கலைக்கழகங்களில் ஆய்வு.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் 'ஜெக்கியா ஜுனைதீன்' எழுதிய 'ஷாமிலாவின் இதய ராகம்' நாவல் ஆய்வுக்கான ஓர் ஆராய்ச்சி நூலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

உத்தம பாளையம் எச்.கே.ஆர்.எச். கல்லூரி தமிழ்த் துறையில் தேர்வு நிலை விரிவுரையாளராகப் பணி புரிந்து வரும் **மு.அப்துஸ் ஸமது** (எம்.ஏ.எம்.பிலோசபி) தற்போது மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் 'இஸ்லாம் மற்றும் இஸ்லாமிய தமிழியற் புலத்தில் துறைத் தலைவர் முனைவர் எம். 'அஜ்மல்கான் அவர்களின் மேற்பார்வையில் எண்பதுகளில் இஸ்லாமிய சமுதாயப் பின்னணி நாவல்கள்' என்ற ஆய்விற்காக 'ஷாமிலாவின் இதய ராகம்' நூலை தேர்ந்தெடுத்துள்ளார், இவர் மேற்படி எழுத்தாளரை பேட்டி காண இவ்வாண்டு செப்டெம்பர் மாதம் இலங்கை வர இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நாவல் தொடர் கதையாகவும் பின்னர் நான்கு தடவைகள் நாவலாகவும் 'ஷர்மிலாவின் இதய ராகம்' என்ற பெயரில் இலங்கையின்இருபத்தைதாவது தமிழ்த் திரைபடமாகவும் கலப்படமற்ற முதலாவது வர்ணத் திரைப்படமாகவும் தயாரிக்கப்பட்டு திரையிடப்பட்டதாகும்.

மேலும் பேராதனை ஏ.ஏ.ஜுனைதீன் எழுதி, அண்மையில் வெளியிட்ட எனது "வானொலி நாடகங்கள்..." என்ற நாடக நூல் இஸ்லாமிய தமிழ் இலக்கியம் என்ற ஆய்வுக்கான ஆராய்ச்சிக்காக முனைவர் (பி.எச்.டி) பட்ட படிப்பு ஆய்விற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சென்னை புதுக் கல்லூரி தமிழ்த் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் **பேராசிரியர் எம்.முகம்மதலி** அவர்களே இவ்வாய்வுக்காக இந்நூலை தேர்ந்தெடுத்துள்ளார்.

மேற்படி நூல்களை சென்னை – மதுரை பல்கலைக்கழகங்கள் தேர்துள்ளதை எண்ணி நாம் ஒவ்வொருவரும் பெருமைப் படவேண்டிய விஷயமாகும்.

**நன்றி**

| | | |
|---|---|---|
| "நவமணி" வார இதழ் | – | 26.03.2000 |
| "தினகரன்" வாரமஞ்சரி | – | 26.03.2000 |
| "வீரகேசரி வாரவெளியீடு" | – | 02.04.2000 |
| "ஞாயிறு தினக்குரல்" | – | 02.04.2000 |

# "தீர்வு" (விமர்சனம்)

பேராதனை ஏ.ஏ.ஜுனைதீனைத் தலைவராகவும், எஸ். இஸட், சலாஹுதீனைச் செயலாளராகவும் கொண்ட நிழல் நாடக மன்றம் அரச நாடக விழாவுக்காக பெருமையுடன் அளித்த நாடகம் தீர்வு. தீர்வு இன்றைய இனப்பிரச்சினையின் உக்கிரத்தையும், இந்தப் பிரச்சினைக்கான தீர்வையும் சொல்ல முயன்றது என்பதைவிட சமகாலப் பிரச்சினையைப் பேராதனை ஜுனைதீனின் பேனா அக்கு வேறு, ஆணி வேறாகப் பிய்த்தெறிய முற்பட்டது என்று கூறுவதுதான் பொருத்தமென நினைக்கிறேன்.

இந்த நாடகம் நான்கு கதா பாத்திரங்களைக் கொண்டதெனினும், இந்த நாடகத்திற்கு உயிரூட்டியது இரண்டே இரண்டு கதா பாத்திரங்கள் தான். குணரத்தின என்ற ஒரு சிங்களவரும், நவரத்தினம் என்ற ஒரு தமிழரும் இனக் கலவரத்தால் பாதிக்கப்படுகிறார்கள். சிங்களவருக்கு இரு விழிகளும் பறி போக, தமிழருக்கு ஒற்றைக்கால் ஊனமாகிப் போகிறது. இன அக்னி கொழுந்துவிட்டு எரியும் அந்த இரவில் இவ்விருவரும் சந்தித்துக் கொள்கிறார்கள். அப்புறமென்ன.... இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்குத் **தீர்வு** என்ன என்பது பற்றி இவ்விருவரும் அலசோ அலசென்று அலசுகிறார்கள்.

இரண்டு கதாபாத்திரங்களை வைத்தே ஏறத்தாழ முக்கால் மணி நேரத்திற்கு நகரும் இந் நாடகத்தில் சிங்களவராக நடித்த எஸ். சத்தியனும், தமிழராக நடித்த ஆர். எஸ். ராஜாவும் தூள் கிளப்பினார்கள். அவர்களின் அருமையான நடிப்பிலும், ஜுனைதீனின் கருத்தாழமிக்க வசனங்களிலும் இரசிகர்கள் கட்டுண்டு கிடந்தனர். ஒரு கூட்டத்தில் சிங்களவர் தன் முகத்தின் இரத்தத்தைத் துடைத்துக் கொண்டிருந்த துணியைத் தமிழர் தனது முக வியர்வையைத் துடைக்கத் தருமாறு கேட்கிறார். அதற்கு சிங்களவர் "ஐயோ.... இதுல என் இரத்தமிருக்கு" என்கிறார். உடனே தமிழர் "என்னப்பா இரத்தம்.... உன்னோட இரத்தமும் என்னோட இரத்தமும் ஒண்ணுதான். இது புரியாமத்தானே நாங்க ஒருத்தன ஒருத்தன் கொன்னுக்கிட்டிருக்கோம்" என்று கூறிக் கொண்டே அந்தத் துணியை வாங்கித் தனது முகத்தைத் துடைத்துக் கொள்கிறார். இந்தக் கட்டத்தில் இரசிகர்கள் உணர்ச்சி வயப்பட்டவர்களாய்த் தமது கைகளை உரத்துத் தட்டிப் பாராட்டுவதை அவதானிக்க முடிந்தது.

இன்னுமொரு கட்டத்தில் அடையாள அட்டையைப் பற்றியும் பேச்சு வருகிறது. இந்த நாட்டில் அடையாள அட்டைக்கு இருக்கிற மதிப்புப் போல வேற எதற்குமே இல்லையப்பா... என்ற ரீதியில் பேசுகிறார்கள். அதில் அடங்கியிருந்த கேலியைப் புரிந்து கொண்ட நாடக இரசிகர்கள் கோஷத்துடன் கரவொலி எழுப்பினார்கள். அந்தக் காலத்தில் குணரத்தின தான் யாழ்ப்பாணம் போய் வந்த கதையைச் சொல்கிறார். நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத் திருவிழாவிற்கு அவர் போனதையும் அங்கிருந்து வரும் போது ஒடியல், பனாட்டு என்று வாங்கிக் கொண்டு வந்ததையும் அசை போடுகிறார். உடனே நவரத்தினம் அந்தக் காலத்தில் தான் கதிர்காமத்திற்குப் போய் வந்த கதையைக் கூறுகிறார். பின்னர் இருவருமே இந்தக் காலத்தில் இவ்வாறெல்லாம் போக முடியுமா...? என்று விரக்தியுடன் கேட்டுக் கொள்கின்றனர். அவையில் நிறைந்திருந்தோரின் இதயங்களில் ஆழமான, வெப்பமான பெருமூச்சுக்களை உற்பத்தி செய்த கட்டம் இது.

பெரும் பொருட்செலவில் "ஷர்மிலாவின் இதயராகம்" என்ற தமிழ்ப் படத்தை வெற்றிகரமாகத் தயாரித்து வெளியிட்ட பேராதனை ஜுனைதீன் மிகக் குறைந்த செலவுக்குள் தீர்வு நாடகத்தை அரங்கேற்றியது ஏனோ தெரியவில்லை என்றாலும் இனிவரும் அவரது நாடகங்கள், நாடகத்தின் அத்தனை இலக்கணங்களையும் தழுவி நிற்க வேண்டுமென்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

"நவமணி" வார இதழ் 28.09.1997

எஸ்.எச்.நிஃமத்.

அரச தமிழ் நாடக விழாவுக்காக

**நிழல் நாடக மன்றம்** தயாரித்த

## "தீர்வு"

அரங்கில்

| **நடித்த நடிகர்கள்:** | | **ஏற்ற பாத்திரங்கள்:** |
|---|---|---|
| எஸ். சத்தியன் | :- | குணரட்ண |
| ஆர்.எஸ். ராஜா | :- | நவரட்ணம் |
| எஸ். செல்வசேகரன் | :- | கிறிஸ்தவ பாதிரியார் |
| பி. கருணாநிதி | :- | முஸ்லிம் நபர் |
| நாடகம் மேடையேறிய தினம் | :- | 19.09.1997 வெள்ளிக்கிழமை, மாலை 7.30 மணி. |
| நாடகம் மேடையேறிய இடம் | :- | எல்பின்ஸ்டன் அரங்கம் (மருதானை) |
| அனுசரணை | :- | (அரச நாடக விழாவுக்காக ) இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு. |
| ஒளி, ஒலியமைப்பு | :- | ஜே.ஜே.அசன் அலி |
| இசை | :- | "தேசிய பாடகர்" வி. முத்தழகு |
| மேடை நிர்வாகம் | :- | என். ராஜா (ராஜ் வீடியோ) |
| ஒப்பனை | :- | சனத் விஜேவர்த்தன |
| பிரதி பார்த்தல் | :- | செல்வம் பெர்ணாண்டோ<br>எம். அனுஷ்கா வினோதினி |
| தயாரிப்பு | :- | எஸ்.வி.ரஞ்சன் |

**கதை,வசனம், நாடகவாக்கம் : பேராதனை ஏ.ஏ.ஜுனைதீன்**

## "தீர்வு"

நம் நாட்டில் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு வெகுவாகப் பாழ்பட்டுப் போயுள்ள காலம் இது. ஒரு சில அரசியல்வாதிகளினது சுய, லாப நோக்கங்களும் சுய, தீர்க்க தரிசனமற்ற தன்மையினாலும் தான் நமது சுந்தர நாட்டின் அமைதியும் ஐக்கியமும் சுபீட்சமும் ஐஸ்வரியங்களும் பாழ்பட்டு போய்க்கொண்டிருக்கின்றன. இந் நிலையில் ஒரு சிலர் நிலைமையை இன்னும் மோசமடையச் செய்து சமாதானத்தை மக்களுக்கு தொடுவானமாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

தலைமைத்துவத்துக்கு தகுதி இல்லாதவர்கள் தலைவர்களாகிவிட்டதால் நிலைமை இன்னும் மோசமாகிவிட்டது.

இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை வளர்த்தெடுக்க வேறு ஒரு சாரார் வெகுவாக முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

இன்று உருப்பெரும் இலக்கிய புனைக் கதைகளும் நாடகம், திரை வடிவங்கள் கூட இரு இனத்திலும் "காதல் மணம்" நடைபெறுமானால் இன ஐக்கியம் வளரும் என்று அதீதமானக் கற்பனைக் கதைகளை முன் வைக்கிறார்கள்.

இக் கூற்று, உண்மையாக இருந்திருந்தால் ஏற்கனவே இவ்வாறு '**காதல் மணம்**' புரிந்தவர்கள் பல்லாயிரக்கணக்கில் முன்னரும் இருந்தார்கள். இப்போதும் இருக்கிறார்களே....! அப்படியானால் ஏன் இன ஐக்கியம் இன்னும் வளரவில்லை?

எனக்கு மேற்கண்ட இக் கருத்தில் என்றுமே உடன்பாடு இல்லை.

இன ஐக்கியம், சமாதானம், அன்பு, பாசம், நேசம், ஒற்றுமை சாதாரண மக்கள் மத்தியிலிருந்தே தான் உருப்பெறவேண்டும். உருவாக வேண்டும். சாதாரண மக்களால் தான் சமாதானத்தைக் கொண்டு வர முடியுமே ஒழிய. ஒரு நாளும் அரசியல்வாதிகளால் அது முடியாத காரியமே. விஞ்ஞான யுகத்தில் மனிதன் முன்னேறி விட்டால் மட்டும் போதாது. அவனது விஞ்ஞான வளர்ச்சிக்குரிய மூளை மட்டுமல்ல, இதயமும் விரிவடையவேண்டும், வளர வேண்டும், முன்னேற வேண்டும். இக் கருத்தினை வலியுறுத்துவதே இத் 'தீர்ப்பு' நாடகம்.

இந் நாடகம் மேடையேறிய போது பலரும் இந்நாடகத்தைப் பாராட்டினார்கள், வாழ்த்தினார்கள். புதுக்கோணமான கருத்து என்றார்கள்.

இவைகளில் இருந்து என் தீர்மானமும் 'தீர்வு' ம் சரியானதே என்று நான் உணர்ந்தேன்.

ம்... சரி... வாசகர்களே!

நீங்களும் இதனைப் படித்து; என் கருத்து சரி தானா என்று சிந்தித்துப் பாருங்களேன்...

## காட்சி : 1

***இடம் : வயல் வெளி.*** ***காலம் : இரவு.***

*(பூரண நிலவு வானத்தில் தெரிகிறது. கரு மேகத்துக்குள் நிலவு மறைய துப்பாக்கி வெடியோசசைகள் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கின்றன. குழப்பக்காரர்கள் அங்கும் இங்கும் ஓடும் ஒலி..)*

*(எங்கும் இருள் மங்கிய நிலா வெளிச்சம்.. துப்பாக்கி வெடியோசை தொடர்ந்து கேட்கிறது... குணரட்ன பயங்கர அலறலுடன் மேடையில் வந்து விழுகிறான்.)*

குண: ஆ.... ஐயோ... மகே புது அம்மே...(மேடையில் விழுந்து துடிக்கிறான்) .... அனே மட மொகுத்ம பெனென்னே... நே... மகே... எஸ். தெகம அந்த வெலா... எய் தெய்யனே மட மெஹெம உனே.... (ஆ... ஐயோ .... என் அம்மா...! எனக்கு ஒன்னுமே தெரிய இல்லையே... என் ரெண்டு கண்ணும் குருடாகிடிச்சி... கடவுளே ஏன் எனக்கு இப்படியாச்சு...?)(அழுகிறான்).

(இச் சமயம் நவரட்ணமும் அவன் எதிரே வந்து விழுந்து அலறுகிறான்)

நவ: ஆ..... ஐயோ... அம்மா... ஐயோ... ஐயோ...

குண: ஆ... தவத் மினிஹெக்.. மெதன வெடுனானேத...? ஊத் மெருனாத தன்னே.. நே... கோகடத் – கதாகரலா பலமு... ஏய்... ஏய்.. ஒதன கவுத..? (ஆ... இன்னொருத்தனும் வந்து விழுந்தானே. அவனும் செத்துட்டானோ தெரியாது. எதுக்கும் பேசி பார்ப்போம்.. ஏய்.. ஏய்... யார் அங்கே..?)

நவ : (வேதனையுடன்) எய்.. மம.! மட வெடி வெதுனா.. ஐயோ.. ஓயா ஒதன மொனவத கரன்னே..? (ஏன் நான் தான். எனக்கு சூடு பட்டிச்சு.. நீங்கள் அங்கே என்ன செய்கிறீர்..?)

குண: (வேதனையுடன்) மம அஹிங்சக மினிஹெக் ... மம கும்புறட கிஹிங் எனகொட.. கவுதோ.. மொகின்தோ கெஹுவா. ஐயோ.. தென் மகே எஸ் தெகம பெனென்னே நே... அனே புது அம்மே...! (நான் ஒரு அப்பாவி... நான் வயலுக்கு போய் வருகிற நேரம் யாரோ என்னை அடிச்சிட்டாங்க. எனக்கு கண் தெரியல்லையே)

நவ: மடத் ஏ டிகமய் உனே.. மம வெடட யனகொட மகே ககுலட வெடிபாரக் வெதுனா.. ஊய் .. அம்மா? (எனக்கும் அது தான் நடந்தது.... நான் வேலைக்கு போகும் போது எனது காலில் சூடு பட்டிச்சு).

குண: எய் தெய்யனே அஹிங்சக அபிட மெஹெம உனே! (ஏன் கடவுளே அப்பாவியான எங்களுக்கு இப்படி ஒரு நிலை)

நவ: அனே மன் தன்னே.. நே...! (எனக்குன்னா தெரியாது..)

குண: அனே மகே எஸ் தெகம பெனென்னே நே... தெய்யனே..! (என் இரண்டு கண்களும் தெரியவில்லையே... கடவுளே...!)

நவ: ஓயாகே எஸ் தெகென் லே எனவா... அநே மட ஓயா லங்கட எவித் பலன்டத் பெ...! மகே ககுலக் ஹொந்தடம துவால வெலா.. அநே அம்மா....! (உங்கள் கண்களிலிருந்து இரத்தம் வழிகிறது. எனக்கு உங்கள் அருகில் வர முடியல்லையே. என் கால்களில் நன்றாக காயம் ஏற்பட்டிருக்கிறது.)

குண : (கடும் வேதனையுடன்) கமக் நே.. அனே மட தென்னங் ஹரியட படகினி...! (பரவாயில்ல.. இப்போ எனக்கு ரொம்ப பசிக்குது..!)

நவ: மம.. வெடட யன கமன்.... ம் ... மகே லங்க கேம தியனவா.. தென்னத...? (நான் கொண்டு வந்த சாப்பாடு இருக்கு.. தரட்டுமா..?)

குண: அனே.. பின்சித்தவெய்... தெவிகெனெக் வகே.. ஓயா மெதனட எவித்தியென்னே... மம... ஈயே ரே காபு கமன்...! (உங்களுக்கு புண்ணியம் கெடைக்கட்டும் .... தெய்வத்தப் போல நீங்க இந்த எடத்துக்கு வந்திருக்கீங்க.. நான் நேற்று இரவு தான் கடைசியா சாப்பிட்டேன்...!)

(நவம் சாப்பாட்டு பார்சலை குணரட்ணவுக்கு அருகில் தள்ளி விடுகிறான். குணரட்ண அதை தடவி எடுத்து பிரித்து ஒரு கவளத்தை வாயில் போடுகிறான். அவன் முகம் சுருங்கி விடுகிறது)

குண: (கோபத்துடன்) மொகத்த.. பங் தோசேத...? (என்னடா தோசையா...?)

நவ: ஒவ்...! எய்...? (ஆமா..! ஏன்?)

குண: தோசே கன்னே தெமலுன் னேத...? (தோசை தின்கிறது தமிழர்கள் தானே...?)

நவ: மம...தெமலெக்... மகே நம.. நவரட்ணம்...! (நான் தமிழன். என் பெயர் நவரட்ணம்)

குண: (ஆவேசத்துடன் துப்பி)... தூ.. உப தெமலெக்...! (தூ.. நீ.. ஒரு தமிழனா...?)

நவ: ஒவ்.... மம.. தெமலெக் தமய்...! எய்..? (ஆமா.. நான் தமிழன் தான்..! ஏன்)

குண: மம சிங்களயெக்... மகே நம குணரட்ண... உம்பென் கனவட வடா ஹொந்தய் படகின்னே மெரென எக! (நான் சிங்களவன். என் பெயர் குணரட்ண. உன்னிடம் சாப்பிடுவதைவிட சாவதே மேல்)

நவ: தமுஸே... எய் எஹம கியன்னே...? படகின்னட சிங்கள, தெமல கியலா பேதயக் நே சகோதரயா...! (ஏன் நீங்க அப்படி சொல்றீங்க.. பசிக்கு சிங்களவன், தமிழன்னு பேதமில்லையே சகோதரனே..!)

குண: சகோதரயா..! தமுசே ஹொந்தட சிங்ஹல கதாகராட மம கொஹமத உம்பட சகோதரயெக் வென்னே..? (சகோதரன்! நீ நன்றாக சிங்களம் பேசுகிறாய் என்பதற்காக நான் உனக்கு எப்படி சகோதரனாக முடியும்?)

நவ: இதிஹாசய அமதககரலா கதாகரன்ன எபா..! விஜய ரஜு ஆவேத் இந்தியாவே இந்தலய்.... அபித் ஆவே இந்தியாவே இந்தலா.. பௌத்தாகம ஆவேத்

இந்தியாவென் தமய்...! உம்பய்.. மமய்.. எக அம்மாகே தருவோ... கல் யன்ட ... யன்ட ... தமய் அபி வென் உனே... இன் பஸ்ஸே சிங்ஹல.. தெமல கியலா அபி பேதவுனா.. தென் டிக காலயக இந்தலா தமய்... அபி.. ஹதுரோ உனே...! அபிட எத்தே சிங்ஹல, தெமல வெனச நெவெய் . எக அகுரக வெனச.... மம நவரட்ணம் "ம்" அகுர நெத்தங் "நவரட்ண". ஏக சிங்ஹல நமக்... ஓயா குணரட்ண.. "ம்" அகுர தெம்மானங் "குணரட்ணம்". ஏக தெமல நமக்...

(சரித்திரத்தை மறந்து பேசாதே..! விஜய மன்னன் வந்ததும் இந்தியாவில் இருந்து. நாங்கள் வந்ததும் இந்தியாவில் இருந்து... பௌத்த சமயம் வந்ததும் இந்தியாவில் இருந்து. நீயும் நானும் ஒரு தாய் பிள்ளைகள். காலம் போக போக தான் நாங்கள் வேறுபட்டோம். அதன் பின்னால் சிங்களவன், தமிழன்னு, பேதப்பட்டோம். இப்போ கொஞ்சகாலமா தான் நாங்க விரோதிகளானோம்.)

குண: (நீண்ட சிந்தனையின் பின்) ம்.... ஏகத் எத்த தமய்...! (அதுவும் உண்மை தான்)

நவ: மம சிங்ஹல மினிசுன் எக்க தமய் ஹெதுனே.. வெடுனே! அபி எகம அம்மாகே தருவன் வகே ஜீவத் உனே... நமுத்... கெஹெல்மல் யுத்தயக் நிஸா, அபி எகாட எகா.. நை, பொலங்கு உனா..! (நான் சிங்கள மக்களோடு தான் வளர்ந்தேன். நாங்கள் ஒரு தாய் மக்களாக வளர்ந்தோம். வாழ்ந்தோம். இந்த நாசமாய்போன யுத்தத்தால நாங்க ஒருத்தருக்கு ஒருத்தர் கீரியும் பாம்பும் ஆனோம்..!)

குண: (கவலையுடன்) மமத் தெமல மினுசுன் எக்க தமுசே வாகேம ஜீவத் உன மினிஹெக்.. மடத் தமுசே வாகே ஹொந்தட தெமல கதாகரன்ன புலுவன்..! (நானும் தமிழ் மக்களோடு உன்னப் போலவே வாழ்ந்தவன் தான். எனக்கும் உன்னைப் போல நல்லா தமிழ் பேச முடியும்..!)

நவ: (மிக மகிழ்ச்சியுடன்) அப்படியா... ரொம்ப சந்தோஷம்.. ரொம்ப சந்தோஷம்...! இந்த நாட்டுல.... உங்களப் போல மத்த சிங்கள மக்களுக்கும் தமிழ் பேச தெரிஞ்சிருந்தா... இன்னைக்கு இந்த நாட்டுல .. இது போல ஒரு யுத்தமே நடக்காது...!

குண: அது எப்படி..?

நவ: ஒருத்தர் பேசுறத ஒருத்தர் சந்தேகம் இல்லாம புரிஞ்சிக் கொள்வாங்க.. அதன் மூலமா ஒரு சமூகத்த.. இன்னொரு சமூகம் லேசா புரிஞ்சு கொண்டிருக்கும்... இந்த புரிந்துணர்வால சந்தேகங்களும்.. வீண் மனக் கசப்புகளும் வளர்ந்திருக்காது...!

குண: நவரட்ணம்.. அந்த நிதாஸ்... நிதாஸ்...

நவ: ஆ.. அது தான் சுதந்திரம்....

குண: ஆ.... சுதந்திரங் கெடைச்ச காலத்துல ஆட்சி கொண்டு போனவங்க குரோத மனப்பான்மையோட தானே ஆட்சி கொண்டு போனது...!

நவ: அவங்க ஆட்சிய சரியான முறையில பாகுபாடில்லாம நடத்தியிருந்தாங்கன்னா.. இன்னைக்கு நமக்குள்ள இந்தப் பிரிவினை... பிரச்சினை எதுவுமே வந்திருக்காது...!

குண: ஆரம்பத்துல நம்மட சிங்கள பொடியன்மார்கள் தகுனேல (தென்பகுதியில்).. ஆவுத ஏந்தினதால பல.. ஆயிரக்கணக்குல பலியானது தானே. இன்னைக்கு வருங்கால நல்ல பிரஜைகள் இல்லாம பொயிட்டாங். அது..மட்டுமா..? யுத்தங் சொல்லி ஒரே நாட்டுக்குள்ள... ஒருத்தன, ஒருத்தன் கொன்னுக்கிட்டிருக்கான் நவரட்ணங்!

நவ: அவங்கவங்க அரசியல் லாபத்துக்காக... இன...மத.... குரோதங்கள வளர்த்து விட்டாங்க... ஜாதி...மத... பேதங்கள் இல்லாம பண்ணுறதா சொல்லி... அந்தந்த ஜாதி மதக்காரனைவச்சே அந்த ஜாதிக்காரனையே அழிக்க வழி பண்ணிட்டாங்க...!

குண: சரியா சொன்னது நவரட்ணங்.. நீ சரியான சொன்னதிங்..

நவ: சுதந்திரம் கெடைச்ச பிறகு நாட்ட ஆண்டவங்க யாருமே சிறுபான்மையினரை மதிக்கல்ல... தமிழ் மக்களுக்கு வாக்குரிமை கொடுக்கிற விஷயத்துல நம்ம ஒருசில தமிழ் அரசியல்வாதிகள், அவங்களோட சுயலாபத்துக்காக ஆட்சியாளர்களோட சேர்ந்து மலையகத் தமிழன்.... யாழ்ப்பாணத் தமிழன்னு பிரிச்சி... தமிழன் பலத்தையும் சக்தியையும்... ஒற்றுமையையும் அப்பவே பலவீனமாக்கிட்டாங்க!

குண: ஒங்களுக்கு தெரியுமா..? அந்த காலத்துல இருந்த ... ஒரு சில யாபனே மந்திரிமாருகள்... யாபனையில ஒன்னையும் ... கொழும்புல வேற ஒன்னையும் சொல்லி.. பொடியங் மாருகள அவுசலா... கொளப்பி வுட்டது தானே.. அன்னைக்கு அவங்க செஞ்ச வேலை தான் இன்னக்கி அவங்களுக்கே எமன் ஆனது ...! ஐசே.

(குழப்பகாரர்களின் நடமாட்ட ஒலி கேட்கவே இருவரும் செத்தது போல் விழுந்து கிடக்கின்றனர். ஆளரவம் ஒய்ந்த பின்னர் மீண்டும் உரையாட ஆரம்பிக்கின்றனர்)

நவ: குணரட்ண... இங்க ஒரு வாழ மரத்த நாட்டினா.. குழைய வெட்டத்தான் திரும்ப மரத்தடிக்கு போவாங்க... ஆனா.. யாழ்ப்பாணத்துல வாழ மரத்த நாட்டி குழை போடுற வரைக்கும் தண்ணி ஊத்தணும்... பெரியஆழமான கிணத்துல இருந்து இறைச்சி தான் விவசாயம் செய்யணும்...!

குண: உண்ம தான்.... அந்த நாளையில ஹெட்டி வீதியில ஒரு பவுண் தங்கம் 750/= ரூவா.. ஒரு அந்தர் வெங்காயங் ஓல்ட் மோர் ஸ்ட்ரீட்ல அதுங் 750/= ரூவா.. .அந்த நாளையில யாப்பனே ஜனதாவ நல்லா சம்பாதிச்சதுதானே... அந்த நாளையில அந்த குசிகறும எமதி..... குசிகரும எமதி!

நவ: ஆ... அந்த விவசாய அமைச்சர்..!

குண: யாப்பனே ஜனதாவ அப்படி சம்பாதிக்க காரணம் அப்போ வெவசாய மந்திரி ஹெக்டர் கொப்பேக்கடுவ மாத்தியா தானே. அவருக்கு யாப்பனையில ஜனதாவ கொச்சிக்கா மாலே.... வெங்காய மாலே.. காசு மாலே எல்லாம் போட்டது தானே...

யாப்பானய கெடுக்க வேனும் சொல்லி ஒரு செல எமதி கொள்ளோங்... வெளிநாடுகள்ல இருந்து கொச்சிக்கா... வெங்காயம்.. கெழங்கு எறக்குமதி பண்ணி கொண்டு வந்து யாப்பனே வெவசாயத்த நாசமாக்கினது தானே...! கெட்ட மந்திரி மாரு ஐசே!

நவ: இல்லேன்னா.... யாழ்ப்பாணத்து லைப்ரரிக்கு நெருப்பு வைப்பாங்களா...? ம்... யாழ்ப்பாணத்து குடும்பத்துல அவங்கட புள்ளைய ஒரு டொக்டர்... இன்ஜினியரா படிக்க வைக்க பெத்தவங்க தெண்டிப்பாங்க... இதுக்காக வீட்டுல இருக்கிற நகை நட்டு... காணி பூமிகளையும்.. ஈடுவச்சோ.. வித்தோ செலவழிப்பாங்க... அப்படி படிச்ச பிறகு அந்த பிள்ளை யூனுவசிட்டிக்கு போக முடியாதவாறு புள்ளி வெட்டு...!

குண: கஷ்டப்பட்டு படிச்சவன் பாசாகியும்.. பலனில்லேன்னா என்னதான் செய்வான்...!

நவ: படிச்சும் பலனில்ல. படிச்சவனுக்கு தொழில் இல்ல... அதனாலத்தான் இளைஞர் சமுதாயம் கூடுதலாக விரக்தி அடைஞ்சி ... இன்னைக்கு இந்த நாட்டுல... இப்படி ஒரு நிலம உருவாகிடிச்சி...!

குண: எத்த தமய்....(உண்மைதான்) யாப்பனேயில இப்படி நடப்பாங் சொல்லி யாரும் எதிர்பார்க்க இல்லங்தானே.... நவரட்ணங்...!

நவ: ஏன்... தென் பகுதியில புரட்சி தலைதூக்கல்லையா..?. சிங்கள இளைஞர், யுவதிகளிடையே ஏற்பட்ட வாழ்க்கை விரக்தி தானே..?. அதுக்கும் காரணம்.

குண: சமூகம்... மொழி எதுவானாலும் தருண, தருனியங்கே (இளைஞர், யுவதிகளின்) மனோ நிலை ஒரே மாதிரியாகத்தானே இருப்பாங்.... அது தாங்... எங்கும் விரக்தி ... எதிலும் விரக்தி...!

நவ: அதனால எத்தனை ஆயிரம் இளைஞர், யுவதிகள் அழிஞ்சு போனாங்க.. எத்தனை கல்விமான்கள் பலியானாங்க...!

குண: சமஹர தேசபாலகயோ..(ஒரு சில அரசியல்வாதிகள்) நாடு... ஜாதி.. பாசாவ(பாஷை)ன்னு ஜாதிக கெக்குமையோட (தேச உணர்வோடு) பாக்கல்லியே.. வெளங்குதா!

நவ: இன்னும் ஒரு சில அரசியல்வாதிகள் தங்கள் ஆட்சியையும் பதவியையும் காப்பாத்திக்கொள்ள சிங்கள – தமிழ் மக்களிடையே பிரச்சினைகளை விதைச்சு..... உர மூ ட்டினதால.. தமிழ் – சிங்கள மக்கள் கீரியும் பாம்புமானாங்க...!

குண: அந்த அரசியல்வாதிங்களுக்கு தேசிய உணர்வு இருந்தா அவங்கட புள்ளைங்கள படிக்கிறதுக்கு வெளிநாடு அனுப்புறதா...?

நவ: சிங்களம் தேசிய மொழி .... தமிழ் சம மொழின்னு சொன்ன அரசியல்வாதிகள் அவங்க பிள்ளையள வெளிநாடுகளுக்கு இங்கிலீஸ் படிக்க அனுப்புறாங்க...!

குண: ஆனா... **1983** ஜூலை மாதிரி ஒரு பயங்கர காலம் இந்த நாட்டு சரித்திரத்திலேயே இல்ல தானே.. அய்சே...! ஜாதிகஆலய எண்டு சொல்லி கொண்டு

மங்கொல்லதானே அடிச்சது.. அடக்கு முறை தான் வன் செயலுக்கு அத்திவாரங்... ஒ.. அயிசே....!

நவ: இன்னைக்கு ஒவ்வொரு மனுசனும் .. மத்த இனத்தவன சந்தேகத்தோட தான் பார்க்கிறான்.. விரோதியாத்தான் நெனைக்கிறான்...!

குண: வர...வர.. மனுசனுக்கு கெட்ட எண்ணங் தான் வாராங். ஒவ் நவரட்ணங்...!

நவ: தலைவர்னு சொல்லிக் கொள்றவங்க தகுதியில்லாதவங்களா போயிட்டதால வந்த வெனை இது...!

குண: அது மட்டுங்யில்ல நவரட்ணங். சமார பத்தரகாரயோ துவேசத்துக்கு தூபம் போடராங் தானே....!

நவ: சரியா சொன்னாய் குணரட்ண... பத்திரிகைகள் மட்டுமில்ல.. தொலை தொடர்பு சாதனங்கள் கூட இன்னைக்கு இனவாதம் பேசுது...!

குண: அதென்ன தொலைதொடர்பு சாதனங் சொல்றது...?

நவ: இந்த டி.வி.... ரேடியோ.....

குண: இந்த மாதிரி நெலைமை மாறுற வரைக்கும் இந்த நாட்டுல சுதந்திரம், சுபீட்சம் ... சமாதானங் எதுவுமே கெடைக்கிறாங் இல்ல தானே....!

நவ: தலைவர்கள் மட்டும் சேர்ந்து கொண்டா சமாதானம் வராது... என்னைப்போல... உன்னப் போல... சாதாரண மனுசங்க. மனமொத்து ஐக்கியமாகினா மட்டும் தான் சமாதானம்.., சுபீட்சம் எல்லாம் உண்டாகும்...!

குண: ரேடியோவுல ஒற்றுமைப்பாடல் போடறான்.. சமாதான கீதய போடுறாங்... தேசிய பாட்டு போடுறான். இதெல்லாம் போட்டா மட்டும்... சமாதானம் கெடைக்கிறதா.. நவரட்ணங்..!

நவ: இதெல்லாம் வெறும் போலி நடப்புகள்.. உண்மையான ஐக்கியம் வளரனும்னா அது கீழ்மட்ட மக்களிடமிருந்து தான் உருவாகனும்....!

குண: அது ஏங் அப்புடி சொல்றாய்..?

நவ: இனக் கலவரம் கீழ் மட்டத்திலிருந்து தானே பிறக்குது குணரட்ண...!

குண: அந்த காலத்துல நாங்க யாப்பனே போய்.... நாக விகாரே.. கீரிமலே... நல்லூர் கோவில்..... மாவிட்ட புர எல்லாங் சுத்தி திரிஞ்சி வாற போது.. ஒடியல், பினாட்டு, ,, முருங்கா எல்லாங் கட்டி கொண்டு வருவாங் தானே.. ம்... அது அந்தக் காலங் ...ம்... இனி அப்புடி ஒரு காலங் வருவானா...?

நவ: நாங்க மட்டும்... என்னா? மாத்தரை... கதிர்காமம்... கண்டி தலதா மாளிகா.... அனுராதபுரம்ன்னு எல்லாம் போவோம்... இன்னிக்கு அந்த பகுதிக்கு போறத விட்டுட்டு நெனைச்சுக் கூட பார்க்க முடியாது...!

குண: அது மட்டுமா? இன்னைக்கு நாட்டுல மனுசயன்ட வெடிய (மனிதனைப் பார்க்க) ஐடியன்டிகார்ட் தான் லொகு வெலா தியென்னெ... (முக்கியமானதாக) இருக்கு சொந்த நாட்டுலயே நாங்க வெளிநாட்டுக்காரன் மாதிரி தானே இருக்கிறான்...!

நவ: இன்னிக்கு யாரோ டவுன்ல பஸ்ல ஒரு வெடி குண்ட வச்சுட்டாங்களாம்.. அது வெடிச்சதுல நாலு பேர் செத்துட்டாங்களாம்... 30, 40 பேருக்கு மேல காயமாம்.

குண: தெய்யனே... (இறைவனே) நான் அந்த பக்கமும் போகல்ல தானே... ஆனா.. நானும் தமுழன்னு சொல்லி எனக்கும் அடிச்சது தானே...!

நவ: டவுண்ல உள்ள கடைகள கொள்ளையடிச்சு நெருப்பும் வச்சிட்டாங்க...!

குண: ஜாதிகஆலயன்னு சொல்லி கொண்டு கொள்ளை அடிக்கிறான்... குரோதம் தீக்றான்.. சீ.... மேக ஜராவ வெடக் நேத! (ச்சீ இது வெட்கங் கெட்ட வேலை இல்லையா)

நவ: கொள்ளை அடிக்கிறவனுக்கு தமிழன் – சிங்களவன்னு பேதமில்லை...!

குண: இனக் கலவரத்துக்கு காரணங் இந்த மங்கொள்ளகாரன்ங்க தானே... நவரட்ணம்..!

நவ: இது போல தீராத பிரச்சினைகளாலத் தான் இந்த யுத்தமே நடக்குது... ஆனா... அதுல அகப்பட்டு அநியாயமா சாகிறது.. எதிலயுமே சம்பந்தமில்லாத அப்பாவி மக்கள் நாங்க தான்...!

குண: ம்.... நானும் ... நீயும் இதுக்கு என்ன செய்ய முடியும் நவரட்ணம் ...? எனக்குன்னா... இப்போ சரியான மாதிரி பசிக்கிறங்.. குடுத்த தோசெங் விசினது தானே...! எங்கனக்கி வீசினதோ தெரியாது...!

நவ: தயவு செஞ்சி.... உன் பசிக்காவது இப்போ என்னுடைய இந்த சாப்பாட்டை சாப்பிடு....

(வீசிய சாப்பாட்டை எடுத்து குணரட்ண அருகே வைக்கிறான். குணரட்ண பார்சலை விரித்து சாப்பிட்டவாறே..)

குண: ம்... நவரட்ணங்.... மே... தமுசெத் கேல்லக் கனவாகோ.. (இந்தா... நீயும் ஒரு துண்டு சாப்பிடேன் நவரட்ணம்) ம்... என்ன சொன்னாலும் தோசே எண்டா நல்லா சாப்பாடு தான்.

நவ: (சாப்பிட்டவாறே...) அதுதான்... கோவத்துல வீசுறது.. அப்புறம் தேடுறது...! குணரட்ண ... இந்த இனம்.. மதம்.. குலம் கோத்திரம் அந்தஸ்து எல்லாம் வாயிக்கும்.. வயித்துக்கும் தெரியாது.. ம்.. பசி வந்திட பத்தும் பறக்கும்ன்னு சொல்லி இருக்காங்க...!

குண: அதுவும் ... சரி தாங்... நான் கேள்விப்பட்டது பத்தும் பறப்பான் சொல்லி...

நவ: (அருகிலுள்ள தண்ணீர் போத்தலை எடுத்து தண்ணீர் அருந்திவிட்டு) ம்... இந்தா தண்ணி... குடி...(குணரட்ணவிடம் கொடுக்க அவனும் குடிக்கிறான்)

குணரட்ண... ஒன் தோள்ல உள்ள துண்டைக் கொஞ்சம் தாப்பா... வாயெ துடைச்சுக்கிட்டு தர்ரேன்..!

குண: ச்சீ... அது வேணாங்...! அதுல என் ரெத்தம் இருக்கு...!

நவ: இனி என்னடா! ஒன் ரெத்தம் வேற...? என் ரெத்தம் வேறயா...? இது புரியாமத்தானேடா.. நாங்க ஒருத்தனை, ஒருத்தன் கொன்னுக்கிட்டு இருக்கோம்... ம்... துண்டை தா..

(குணரட்ண துண்டைக் கொடுக்க, அதனால் தன் வாயையும் முகத்தையும் துடைத்துக் கொண்டு, மீண்டும் அவனிடம் நீட்டியவடியே)

நவ: எனக்குன்னா... இப்போ இந்த நாடு வேணாம்ன்னு போயிருக்கு....

குண: அப்போ... நீ இந்த நாட்ட விட்டு வேற நாடு போறதா..!

நவ: வேறென்ன செய்யிறது!

குண: இதுங் மடையன் பேசுற பேச்சிங் தானே.. . நவம் ! இது நீ பொறந்த நாடு... இங்கே தாங் நீ வாழனும்... சாவணும். இந்த நாடு உனக்கும் சொந்தம்.. எனக்கும் சொந்தம்!

நவ: குணம்....நீ சொல்றதும் சரி தான்!

குண: எப்படி இருந்த நாடு.... எப்படியாச்சு...?

(குழப்பக்காரர்கள் கூட்டம் ஆயுதங்களோடு அங்குமிங்கும் ஓடுகின்றனர்)

நவ: (பதற்றமுடன்) குணரட்ண... வா! வா!! நாங்க அந்த மரத்துக்கு பின்னால போவோம்... இல்லேன்னா.. குழப்பக்காரங்க யார் வந்தாலும் நாம ரெண்டு பேர்ல ஒருத்தருக்கு சாவு நிச்சயம்!

***(இருவரும் பதற்றமுடன்தட்டுத்தடுமாறி மரத்துக்கு பின்னால் வருகின்றனர்)***

சிங்களவங்களும்.. தமிழர்களும் ஒரு அம்மா பெத்த புள்ள போல வாழ்ந்தோம் தானே... ஆனா.. இன்னைக்கி ஒருத்தன ஒருத்தன் கொடாகென மெறனவா...! (வெட்டி கிட்டு சாகிறான்)

நவம்: சுதந்திரம் கெடைச்சிச்சி.. சுதந்திரம் கெடைச்சிச்சின்னு சொல்றாங்க.. ஆனா.. இன்னைக்கு ஒவ்வொருத்தனும் ஒவ்வொரு நிமிஷமும் பயந்து, பயந்து செத்துக்கிட்டே இருக்கான்!

குண: ம்...இனி என்னைக்குத் தான் இந்த பிரச்சினை தீருவான்?

நவ: கடவுளுக்கு தான் தெரியும்...

குண: ஆனா.. சாகிறதும்.. காயப்படுறதும் அப்பாவி நாங்க தானே... . நவரட்ணங்!

ம்... இப்போ.. எத்தன மணி இருப்பாங்...?

நவ: ம்... விடியப் போவுது..!

**(புல்லினங்களின் ஒலி கேட்கிறது)**

குண: ஆ.. விடிய போறதா...! நாங்க எப்பிடி இந்த எடத்துல இருந்து போறது? எனக்குங் கண் தெரியல்ல!

நவ: எனக்கு ரெண்டு கால்லேயும் காயம்... என்னால நடக்க முடியல்ல...! (காலைத் தூக்கிப் பார்த்து) ஐயோ அம்மா!

குண: ம்... என்னா செய்றது...ம்...? எப்படி சரி வீட்டுக்கு போக வேணும்...எங்க வீட்டுலயும் தேடுவாங்க தானே...

நவ: (கொஞ்சம் சிந்தித்து விட்டு) இப்படி செஞ்சா என்ன....?

குண: எப்புடி....?

நவ: உனக்கும் கண் தெரியாது.. எனக்கும் நடக்க முடியாது... என்ன உன் கழுத்துல தூக்கிக்கோ. நான் வழி காட்டுறேன்.. அப்போ நாம ரெண்டு பேருமே இந்த எடத்த விட்டு போயிடலாம்...!

குண: அதுன்னா..... நல்ல அதாஸ் (யோசனை) தான்.

(குணரட்ண, நவரட்ணத்தைத் தூக்க முயலுகிறான். அவனால் முடியவில்லை)

குண: நவரட்ணங்! எனக்கு உன்ன தூக்க முடியாது தானே... எப்புடி சரி நீ என் கழுத்துக்கு ஏறி கொண்டா.. நாங் கொண்டு போறது...!

நவ: ம்... என்ன செய்வோம் (சிந்திக்கிறான். தூரப்பார்த்து விட்டு) ஆ.. அந்தா.. தூரத்துல யாரோ ரெண்டு பேர் வர்ராங்க...

குண: (பயத்துடன்) யார்? யாரு.. கொலைகாரங்களோ தெரியாது..!

நவ: இல்ல...! இல்ல! ஒரு பாதரும்.. தொப்பி போட்ட ஒரு ஆளும்..

குண: தொப்பி போட்ட ஆள் சொன்னதுங் பொலிஸ்காரங்களா...?

நவ: இல்ல....! இல்ல ஒரு முஸ்லிம் ஆள் வாரார்..

குண: ஆ! எஹமத (அப்படியா)?

**(பாதரும், முஸ்லிம் மனிதரும் நவரட்ணம் அருகில் வருகின்றனர். முஸ்லிம் மனிதரின் கையில் ஒரு அரிக்கன் விளக்கு காணப்படுகிறது.)**

முஸ்: (வியப்புடன்) இந்த எடத்துல நீங்க ரெண்டு பேரும் என்ன செய்றீங்க?

நவ: நீங்க எங்கிருந்து வர்ரீங்க...?

முஸ்: நான் சுபஹு தொழுதுட்டு பள்ளியில இருந்து வர்ரேன். வழியில இந்த பாதர சந்திச்சேன். ஊருக்கு புதுசு. பஸ் ஸ்டேன்டுக்கு போக வழி தெரியாதுன்னாரு. அதனால, நானும் அவருக்கு துணையா போயிட்டு வரப்போறேன்...!

நவ: என் பெயர் நவரட்ணம் .. இவர் குணரட்ண. நேத்து அந்தியில வன் செயல்ல ரெண்டு பேரும் மாட்டிக்கிட்டோம்.. இவருக்கு கண் தெரியல்ல.. எனக்கு நடக்க முடியல்ல.. இவர் கழுத்துல என்ன தூக்கி வச்சுட்டா.. நான் வழி காட்ட, இவர் என்ன தூக்கிக் கொண்டே போயிடுவார்...!

பாதர்: நாங்க தூக்கி விடுவோம்..இது சின்ன விசயம்.

முஸ்: சரி... புடிங்க... ம்..ம்... தூக்குங்க (தூக்க முடியவில்லை) ம்.. கொஞ்சம் இருங்க.. (என்றவர் கொஞ்ச தூரம் சென்று ஒரு மரத்தின் தடியை ஒடித்து வந்து கொடுக்கிறார்.) ம்... இத ஊண்டிக்கிட்டு அவர புடிச்சுக்கிட்டு நடங்க...!

(தடியை ஊன்றியபடி குணரட்ண நடக்க, அவன் தோளில் கையைப் போட்டவாறே தத்தித் தத்தி நவரட்ணம் நடந்து போகிறான். இதைப் பார்த்து காதர்...)

காதர்: (பரவசமுடன்) என்னைக்குமே ஒன்னு சேர்க்க முடியாதுன்னு சொன்ன ரெண்டு சமூகங்கள் எப்படி இணைஞ்சு போகுதுன்னு பாருங்க பாதர்...!

பாதர்: (வியப்புடன்) உண்மை தான்! உண்மை தான்!!

காதர்: இந்த நாட்டை பொறுத்தவரைக்கும் எந்தவொரு சமூகத்தாலயும் தனிச்சு வாழ முடியாது பாதர்.. ஒரு சமூகத்துக்கு மற்ற சமூகம் ஊன்றுகோலா, உறுதுணையா இருந்தா மட்டும் தான் நாம் இந்த நாட்டுல ஐக்கியமா, சமாதானமா, ஒற்றுமையா வாழ முடியும்ங்கிறதுக்கு இந்தச் சம்பவம் நல்ல உதாரணம் பாதர்!

பாதர்: (அமைதியாக, உணர்ச்சிபொங்க) நானும் அதைத் தான் நினைச்சுக் கொண்டிருக்கிறேன்.

காதர்: பாதர்! நீங்க இப்படியே போங்க... பஸ் ஸ்டான்ட் வரும்... நான் இப்போ அவங்களுக்கு துணையா போகப்போறேன்.

(காதர், குணரட்ண, நவரட்ணம் இருவரையும் நோக்கி விரைகிறார்)

(பாதர் சிந்திக்கிறார்.. பின் இரண்டடி முன்னால் வந்து மண்டபத்தை நோக்கி பேசுகிறார்)

பாதர்: (அமைதியாக, உறுதியாக) அவர் சொன்னது உண்மை தான்! ஒன்னுசேர முடியாத தமிழ், சிங்கள இனங்கள் இரண்டும் தன் தவறுகளை உணர்ந்து, விட்டுக்கொடுத்து ஒன்றுசேர்ந்து சமாதானப் பாதையில போறாங்க... அதோட இன்னொரு இனமான முஸ்லிம் இனமும் அவங்களோட போய்ச் சேர்ந்துட்டுது. இனி நான் மட்டும் தனிச்சு நின்னு என்ன செய்ய முடியும்?

வெறுமனே உதட்டால சமாதானம், சுபீட்சம், இறைமை, ஒற்றுமைன்னு பேசிக் கொண்டிருக்காம, இதயத்தால மட்டும் பேசுவோம்! அப்போ தான் உண்மையான சமாதானம் சுபீட்சம், இறைமை, இந்த நாட்டுல பிறக்கும். நானும் அந்த மூனு இனங்களோடயும் போய்ச் சேரப் போறேன். உங்களுக்கும் உண்மையான சமாதானம், சுபீட்சம், இறைமை, ஒற்றுமை தேவையா இருந்தா.. எங்களைப் பின் தொடர்ந்து வாங்க... ம்

இந்த சந்தர்ப்பத்தை விட்டா உங்களுக்கு இனி என்னைக்குமே இதுபோல ஒரு சந்தர்ப்பம் வரவே, வராது......

இதோ நான் போகிறேன். நீங்களும் எங்களைப் பின் தொடர்ந்து வாருங்கள்...

**(பாதர் அவர்களைத் தொடர்ந்து போகிறார். மேடையில் நால்வரும் அந்தந்த விதமே சிலை (still) ஆக நிற்க, திரை மிகமிக மெதுவாக மூட ஆரம்பிக்க, மேடை விளக்குகள் யாவும் மெதுவாக அணைகின்றன).**

**முற்றும்.**

அரச தமிழ் நாடக விழாவுக்காக

**நிழல் நாடக மன்றம்** தயாரித்த

## "தீர்ப்பு"

குடும்பத்தில் மூத்தவன் கணேஸ். ராஜம் கணேஸின் தங்கை. சிவா தம்பி. பெற்றோரை இழந்தவர்கள். பங்கிடப்படாத காணியில் வீடுகள் கட்டி வாழ்ந்து வரும் இவர்களின் மத்தியில் சூறாவளியாக வந்து சேருகிறது சிவா கொண்டு வந்து நடும் வாழைக் கன்று. வாழைக் கன்று வளர வளர பகைமையும் இவர்களிடையே வளருகிறது. நிலையில்லாத பொருள், மண் ஆசையால் சிவாவும் ராஜத்தின் கணவன் சரவணனும் பலியாகின்றனர். பிறக்கும் போது எதையுமே கொண்டு வராத மனிதன் இறக்கும் போதும் எதையும் கொண்டு போவதில்லை என்ற இறைவனின் தீர்ப்பை உறுதிப்படுத்துவதாக அமைகிறது "**தீர்ப்பு**"

### அரங்கில்

| **நடித்த நடிகர்கள்:** | | **ஏற்ற பாத்திரங்கள்:** |
|---|---|---|
| எஸ். சத்தியன் | :- | சரவணன் |
| கே. மோகன் குமார் | :- | கணேஷன் |
| பெனி கிளறிஸ்றன் | :- | சிவா |
| எம்.கே.சுதாகர் | :- | செல்வரத்தினம் |
| பிரியா ஜெயந்தி | :- | ராஜம் |
| கமலஸ்ரீ மோகன் குமார் | :- | தனலட்சுமி |
| ஜீ.மில்டன் பெர்னாண்டோ | :- | அருள் |
| கே.ஈஸ்வரலிங்கம் | :- | மோகன் |
| ரீ.செல்வகுமார் | :- | சேகர் |

| | | |
|---|---|---|
| தயாரிப்பு | :- | எஸ்.வி. ரஞ்சன் |
| ஒளியமைப்பு | :- | ஜே.ஜே. ஹசன் அலி |
| இசையமைப்பு | :- | "தேசிய பாடகர்"வி. முத்தழகு |
| பிரதி வாசிப்பு | :- | ஏ. ஜெயகௌரி<br>எம். அனுஷ்கா வினோதினி |
| மேடை நிர்வாகம் | :- | எஸ்.சரவணா |
| தயாரிப்பு அனுசரணை | :- | அரச நாடக விழாவுக்காக<br>இந்து சமயம், கலாசார<br>அலுவல்கள் திணைக்களம். |
| மண்டப நிர்வாகம் | :- | எஸ்.சரவணன். |

**கதை, வசனம்,நாடகவாக்கம் - பேராதனை ஏ.எ. ஜுனைதீன்**

## காட்சி : 1.

***இடம் : கணேசன் வீடு.*** ***காலம் : காலை.***

*(இரு மருங்கிலும் எதிரெதிரே அமைந்திருக்கும் இரு வீடுகள். இடப்புறம் கணேசனின் வீடு. வலப்புறம் கணேஸின் தங்கை ராஜத்தின் வீடு*

*கணேஸின் மனைவி தனலட்சுமி. ராஜத்தின் கணவன் சரவணன். கணேஸினதும் ராஜத்தினதும் தம்பி சிவா, மாணவன். இரு சாராருக்கும் பெற்றோர் மூலமாகக் கிடைத்த பிரிக்கப்படாத காணி. பெற்றவர்கள் இன்று உயிரோடு இல்லை. கணேஸின் வீட்டின் பின்னால் கிணறு அமைந்துள்ளது. அது எல்லோரும் பாவிக்கும் பொதுக் கிணறு.*

*கணேஸ் குளித்து விட்டு வருகிறான். பல் துலக்கியவாறே தன் வீட்டில் இருந்து வெளிப்படுகிறான் சரவணன்.)*

கணே: குட்மோர்னிங் மச்சான்!

சர: யெஸ் வெரிகுட் மோனிங் மச்சான்!

கணே: என்ன...... இன்னைக்கு எழும்ப லேட்?

சர: இன்னைக்கு சண்டே தானே. கடை திறக்குறது மில்ல... சோம்பலா இருந்திச்சி. கொஞ்சம் கூடுதலா தூங்கிட்டேன்.

கணே: இன்னைக்கு வெளியில ஏதும் புறோகிராம் இருக்கா..?

சர: இல்ல மச்சான்.. இன்னைக்கு புல்டே வீட்டுல தான்.. ம்.. என்ன விஷயம்?

கணே: உங்க எல்லோருக்கும் இன்னைக்கு "லஞ்ச்" நம்ம வீட்டுல வைக்கலாம்ன்னு நெனைக்கிறேன்.

சர: சொரி கணேஷ் மச்சான்!

கணே: (ஆச்சரியமாக) ஏன்...

சர: லாஸ்ட் சன்டேயும் லஞ்ச், டின்னர் எல்லாமே எங்களுக்கு உங்க வீட்டுல தானே... இன்னைக்கு லஞ்சும். டின்னரும் உங்களுக்கு; எங்க வீட்டுல.

கணே: என்ன மச்சான் கடன் கழிக்கப் பாக்கிறீங்களா...?

சர: கடன் கழிக்கிறதா...? இதென்ன கத மச்சான் ! நான் கட்டி இருக்கிறதே உங்க கூடப் பொறந்த ஒரே தங்கச்சியெ. ஆனாலும் நாங்க எல்லாருமே ஒரு தாய் பெத்த பிள்ளைகளைப் போல அன்பாகவும், ஒற்றுமையாகவும் வாழ்ந்து வர்ரோம். நாம ஒருத்தருக்கு ஒருத்தர் வச்சிருக்கிற பாசத்தக் காட்ட வேற வழியில்லாமத்தானே இப்படி சாப்பாடு அது இதுன்னு ஒருத்தருக்கு ஒருத்தர் வற்புறுத்திக் கொள்றோம்.

கணே: நான் சும்மா வாய்க்கு வந்தத சொல்லிட்டேன்!

சர: மச்சான், வார்த்தை வாய் உள்ளே இருந்து வெளியே வருகிற வரைக்கும் தான் நாம வார்த்தைக்கு எஜமான், வார்த்தை வெளியே வந்துட்டா, அப்புறம் வார்த்தை நமக்கு எஜமான்.

கணே: சரியா சொன்னீங்க மச்சான்! வாயை விட்டு வெளியே வந்த வார்த்தை எஜமானாக இருந்தா கூட பரவாயில்லை. சில நேரம் எமனாக் கூட மாறின சம்பவங்கள் எக்கச் சக்கம்?

சரவ: (எச்சரிக்கை செய்வது போல் விரலைக் காட்டி) அதனால.. கவனம்.

கணே: (கிண்டலாக பணிந்து) மன்னிக்கனும். ஓகே, ஓகே. யார் வீட்டுல யார் சாப்பிட்டா என்னா? நம்ம வீடுகள் என்ன காதவழி தூரத்திலேயா இருக்கு.. ஒரு வீட்டு வாசல்ல இருந்து ரெண்டு குதிகுதிச்சா மறு வீட்டு வாசல்ல!

(இச்சமயம் சரவணனின் மனைவி தேநீர் கொண்டு வந்து அவள் அண்ணன் கணேஸுக்கு கொடுக்கிறாள்)

சர: ராஜம்.. ஒன் அண்ணனுக்கு மட்டுமா ரீ... அப்போ எனக்கு?

ராஜ: அண்ணன் முகம் கழுவிட்டு குளிச்சிட்டு வர்ராரு! நீங்க பல்ல வெளக்கி இன்னும் மொகமே கழுவ இல்லையே!

(சரவணன் வேகமாக, கிண்டலாக பல் விளக்குகிறான்)

ராஜ: இந்த பல் விளக்கிற விஷயமும் ஒன்னுக்கு ரெண்டுக்கு போறத போல மறைவா செய்ய வேண்டிய ஒரு காரியம் தான். ஆனா இது ரொம்பபேருக்கு புரியவே மாட்டேன்கிறது.

சர: (அருகில் வந்து) என்ன... எனக்குமா?...

ராஜ: அப்பா... ம். ஹு.. அங்காலத் திரும்புங்க.. வாய்ல கையில வடிய வடிய மத்தவங்க பாக்கிறதுக்காகவே பல் விளக்கிறது. ஆம்புள பொம்புளையலுக்கு எல்லாம் இப்போ ஒரு பெஷனாகிடிச்சு. ச்சீ! இதுவும் ஒரு கௌரவமாக்கும்!

(இச் சமயம் கையில் தும்புத் தடியுடன் தன் வீட்டு வாசலைக் கூட்ட வருகிறாள் கணேஸின் மனைவி தனம்)

தன: பரவாயில்லை ராஜம்! ரீ யெக் கொண்டு வந்து கொடுங்க! சரவணன் அண்ணன் வாயெக் கழுவாமலேயேக் குடிக்கட்டும். அப்போ தான் நல்லா, இலவசமா விட்டமின் கெடைக்கும்!

ராஜ: ஏன் இப்போ இருக்கிற சைஸ் பத்தாதா?

தன: (தன் கணவனைக் காட்டி)இந்த சைஸ்ஸ பார்க்கவா, அந்தசைஸ் பெரிசு....

சர: மதினியும் மதினியும் சேர்த்துட்டாங்க... என் மானம், அவமானப் படுறதுக்கு முந்தி... இந்தா நான் பறக்குறேன்...(கிணற்றடி பக்கம் விரைந்து மறைகிறான்)

(கணேஸ் தேநீர் குடித்து வெற்றுக் கோப்பையை தங்கை ராஜத்திடம் கொடுக்கிறான். பின் தன் வீட்டு வாசலை நோக்கி நடக்கிறான். ராஜம் இடை மறித்து...)

ராஜ: அண்ணா!

கணே: (அன்புடன்) என்ன தங்கச்சி!

ராஜ: செல்வரத்னம் சித்தப்பாவோட மகன் சுரேஷோட கல்யாணத்துக்கு சொல்லி இருக்கிறாங்க...!

கணே: அடிசக்கை! இங்க வந்தாரா..?

ராஜ: இல்ல. கடைக்கு போய் இவருக்கு சொல்லி கார்ட் கொடுத்திருக்காங்க! உங்களுக்கு எங்கவச்சாவது சொன்னாரா?

கணே: செல்வரத்தினம் சித்தப்பாவுக்கு தான் என்னெக் கண்டாலே பிடிக்காதே!

ராஜ: உங்களுக்கு சொல்ல இல்லேன்னா.. நாங்களும் போகல்ல அண்ணா!

கணே: இல்ல... ராஜம்...... உங்களுக்கு சொன்னா.. நீங்க போங்க....

ராஜ: அண்ணா! உன்னை ஒதுக்கிறவங்களோட குடும்ப விஷயத்துக்கு, உன்னை புறக்கணிச்சுட்டு நான் மட்டும் போனா, நானும், நீயும் கூடப் பொறந்தவங்கன்னு சொல்லிக் கொள்றதுல என்னண்ணா அர்த்தம்?

கணே: தங்கச்சி, உன்னை இன்வைட் பண்ணுகிறவங்க எல்லாமே என்னையும் இன்வைட் பண்ணனும்ன்னு நெனைக்கிறதுல அர்த்தம் இல்லையேம்மா....!

ராஜ: அண்ணா... வெளி ஆட்களாக இருந்தா நீங்க சொல்றதுலேயும் நியாயம் இருக்கு! செல்வரத்தினம் சித்தப்பா நம்ம அப்பாவோட கூட பொறந்த ஒரே தம்பி, பழைய கோப தாபங்களுக்காக நம்ம ரெண்டு பேர்ல ஒருத்தர ஒதுக்கிட்டு, ஒருத்தர சேர்க்க விரும்புறது நியாயம் இல்லயே அண்ணா!

கணே: தங்கச்சி. ஒன்ன நெனச்சு.. நான் ரொம்பப் பெருமைப்படுறேன்ம்மா. எங்களுக்கு இப்போ அம்மாவும் இல்ல! அப்பாவும் இல்ல. நம்ம குடும்பத்துல நானும், நீயும் தம்பி சிவாவும் மட்டும் தானே இருக்கிறோம். இதுல நாங்க ஒருத்தர மதிக்காம ஒருத்தர் நடந்து கிட்டா ஊர் நம்மலப் பார்த்து சிரிக்கும்.

ராஜ: அதனாலத் தானண்ணா உங்கள மதிக்காதவங்க வீட்டு வாசல நானும் மிதிக்க விரும்பல்லேன்னு சொல்றேன்!

கணே: (பாசம் பொங்க) என்னைக்குமே நமக்குள்ள இந்த ஒற்றுமை இருக்கனும்ன்னு நான் கடவுளை வேண்டிக்கிறேன் – ம்மா! (கை கூப்புகிறான்)

(இச் சமயம் கிணற்றடியிலிருந்து சரவணன் வந்து கொண்டே)

சர: வெரிகுட்... வீட்டுக்குள்ள ஒற்றுமை இருந்தாத்தான் ஊர்ல ஒற்றுமை வரும். ஊர்ல வந்தா.. நாட்டுல வரும், நாட்டுல வந்தா உலகத்துலேயே வரும்...

(தனம் கைத்தட்டி சரவணனின் வார்த்தையை வரவேற்கிறாள்)

ராஜ: (பொய்க் கோபத்துடன்)என்ன ரெண்டு பேரும் எங்களக் கிண்டலாப் பண்ணுகிறீங்க...?

தன: ( கிண்டலாக).... சே... அப்படி செய்வோமா... நாங்க! அண்ணன், தங்கச்சியோட உடன் பிறந்த பாசத்தை பெருமனதுடன் வரவேற்கிறோம். அவ்வளவு தான்.

சரவ: ஓஹோ... ஒற்றுமை, சமாதானத்தைப் பத்தி இப்போ நீங்களும் பேச ஆரம்பிச்சுட்டீங்களா...?

ராஜ: ஏன் நாங்க அதப்பத்தி பேசக் கூடாதோ!

தன: அது ஏன்..!

சரவ: இன்னைக்கு இந்த ஒற்றுமை, சமாதானம், தீர்வுன்னு பேசிக்கிட்டுதான் எத்தனையோ பேர் வயிறு வளர்த்துக் கிட்டிருக்காங்க!

ராஜ: நாங்க அப்படி வயிறு வளர்க்காம இருக்கத்தான் திட்டம்!

சர: வெரி குட்... அப்ப சொல்லுங்க என்ன விஷயம்...?

ராஜ: நம்ம சித்தப்பா உங்ககிட்ட அவர் மகனோட கல்யாணத்துக்கு சொல்லிட்டு போனதச் சொன்னேன்.... அண்ணனுக்கு சொல்ல இல்லையாம்.

சர: வெடிங் நாளைக்குத்தானே... இன்னைக்கு வந்து சொல்லலாம் இல்லையா?

கணே: நான் நெனைக்கல மச்சான்!

சரவ: (வியப்புடன்) காரணம்?

கணே: அப்பா செத்துப் போன கொஞ்ச நாள்ல இந்த காணியில அவருக்கும் பங்கு இருக்குன்னு சொன்னார்.

சர: இருந்தா கொடுத்திட வேண்டியது தானே!

கணே: அதெப்படி மச்சான்! இது அப்பாவுக்கு அவரோட அப்பா தனிப்பட்ட முறையில எழுதிக் கொடுத்தக் காணி.. இதுல அவருக்கு எப்படியுமே பங்கில்ல! இது எனக்கும் தங்கச்சிக்கும் தம்பி சிவாவுக்கும் மட்டுமே சொந்தம்.. அதோட மச்சான் என் உயிர் உள்ளவரைக்கும் நான் இந்தக் காணிய நம்ம மூணு பேருக்குள்ள சரி பிரிக்க மாட்டேன்.. இந்த காணியில எல்லா இடமும் எங்க எல்லோருக்கமே சொந்தம்.

சரவ: கேட்க ரொம்ப சந்தோஷமா இருக்கு கணேஸ் மச்சான்! ம்... அப்புறம் நீங்க சித்தப்பாவுக்கு என்ன பதில் சொன்னீங்க?

கணே: காணியில பங்கு கொண்டு போக, ஒரு கூடையையும், மண்வெட்டியும் எடுத்துட்டு வாங்க வெட்டித் தர்ரேன்! கொண்டு போங்கன்னு சொன்னேன்.

சரவ: அப்போ, அவர் உங்களுக்கு நிச்சயமா கல்யாணத்துக்கு சொல்லப்போறதில்ல. ம்.. ராஜம் இப்போ ஒன் முடிவு என்ன..?

தன: (பலமாக கைத்தட்டி) இது அவங்களோட குடும்ப விஷயம்... இதற்கான முடிவை அண்ணனும், தங்கச்சியும் மட்டுமே எடுக்கணும். வெளியார் தலையீட்டை நான் வன்மையாக கண்டிக்கிறேன்!

சர: நான். சமாதானப் படையாக நிக்கலாம் இல்லையா?

தன: இருக்கலாம் சரவணன் அண்ணா! முந்தி வந்த சமாதானப் படைக்கு தண்ணி கேட்ட செய்தி உங்களுக்கு தெரியும் தானே.... நீங்க தனிமனுசன்.. என்ன பாடு படப்போறீங்களோ...!

(சரவணன், டக்கென்று டவலால் முகத்தை மூடிக்கொண்டு வீட்டினுள் ஓடுகிறான். எல்லோரும் சிரிக்கின்றனர்)

(இச் சமயம் சிவா, சரவணனின் வீட்டினுள்ளே இருந்து தூக்கக் கலக்கத்துடன் கண்களைக் கசக்கிக் கொண்டே வருகிறான்)

கணே: (கிண்டலாக) வாங்க... தொர... புள்ள... படிக்கிற... லட்சணம்... அடுத்த வருஷம் ஓ.எல். எக்ஸாம். நல்லா படுங்க...

சிவா: நேத்து ரி.வி. பாத்துட்டு படுக்க லேட்டாகிடிச்சு... அண்ணா...

கணே: தங்கச்சி! நீ தான் இவன கெடுக்கிற...

ராஜ: நான் என்னண்ணா ... செய்வேன்!

கணே: என் வீட்டுல இவன தங்கவைன்னு எத்தனை தடவச் சொல்லி இருக்கிறேன். அப்போ நான் இவன கண்டிச்சு கவனிப்பேன் தானே!

சிவ: அண்ணி... அண்ணா இல்லாத நேரம் நான் படிக்கிறேன் தானே..

தன: ஆமாங்க.... நீங்க இல்லாத நேரம் சிவா விழுந்து விழுந்து படிப்பான்.

கணே: எது பேப்பரா!

தன: இல்லைங்க சினிமா புத்தகங்களும், நாவல்களும்

சிவா: ஐயோ என்.. கட்டுப் பணமும் போச்சே....!

கணே: தங்கச்சி! இவனைக் கொஞ்சம் கண்டிச்சு வை! கவனமா படிக்கச் சொல்லு.

ராஜ: எனக்கு சொல்லாதே அண்ணா! அத அவருக்குச் சொல்லு! அவர் தான் இவனைக் கெடுக்கிறார். நேத்து ஒரு டெக்கும் வாங்கி கொடுத்துட்டார்.

சிவா: (கெஞ்சலாக) இனி என்னக்கா, நான் தானே இந்த ரெண்டு குடும்பத்துக்கும் பச்சைக் கொழந்தை.

ராஜ: வாடா.... என் ராசா... ஒன்ன என் கால்ல போட்டு ஆட்டுறேன்.

கணே:. அதோட... அந்த லாம்பெண்ண போத்தலுக்கு ஒரு சூப்பிய போட்டு வாயில வை.

சிவா: ரொம்ப நல்ல யோசன அண்ணே...

கணே: அறைஞ்சேண்டா... பார். (கையை ஓங்குகிறான்)

தன: சரி. சரி பேசாம இருங்க. அவன் இன்னும் சின்னவன் தானே...!

சிவா: தெங்கியூ.. அண்ணி..!

கணே: மச்சானும் மதினியும் என்னைத்தையாவது கொண்டாடுங்க... நான் வர்ரேன்! (கணேஸ் உள்ளே போகிறான்)

தன: சிவா! மார்க்கட்டுக்கு போயிட்டு வர்றியா...?

சிவா: (சல்யூட் செய்து) எதுக்கு மை லோட்...?

ராஜ: உனக்கு பகலைக்கு சாப்பாடு போட. கோழி வாங்கடா.

சிவா: வரவேற்கக் கூடிய விஷயம்.. எனக்கு டுவன்டி பைவ் ருபீஸ் கமிஷன் வேணும்...!

தன: பாரு ராஜம் 25 ரூவா கேட்கிறான்.

சிவா: சரி வேணாம்.. விடுங்க.. குடலை எடுத்து வயித்துக்குள்ள பச்சத் தண்ணியெ நிரப்பி விக்கிற கோழியா பார்த்து கொண்டு வர்ரேன். ஒன்னுக்கு 50 ரூவா கூடப் போவும்...எனக்கென்ன...?

தன: (கெஞ்சலாக)டேய்.. டேய்.. நீ கேட்ட படியே 25 ரூவா தர்ரேன்... தண்ணி நெறைக்காத கோழியா பார்த்து கொண்டாடா....!

சிவா: ஆ.... அப்படி வாங்க வழிக்கு....!

ராஜ: அண்ணி வீட்டுல மாசி இருக்கா...?

தன: இருக்கு... வேணுமா...?

ராஜ: ஒரு துண்டு பிறகு தாங்க... டேய் சிவா.... மூஞ்சக் கழுவிட்டு வா. நீ.. குடிக்க...!

சிவா: நான் குடிச்சிட்டேன் அக்கா...!

ராஜ: (ஆச்சரியமாக) என்ன... வாய் கழுவாமயா...?

சிவா: ஆமாக்கா.. அது தானே இப்போ பெசன்...!

தன: பரவாயில்லயே... . இவன் ஒரு படி முன்னேறிட்டான்!

சிவா: அதெல்லாம் ஒன்னுமில்ல அண்ணி. நான் அக்காவுக்கு தண்ணி மிச்சம் புடிக்கிறேன்.

ராஜ: ஆமா..... இன்னும் கொஞ்ச காலம் போனா.. லெட்டுக்கும் போயிட்டு...

சிவா: ஆ.. அதெ... வெள்ளக்காரங்க எப்பவோ ஆரம்பிச்சுட்டான்.... இப்போ இன்டர்னெட் காலம்.. நாம வேகமா முன்னேறனும்.. சும்மா இதெல்லாத்துக்கும் டைம் வேஸ்ட் பண்ண முடியாதில்லையா...

ராஜ: கடைசியில இன்டர்னெட்டும் நாறப் போவுதுடா...!

சிவா: சரி... சரி.. நான் ஒபீசுக்கு போய் சைன் பண்ணிட்டு வர்ரேன்...!(வீட்டின் பின்பக்கம் ஓடுகிறான்).

கணே: (குரல்) சிவா... சிவா!

சிவா: என்னண்ணா....? (திரும்பி வந்து நெளிகிறான்)

கணே: (வாசலுக்கு வந்து) என்னடா நெளியிற ... ச்சீ... ம்...நீ... போ... நான் அண்ணிக்கிட்ட டியுசன் காச கொடுக்குறேன். வாங்கிக்க...!

(சிவா மலசல கூடப் பக்கம் ஓடுகிறான். தனமும், ராஜமும் சிரித்துக் கொண்டே வீட்டினுள் செல்கின்றனர்.)

**(மிக மெதுவாக மேடை விளக்குகள் அணைந்து, மீண்டும் எரிகின்றன)**

## காட்சி : 2.

*இடம்: கணேசன் வீடு.* *காலம்: பகல்.*

*(தனம் தன் வீட்டு முற்றத்தைக் கூட்டிய பின் ராஜம் வீட்டு முற்றத்தை புதிய கூட்டுமாறால் கூட்டுகிறாள். வீட்டினுள்ளே இருந்து வரும் ராஜம் கூட்டுமாறைப் பிடித்துக் கொண்டு....)*

ராஜ: இங்க கொண்டாங்க அண்ணி...நான் கூட்டுறேன்!

தன: தேவல்ல... விடு..ராஜம்! நான் கூட்டுறேன்...! (கூட்டுமாறை மறுகையில் மாற்றிப் பிடிக்கிறாள்)

ராஜ: தாங்களேன்... (விளக்குமாறை பறிக்கிறாள்)

தன: விடு...விடு! நான் கூட்டி முடிஞ்சிது...! (கூட்டுமாறை வீட்டின் பின் பக்கம் வைத்து விட்டு வருகிறாள்...)

தன: என் தலையைக் கொஞ்சம் பார் ராஜம்!

ராஜ: அப்போ.. வாங்க பார்க்குறேன்.. (பேன் பார்க்க ஆரம்பிக்கிறாள்)
(இச்சமயம் சிவா வாழைக் கன்றொன்றை கொண்டு வருகிறான்.)

தன: என்ன சிவா.. அது...?

சிவா: அண்ணி... இந்த உலகத்துல கண் தெரியாதவங்க அதிகமா... கண் தெரியிறவங்க அதிகமா...?

தன: பெரிய கேள்வி கேட்டுடான்டி என் ஆசை மச்சான்...!

சிவா: சரி... பதிலைச் சொல்லுங்களேன், என் அருமை அண்ணி...!

தன: ஏன் கண் தெரியிறவங்க தான்....!

சிவா: அப்போ இது என்னா...?

தன: இது தெரியாதா...? இது வாழைக்கன்று....!

சிவா: அப்போ... இத தெரிஞ்சும் ரெண்டு கண்ணாலயும் பார்த்துட்டு, அது என்ன சிவான்னு கேட்டீங்களே.. அப்படியா இருந்தா...!

ராஜ: போடா... போ... பேச்சுக்கு யாரும் அப்படித் தான் கேட்பாங்க..!

சிவா: சரியா சொன்னீங்க அக்கா.. சோப் போட்டு குளிச்சுகிட்டிருக்கிறவன பார்த்து குளிக்கிறீங்களான்னு கேட்பாங்க.. சோப்பு போட்டவன் குளிக்காம தூங்கிக் கொண்டா இருப்பான்? ஆஸ்பத்திரி கியுவுல காய்ச்சல்ல நடுங்கி கிட்டிருக்கிறவனப் பார்த்து மருந்து எடுக்க வந்தீங்களான்னு கேட்பான்... அவன் மருந்து எடுக்காம ஆஸ்பத்திரிக்கு பிக்னிக்கா வந்திருப்பான்...? ம்... ரொம்ப பேருக்கு இப்போ ஊனக் கண்ணும் தெரிகிறதில்ல. காலம் ரொம்பக் கெட்டுப் போச்சி...!

ராஜ: (கிண்டலாக) ஐயா... பெரியவரே....!

சிவா: (சுற்றும் முற்றும் பார்த்து விட்டு) யாரக் கூப்பிட்டீங்க....?

ராஜ: உன்னைத் தான்டா கழுதை!

சிவா: மனுசன் கிட்ட இல்லாத பொறுமை உள்ள உயர்ந்த சாதி அது.. என்னை உதாரணம் காட்டி அதைக் கேவலப் படுத்தாதீங்க...!

தன: அதுன்னா உண்மைத்தான்.. மனுசங்கக் கிட்ட.. பொறுமை இல்லாததாலத்தானே உலகம் இவ்வளவு சீரழிஞ்சு போச்சி.....!

சிவா: அண்ணி.. உலகத்தப் பத்தி கவலப்பட்டு உங்க பொன்னான மனச புண்ணாக்கி கொள்ளாதீங்க... அதுக்குத் தான் ஓட்டுக்குடுத்து பெரியமனுசங்கள நாங்க பார்ளிமென்டுக்கு அனுப்பி இருக்கிறோம். அவங்க அத கவனிச்சுக் கொள்வாங்க....!

தன: சரி... சரி... இந்த வாழக்கன்று எங்கால...!

சிவா: இது நல்ல சாதின்னு எனக்கொரு பிரண்ட் தந்தான்!

ராஜ: நாட்டி வை... உனக்கொருத்தி வந்தா.. உதவும்!

சிவா: எப்போ அக்கா அவ வருவா...!

ராஜ: டேய்.. எழும்பினேன்னா முகம் நொறுங்கும்...! முளைச்சு மூனு எல விரியல்ல அதுக்குள்ள தொரைக்கு பொண்ணு கேட்குதோ....!

தன: வெளக்குமாத்துக்கு பட்டு குஞ்சன் கட்டின மாதிரி இருக்கிற இவருக்கு பொண்ணு கேட்குது...!

ராஜ: நல்ல எடமா பார்த்து நாட்டி வை......!

சிவா: என்னா.. ? எனக்கு நல்ல எடமா பார்த்து கட்டி வைக்கப் போறீங்களா...?

ராஜ: தும்புகட்ட.... இப்போ எழும்பினேன்னா...!

தன: பேசாம அத நல்ல எடமா பார்த்து நாட்டு சிவா...!

(சிவா வீட்டின் பின்புறம் செல்கிறான். பின் மண்வெட்டியை தோளில் வைத்த வாறே..பாடிக் கொண்டு வருகிறான்.)

சிவா: கந்தன் நல்ல கமக்காரன்.. காய்கறி தோட்டம் செய்திடுவான்... கனி மரங்கள் நாட்டிடுவான். காதலாக வளர்த்திடுவான்...!

ராஜ: ம்.. இது வளர்ந்து குலை போடுகிற நேரம் நாங்க யார்... யார் .. இருப்போமோ...!

தன: ஏன் ராஜம் அப்படி சொல்ற...?

ராஜ: இல்ல அண்ணி, இது வளர்ந்து குழை போட ரெண்டு வருஷத்துக்கு மேலாகுமே... அதுக்குள்ளே கடவுள் நியதி எப்படியோ....!

சிவா: அக்கா.. நமக்கு முந்தி வாழ்ந்தவங்க இப்படி யோசிச்சு இருந்தாங்கன்னா..... இன்னைக்கு ஒரு புல் பூண்டு கூட இந்த மண்ணுல நமக்குண்ணு இருக்காது....!

தனம்: ஆமா.... ராஜம்.... அவன் சொல்கிறதுலேயும் உண்மை இருக்கு....ம்... கொஞ்சம் வேலை இருக்கு... நான் போறேன்...(கூந்தலை சரிசெய்து கொண்டு எழுகிறாள்

ராஜ: ம்.. சிவா நாட்டிட்டு வா.... (ராஜமும் தன்வீட்டின் உள்ளே போகிறாள்)

தன: சிவா.. வா.. ரீ.. போட்டு தாரேன்...

(மேடை விளக்குகள் வாழைக்கன்றுக்கு Focus Light ஆக மாறுகிறது)

(வாழைக்கன்றை நட குழி வெட்டுகிறான். சிவா கன்றை நாட்டுகிறான். நீர் கொண்டுவந்து ஊற்றுகிறான். மண் கூட்டுகிறான். வாழைக் கன்றைச் சுற்றி காலால் மண்ணை மிதிக்கிறான். வியர்வையை துடைத்தெறிகிறான்).

**(Focus Light - Colour Wheel Lights) ஆக மாறி பின்னர் மேடை விளக்குகள் யாவும் அணைகின்றன.**

## காட்சி : 3

***இடம்: கணேசன் வீடு.*** ***காலம்: பகல்.***

*(வாழை மரத்துக்கு Focus Light விழுகிறது. மெல்லிய இசை ஒலிக்கிறது.)*
*(வாழைக் கன்று மரமாக வளர்ந்திருக்கிறது. கணேசன் அதைச் சுற்றி துப்பரவு செய்கிறான். வியர்வையை துடைத்தெறிகிறான். சற்று நேரத்துக்குப் பின்னர் கிணற்றுப் பக்கம் இருந்து தனம் நீர் கொண்டு வந்து ஊற்றுகிறாள். இச் சமயம் சிவா வீட்டினுள்ளே இருந்து வருகிறான்.*
*(Focus Light - Genaral Lights ஆக மாறுகிறது)*

கணே: என்ன சிவா... ஏ.எல். எப்ளிகேஷன் போட்டாச்சா...?

சிவா: ஆமாண்ணா...!

கணே: ஆமா.... இருக்கிற நாள் எல்லாம் இருந்து கடைசி நாளான இன்னைக்கு ஏ.எல். எப்ளிகேஷன் போஸ்ட் பண்ணிட்டு வர்ரான். எத்தனை தடவ நான் உனக்கு நேரத்தோட எப்ளிகேஷன போடு; போடுன்னு சொன்னேன்...!

தன: சரி... சரி... இனி சத்தம் போடாம இருங்களேன்... இன்னைக்கு பன்னிரண்டு மணிக்கு மொதல்ல போஸ்ட் பண்ணினா போதும் தானே....!

கணே: நீ யெல்லாம் இப்படி பேசிப் பேசியே அவனைக் கெடுத்து வச்சிருக்கீங்க....! (கிணற்றுப் பக்கம் போகிறான்)

தன: உங்கண்ணா உரம் கொண்டு வந்து போட்டார்...!

சிவா: உரம் போட்டதாலேயா அவரும் இவ்வளவு ஓரமா இருக்கிறாரு...!

தன: நான் தண்ணி ஊத்தினேன்.....!

சிவா: என்ன அண்ணி... வாழ மரத்துக்கு எதுக்கண்ணி தண்ணி..?

தன: அரிசி கழுவின... உடுப்பு கழுவின தண்ணியத் தான் ஊத்துறேன்...!

சிவா: பரவாயில்ல அண்ணி... மரத்துக்கு தானே ஊத்துறீங்க அது... நல்லா இனிக்கிற பழம் தரும்.. ஆனா..மனுசனுக்கு நன்மை செய்தாலும் அதிகமா நமக்கு கெட்ட பேர் தான் வரும்.. இந்த வாழ மரத்துக்கு எந்த தண்ணிய ஊத்தினாலும் அது இனிக்கும் கனியத்தான் அண்ணி தரும்...!

தன: அதுனா உண்மை தான் சிவா...மனுசன் எந்த நேரம் எதைச் செய்வானுன்னு யாருக்குமே தெரியாது தான்....!

சிவா: இப்போ பாருங்கண்ணி! வேம்பு கசக்கும்... மிளகாய் உரைக்கும்.. கரும்பு இனிக்கும்.. புளி புளிக்கும்... இது என்னைக்குமே... எப்போதுமே மாறாது.. ஆனா, ஒரு மனுசன் எப்படிப்பட்டவன்னு யாராலயும் உறுதியா தீர்மானிக்க முடியாது!

தன: மிருகத்த விடவும் மோசமா சில மனுசன்கள் நடந்து கொள்கிறாங்க...!

சிவா: சரியா சொன்னீங்க அண்ணி... . ஆனா.. மிருகத்த கூட மூனு வகைகளா பிரிக்க முடியும் அண்ணி....!

ராஜ: (வீட்டினுள்ளிருந்து வந்து கொண்டே) என்ன இவன் "சூலோஜி லெக்சர்" அடிக்கிறானா...?

சிவா: அக்கா... மனுசன், மிருகங்களை விட மோசம்ன்னு அண்ணி ஒரு கதைக்கு சொன்னாங்க. மனுசன எப்படியும் இனம் காண முடியாது.. ஆனா, விலங்குகளக் கூட மூனு வகைகளாகப் பிரிக்கலாம்ன்னு நான் சொன்னேன்...!

ராஜ: அதென்னடா... அந்த மூனு வகைப் பிரிவு...?

சிவா: அக்கா.. மத்தவங்களுக்கு உதவி செஞ்சு... கடைசியில தங்களையே தியாகம் பண்ணுற ஒரு வர்க்கம். அதாவது நம்பர் வன் இந்த ஆடு... மாடு... இருக்கே... இது பாலையும் கொடுத்து தங்களோட இறைச்சியையும் மனுசனுக்கு உணவாகக் கொடுக்குது...

ராஜ: நம்பர் டூ....?

சிவா: சுயநலமே உருவான ஒரு கூட்டம்... அதாவது இந்தப் புலி..

தன: டேய்... டேய்.. மெதுவா பேசுடா..!.

சிவா: சிங்கம், புலி அதுக தான்... இதுக தனக்காக மட்டுமே இன்னொன்ன அடிச்சுக் கொன்னுத் தின்னும்.. இதுகளால மத்தவங்களுக்கு தீமையே தவிர.. வேறெந்த நன்மைகளுமில்ல!

தன: நம்பர் த் ரீ!

சிவா: மூனாவதாக தனக்கும் பிரயோசனமில்லாம.. மத்தவங்களுக்கும் பிரயோசனமில்லாம வாழ்கிற ஒரு சாதி அது வந்து இந்த பாம்பு, தேள், பூராண்

வர்க்கம் .. இதுகள் தனக்கு எதுவித லாபம் இல்லன்னாலும் இதுகளோட செயல்களால மனுசனுக்குத் தான் தீமை! ஆனா.. அக்கா, மனுசன மட்டு மூவாயிரமா பிரிச்சாலும் அவன் என்ன வர்க்கம்ன்னே கண்டுபிடிச்சுட முடியாது.....!

ராஜ: கடவுளோட படைப்புள மனுசன் தான்டா உயர்வான படைப்பு....,!

சிவா: ஆனா.. சில மனுசன்ங்க செய்யிற செயல்கள் கடவுளையே அவமானப்படுத்துறதா இருக்கு... இல்லையா அண்ணி...!

தன: படைச்சவன குத்தம் சொல்ல நமக்கு அதிகாரம் இல்ல சிவா...!

சிவா: படைச்சவன குறை சொல்லல்ல அண்ணி... படைக்கப்பட்டவனோட செயல்களைத் தான் நான் குறை சொல்றேன்!

தன: மகாத்மா காந்தியப் போல எல்லா மனிதர்களும் மகான்களாக முடியாது...!

சிவா: ஆனா... அந்த மகாத்மா காந்தியெச் சுட்டுக் கொன்ன நாதுராம் கோட்சேயும் மனுசன் தானே.....!

(கணேசன் வீட்டின் பின் புறத்திலிருந்து வருகிறான்.)

கணே: (அன்புடன்) நான் சாப்பிடப் போறேன்... தங்கச்சி நீ... சாப்பிட்டியாம்மா.....!

ராஜ: இன்னும் இல்லண்ணா.....!

கணே: தம்பி சிவா.. நீ...?

சிவா: இன்னும் இல்லண்ணா...!

கணே: ம்.. அப்போ ரெண்டு பேரும் வாங்க சாப்பிடுவோம்! தங்கச்சி தீச்ச கறியொன்னுமில்லையா...?

ராஜ: இருக்கண்ணே... நீங்க ரெடியாகுங்க... நான் எடுத்துட்டு வர்ரேன்...! (தன் வீட்டுக்குள் போகிறாள்)

(கணேஸ் தன் வீட்டினுள் செல்ல, தனமும் பின் தொடர்கிறாள். சிவா வாழை மரத்தைப் பார்க்கிறான். இச் சமயம் சரவணன் அங்கே வருகிறான். சிவா சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, சரவணனிடம் கெஞ்சலாக)

சிவா: அத்தான்..! அத்தான்...!

சர: என்னடா மச்சான் ஒரேயடியா கூழைக்கும்பிடு போடுற...?

சிவா: அது தான்... அது.. (சிவா தனக்கொரு மோட்டார் சைக்கிள் வாங்கித் தரும்படி சைகை மூலம் கேட்கிறான். இச்சமயம் ராஜம் கறியுடன் வெளியே வருகிறாள்.)

ராஜ: என்னடா.. இது.. புள்ள இல்லாத வீட்டுல கெழவன் துள்ளி விளையாடின மாதிரி. ... மச்சானும்.. மச்சானும் துள்ளி விளையாடுறீங்க...:

சர: சிவா மோட்டார் சைக்கிள் வாங்கி கேட்கிறான்...!

(ராஜத்தின் கையிலிருக்கும் கறியை தனம் வந்து வாங்கிக் கொண்டு வீட்டினுள் செல்கிறாள்.)

ராஜ: ஆமா... ரீ.வி., டெக்கெல்லாம் முடிஞ்சி... இப்போ மோட்டார் சைக்கிள் கேட்குதோ.... மச்சானுக்கு வாங்கி கொடுக்க வேண்டியது தானே....!

சர: வாங்கிக் கொடுக்கலாம் தான்.. ஆனா, நான் சிவா மேல வச்சிருக்கிற பாசம் அதைத் தடுக்குது...!

சிவா: (சினுங்கிக் கொண்டே) பார் அக்கா..... எப்படி கதெ.. பாசம் இருக்காம்.. ஆனா அது தடுக்குதாம்.. அது பாசம் இல்லக்கா.. பாசாங்கு..! (பொய்யாக அழுகிறான்)

ராஜ: அது தானே... இதுவும் ஒரு நல்ல ஜோக் தான்....!

சர: இது ஜோக் இல்ல மெடம் ... சீரியஸ்.. மோட்டார் சைக்கிள் பாவிக்கிறவனுக்கு ஆயுசு கம்மி... இல்லேன்னா கால்.. கை டெமேஜ்.. அதனாலத் தான் வாங்கி கொடுக்க மனசு வரல்ல...!

சிவா: நான் கவனமா ஓட்டுவேன் அத்தான்...!

சர: அது எனக்கு தெரியும்.... ஆனா... நீ எவ்வளவு கவனமா ஓட்டினாலும் மத்தவன் வந்து ஒன் மேல மோதுவான்.. அப்போ நீ என்ன செய்வ...?

ராஜ: அப்போ இவன் மட்டும் ஓட்டட்டுமே.. மத்தவங்கள ஓட்ட வேணாம்ன்னு சட்டம் போடுங்க....!

சர: அதிகாரத்துல இருக்கிறவன் இந்த நாட்டுல என்னென்னமோ செய்கிறான் – எனக்கு அதிகாரம் இருந்தா என் மச்சானுக்காக நான் இதச் செஞ்சா என்னா....?

ராஜ: என்னத்தையாவது செய்யுங்க..? (உள்ளே போகிறாள்)

சிவா: அத்தான் பிளீஸ்...!

சர: சிவா... என் ஆச அரும மச்சானே! நீ எதையும் வாங்கிக் கேளு.. ஆனா.. மோட்டார் சைக்கிள் மட்டும் வாங்கி கேட்காதே...! இந்தா ஆளை வுடு...

(சரவணன் வீட்டினுள் ஓடி விடுகிறான்)

கணே: (வாசலுக்கு வந்து) சிவா.. அங்க என்னடா செஞ்சிகிட்டிருக்கிற? வா சாப்பிட.....!

சர: (கணேசனை எட்டிப் பார்த்து) மச்சான் எனக்கும் தானே....!

கணே: வந்து கொட்டிக்க...!

**(மேடை விளக்குகள் மிக மெதுவாக அணைகின்றன)**

## காட்சி : 4.

**இடம் : கணேசன் வீடு.** **காலம் : பகல்.**

Focus Light *வாழை மரத்துக்கு விழுந்து, பின்னர்* Genaral Lights *ஆக மாறுகிறது*

*(வாழை மரம் உயரமாக வளர்ந்திருக்கிறது. ராஜம் வந்து குருத்து இலையின் பாதியை வெட்டுகிறாள். இச் சமயம் தனம் அவள் வீட்டினுள்ளிருந்து வாழைக்கு தண்ணீர் ஊற்ற அங்கே வருகிறாள்)*

தன: என்ன ராஜம் குருத்தையா வெட்டின...? (மரத்துக்கு தண்ணீரை ஊற்றுகிறாள்)

ராஜ: சிவா டியூசனுக்கு போகப் போறான்.. அவனுக்கு சோறு கட்டத் தான் வெட்டினேன்...!

தன: (சற்றுக் கண்டிப்புடன்) வளர்ர மரத்துல எல வெட்டாதீங்கன்னு நான் உங்களுக்கு எத்தன தடவ சொல்லி இருக்கேன்!

ராஜ: சரி... இன்னொரு குருத்து வரும் தானே...!

தன: நேத்து சரவணன் அண்ணன் பெரிய எலைகள வெட்டி போட்டாரு.. இன்னைக்கு நீங்க குருத்தெலைய வெட்டுறீங்க.. இப்படி மாறி, மாறி எல வெட்டினா.. மரம் வளர்ர மாதிரி தான்...!

ராஜ: (புன்னகையுடன்) நான் ஒரு துண்டு தானே அண்ணி வெட்டினேன்..!

தன: என்ன.. இருந்தாலும் வளர்ர மரத்துல இப்பிடி எல வெட்டினா மரம் நறுங்கி இல்லையா போவும்...!

ராஜ: சிவா.. சோறு கட்ட கொண்டு வந்த லஞ்ச்சீட் முடிஞ்சிடிச்சி.. அது தான் இதுல ஒரு துண்டு வெட்டினேன்...!

தன: (கோபமுடன்) சிவாவுக்கு இல்ல.. யாருக்கா இருந்தாலும் சரி வளர்ர கண்டுல எல வெட்டினது தப்பு..!

ராஜ: இது சிவா நாட்டின மரம் தானே.. அதுல அவனுக்கு சோறு கட்ட ஒரு துண்டு எல வெட்டினா என்ன அண்ணி தப்பு...?

தன: ஓஹோ... நீங்க அந்த வழியில வர்றீங்களா..?

ராஜ: சரி அண்ணி கதையெ விடுங்க.. சிவா டியூசனுக்கு போக நேரமாகுது... நான் வர்ரேன்...!

தன: இந்தா பாரு ராஜம்! தவற செஞ்சிட்டு இனிமே உரிமை கொண்டாட வராதே...!

ராஜ: என்ன அண்ணி.. ரொம்ப நாளைக்கு பிறகு இன்னைக்கு சூடா இருக்கிறீங்க...?

தன: நான் சூடாவும் இல்ல... கூலாவும் இல்ல.. அது சிவா நாட்டின மரம்ன்னு உரிமை பேசுறீங்களே... அதுதான் எனக்கு பத்திக்கிட்டு வருது...!

ராஜ: சும்மா ஒரு பேச்சுக்கு சொன்னேன்... தவறா பட்டிருந்தா மன்னிச்சுடுங்க......!

தன: மன்னிப்பு கேட்கிறதே இன்னொரு தவறுக்கு அத்திவாரம் தானே...!

ராஜ: (புன்னகையுடன்) சரி.. அதையும் மன்னிக்கிறது...!

தன: இன்னைக்கு வாழ மரம் ஒன்னுக்கு இப்படியா இருந்தா.. எதிர்காலத்துல நாம புள்ள குட்டிகளாகி வீடுவாசலும் பெருகிட்டா.. அதுவே தீராத பெரும் பிரச்சினையாகிவிடும்....!

ராஜ: (அமைதியாக) பெரிய பிரச்சினை வர இப்ப இங்க எதுவுமே நடக்க இல்லையே.. எல வெட்டினது தப்புன்னா மன்னிப்பு கேட்டுட்டேனே... இதுக்கு போய்.. பிரச்சினை.. அது இதுன்னுகிட்டு.....!

தன: சொத்து பத்துன்னு வர்ர நேரம் பிரச்சினைகளும் பின்னாடியே வரும்...!

ராஜ: இப்போ என்னை... என்னாத்தான் செய்யச் சொல்றீங்க....?

தன: இது பிரிக்கப்படாத காணி... அதனால இதுல வாழ மரம் இல்ல.. ஒரு பூ மரத்த நாட்டினாலும் பிரச்சினை தான்.. அதனால இந்தக் காணியை இப்பவே அளந்து பிரிச்சுக்கிட்டா நல்லது...!

ராஜ: அப்படியொன்னும் செய்யத் தேவையில்ல...!

தன: இல்ல ராஜம்... நாங்க இந்த வீட்டக் கொஞ்சம் பெரிசா கட்ட நெனைச்சு இருக்குறோம்...!

ராஜ: காணியெ பிரிக்கிறதுக்கு அண்ணா விரும்ப மாட்டார்..

தன: நான் சொன்னா செய்வார்...!

ராஜ: அப்படியா இருந்தா நான் தடுக்க முடியாது.. ஆனா, காணிய பிரிக்கிறதா இருந்தா மூனாப் பிரிக்கணும்...!

(இச்சமயம் வெளியிலிருந்து கணேஸ் வருகிறான்..)

கணே: எத மூனாப் பிரிக்கனும்னு சொல்றாய் ராஜம்...!

ராஜ: காணியெ அண்ணி பிரிக்கனும்னு சொல்றா...!

கணே: (ஆச்சரியமாக) என்ன காணியவா..! எந்தக் காணிய...?

தன: வேறெந்தக் காணியெ... இந்தக் காணியத் தான்...!

கணே: அது ஏன்....?

தன: இந்த வாழ மரத்துல எல வெட்டாதீங்கன்னு எத்தனையோ தடவ நா ராஜத்துக்கு சொல்லி இருக்கேன். ஆனா.. அவ கொஞ்சமும் கேக்குறா இல்ல...!

கணே: (வாழை மரத்தைப் பார்த்துவிட்டு) அட ஆமா... இதுல யாரு இவ்வளவு எல வெட்டி இருக்கிறது...!

தன: புருஷன் பக்க எலைகள வெட்டுறாரு.. பொண்டாட்டி குருத்த வெட்டுறா...!

ராஜ: அண்ணா.. அவரு மரத்த துப்பரவு செய்கிறதுக்காகத் தான் பக்க எலைகள வெட்டினாரு.. நான் சிவாவுக்கு டியூசனுக்கு சோறு கட்டத்தான் குருத்தெலையில ஒரு துண்டு வெட்டினேன்... அதுக்கு...

தன: நீங்களே சொல்லுங்க.. இவ்வளவு காலமும் இந்த மரத்துல எல வெட்டியா சோறு கட்டினீங்க...?

ராஜ: எது எப்படி போனாலும்.... அது சிவா நாட்டின மரம் தானே.. அவனுக்கு சோறு கட்ட அதுல ஒரு துண்டு எல வெட்டினா என்ன. அண்ணா..?

தன: இன்னைக்கு இப்பிடின்னா.. நாளைக்கு எப்பிடி.. நீங்க வீட்ட பெரிசா கட்டனும்ன்னு சொல்லி கிட்டிருக்கீங்க... பிரிக்காத காணியில வீட்டக் கட்டினா எப்பிடி.. நாங்க நடுத்தெருவுல தான் நிற்க வரும்...!

ராஜ: ஏன் அண்ணி இப்படியெல்லாம் பேசுறீங்க... (அழுகிறாள்)

கணே: (கோபமாக) இப்போ நீ ஏன் அழுவுற ...? நீ தானே காணிய மூனா பிரிக்கனும்னு சொல்லிகிட்டிருந்த....!

ராஜ: பிரிக்கிறதா இருந்தா சிவாவுக்கும் சேர்த்து மூனா பிரிக்கனும்னு தான் நான் சொன்னேன்...!

கணே: (ஆத்திரத்துடன்)அது எனக்குத் தெரியும்... நீ இதுல பெரிய ஆளாகப் பார்க்காதே.. சரியா...!

தன: தென்ன மரத்துல தேள் கொட்டினா – பனை மரத்துல நெறி கட்டிச்சாம்...!

ராஜ: அதென்ன அண்ணி குத்து கதெ...?

தன: பேச.. பேச.. இது தீராது... ம்.... வாங்க நாங்க உள்ள போவோம்...!

(ராஜத்தின் கையிலுள்ள இலைதுண்டை கணேஸ் கடும் ஆத்திரமுடன் பறித்து கீழே போட்டு மிதிக்கிறான். ராஜம் திகைத்துநிற்கிறாள்)

**(மேடை விளக்குகள் மெதுவாக அணைகின்றன.)**

## காட்சி : 5.

**இடம்: கணேசன் வீடு.** **காலம்: பகல்.**

(Focus Light *வாழை மரத்துக்கு விழுகிறது. சொற்ப நேரத்தில் அது* General Lights *ஆக மாறுகிறது. வாழை மரம் குலை ஈன்றிருக்கிறது. ராஜம்; தனத்தின் வீட்டு வாசலுக்கு எதிரே வருகிறாள்)*

ராஜ: அண்ணி.... ! அண்ணி..!

தன: ..........................................

ராஜ: அண்ணி.... ! அண்ணி...!

தன: (உள்ளே இருந்தபடியே எரிச்சலுடன்) என்னா?

ராஜ: (அன்புடன்) இங்க கொஞ்சம் வாங்களேன்...!

தன: ஏன்...? (கையில் விளக்குமாற்றுடன் வந்து தன் வீட்டு பகுதியை மட்டும் பிரித்துக் கூட்டுகிறாள்.)

ராஜ: என் தலையெ சரியா கடிக்குது அண்ணி ! கொஞ்சம் பாருங்களேன்.

தன: தலைக்கனம் புடிச்சா தலையெக் கடிக்கத் தான் செய்யும்....!

ராஜ: என்ன அண்ணி நீங்க...? கொஞ்சம் பாருங்களேன்!

தன: கண்ட நிண்டவளுக்கெல்லாம் பேன் பார்க்க நான் என்ன எவளும் வச்ச வேலைக்காரியயில்ல...!

ராஜ: (எரிச்சலுடன்) அண்ணி... மானம்...ரோஷம்.. ஆத்திரம் உங்களுக்கு மட்டுமில்ல.. மத்தவங்களுக்கும் அது வரும்...!

தன: இவ்வளவு சொல்லியும் ... செஞ்சியும் வரவேண்டியவளுக்கு இன்னும் அது வரல்லியே...!

ராஜ: நான் இன்னும் பொறுமையா இருக்கேன்!

தன: (கிண்டலுடன்) பொறுமையா ...? கழுதைக்கு தான் அது சொந்தம். கண்ட நிண்டவளுக்கில்ல...!

ராஜம்: (எச்சரிக்கையுடன்)அண்ணி... கொஞ்சம் மரியாதையாப் பேசுங்க....

தன: (வீட்டு வாசற்படியில் நின்றவாறே...) நாணயமுள்ள சிறு கீரை எதுலயோ முளைச்சிச்சாம்...!

ராஜ: ஏன் அண்ணி இப்படியெல்லாம் பேசுறீங்க... எனக்கும் பழமொழி தெரியும்.

தன: தெரிஞ்சா சொல்லுடி... பார்ப்போம்.

ராஜ: துப்பரவு உள்ள மாமி முப்பது பேரோட போனாளாம்.

தன: யாரடி சொன்ன...! என்னையா...?

ராஜ: நான் எவளையும் சொல்வேன்.. உனக்கென்னடி...? தொப்பி பொருத்தமா இருந்தா அதெ நீயே.. போட்டுக்கோ...

தனம்: கேட்டீங்களா.. அய்யய்யோ அய்யய்யோ... கேட்டீங்களா இவ சொல்றதெ... (வீட்டினுள்ளே அலறிக் கொண்டு ஓடுகிறாள்)

**(மேடை விளக்குகள் அணைகின்றன)**

## காட்சி : 6

**இடம்: கணேசன் வீடு.** **காலம்: பகல்.**

(Colour Wheell Lights *எரிகின்றன. அது சொற்ப நேரத்தில் வாழை மரத்துக்கு* Focus Light *ஆக மாறுகிறது. சிறிது நேரத்தில் மேடை முழுவதுமாக* General Lights *ஆக மாறுகிறது)*
*(கையில் ஒரு தடியுடன் வரும் சிவா குழையின் பூவை அடித்து உடைக்கிறான். வீட்டின் உள்ளே இருந்து வந்த தனம் இதனைக் கண்டு)*

தன: (அலறியவாறே...) அய்யய்யோ.. என்னடா ஒங்களுக்கு புடிச்சிருக்கு.. இப்படி நாசம் பண்ணுறீங்களே....!

சிவா: (திடுக்கிட்டு) என்ன அண்ணி இப்படி கத்துறீங்க....?

தன: நீங்க செய்யிற வேலைகளப் பார்த்துட்டு.. கத்தாம கப்சிப்ன்னு இருக்கவா சொல்றீங்க..?

சிவா: இப்போ... நான் என்ன தப்பு பண்ணிட்டேன் அண்ணி!

தன: கொஞ்சம் அசமந்தமா இருந்தா எனக்கே தப்பு அடிச்சிடுவீங்க....!

சிவா: ஐயோ.... ஏன் அண்ணி இப்படியெல்லாம் பேசுறீங்க? கறி சமைக்க நான் இந்த வாழைப் பூவைதானே உடைச்சேன்....!

தன: இவ்வளவு காலமும் இத கறியாக்கியா சோறு தின்னீங்க...?

சிவா: இப்போ தானே இது இருக்குது... அண்ணி.. பூவ உடைச்சாத்தானே காய் பெருக்கும்...!

தன: காய் முத்தி இருந்தா தானேடா பூவ ஒடைக்கணும்.. இன்னும் அது பச்சைப் பிஞ்சிடா...!

சிவா: (சிரித்துக் கொண்டே..) சரி.. சரி... அண்ணி அப்போ காயையும் வெட்டி கறி வைப்போம்....!

தன: (ஆத்திரமுடன்) என்னடா கிண்டலா பண்ணுற...? கறி சமைக்க போறானாம்...! கறி.

சிவா: அண்ணி... (ஆத்திரமுடன் பூவை தரையில் எறிகிறான்)

கணே: (வெளியிலிருந்து வந்து கொண்டே...) என்னடா – சத்தம்..?. அங்க ரோட்டுக்கு கேட்குது...!

சிவா: இந்த வாழைப்பூவ உடைச்சதுக்கு அண்ணி கண்ட மாதிரி ஏசுறாங்க....!

தன: அதுக்காக... என் முகத்துல அடிக்க முடியாத கோபத்துக்காக... அத தரையிலயா அடிக்கிறது....!

சிவா: அண்ணி... அப்படி நெனைச்சு.. நான் அதெ வீசல்ல... நாய், பேய்ன்னு கத கேட்ட பிறகு ...நான்அதெ தின்ன விரும்பல்ல...!

ராஜ: (வீட்டினுள்ளே இருந்து தலைவிரி கோலமாக வந்து...) அடடாடா.. தலைவலின்னு கொஞ்சம் படுத்தேன்... என்னடா சத்தம்...?

தன: ஆஹா... உண்மையிலேயே உனக்கு ஒன்னுமே தெரியதா...!

ராஜ: (அமைதியாக) என்னான்னு சொன்னாத்தானே அண்ணி தெரியும்...?

தன: (ஆத்திரமுடன்) பிஞ்சு வாழைக்குலையில சிவா பூவ உடைச்சிட்டான்.

ராஜ: (வாழை மரத்தைப் பார்த்து விட்டு...) அட... ஆமா... ஏன்டா இப்படி செஞ்ச...?

தன: அக்கா சொல்லாமயா தம்பி வந்து ஒடச்சிருப்பான்?

ராஜ: அண்ணி.. உண்யையிலேயே நான் சொல்லல்ல.. வேனும்ன்னா நீங்க அவனையே கேளுங்க....!

தன: இதுல அவனைக் கேட்க என்ன இருக்கு...?. ஆடு அறுத்த கள்ளனுக்கு ஆக்கி கொடுத்த கள்ளி நீ....!

ராஜ: அண்ணி... சும்மா வாய் இருக்கிற பழிக்கு பேசாதீங்க....

சிவா: (அழுது கொண்டே) இந்த பிரச்சினையெல்லாம் நான் இந்த வாழ மரத்த நாட்டினதாலத்தானே... இதெ அடியோட வெட்டிப்போட்டுட்டா எல்லா சனியனும் தீரும்....!

கணே: (ஆத்திரமாக) என்னடா.. அடியோட வெட்டவா...? வெட்டுடா பார்ப்போம்...!

சிவா: நான் தானே... நாட்டினேன்... நான் வெட்டுவேன்.

கணே: ஓ... ஹோ... உரிமை பேசுறீங்களா...? டேய் இதுக்கு பிறகு யாருமே அந்த வாழ மரப் பக்கம் போகப் படாது தெரியுமா...?

சிவா: அண்ணே... அது நான் நாட்டினது.....!

தன: இதுக்காகத் தான்.... நான் முந்தியே சொன்னேன்... இந்தக் காணியெ பிரிக்கனும்ன்னு....!

சிவா: இனிமே அப்படி செஞ்சாத் தான் சரின்னு நானும் நெனைக்கிறேன் அண்ணி....!

ராஜ: (இடைமறித்து...) பொத்துடா வாயெ... இருக்கிறதே நாங்க மூனு பேர்...!

சிவா: தெனமும் இப்போ வீண் சண்டை தானேக்கா...!

கணே: (ஆத்திரமுடன்) உன்ன பாத்து, கேட்டு, படிக்க வச்சதுக்கு இது போதாதுடா...!

தன: ஏ.எல். படிக்கிற நேரமே இப்படி திமிரா இருந்தா, நாளைக்கு ஒரு டொக்டரா... இன்ஜினியரா வந்துட்டா...

சிவா: இந்த பக்கம் தலைவச்சு படுக்க மாட்டேன்...!

கணே: என்னடா சொன்ன... (அடிக்கப் பாய்கிறான். ராஜம் சிவாவைப் பிடித்து தள்ள, தனம் கணேசைப் பிடித்து இழுக்க குழப்பம் பெரிதாகி விடுகிறது.)

கணே: ஒன் கால நான் உடைக்காட்டி பார்டா நன்டி கெட்ட நாயே...!

ராஜ: ச்சீ... இதென்ன பேச்சு... அண்ணா...!

தன: புள்ளையையும் கிள்ளிட்டு.. தொட்டிலையும் ஆட்ட வேண்டியது தான்...!

ராஜ: எனக்கா அண்ணி இப்படி சொல்றீங்க....!

தன: சமாதானம் பேசுறவங்க தானே... உள்ளுக்குள்ளால சண்டையையும் தூண்டுறாங்க...!

சிவா: (கையைப் பிடித்து இழுத்து)... நீ சும்மா வா அக்கா வீட்டுக்குள்ள...!

தன: (விரலைக் காட்டி) சிவா...! கொஞ்சம் மட்டு மரியாதை தேவை!

சிவா: (அலட்சியமாக) அண்ணி... மத்தவங்களுக்கும் அது தேவைங்கிறத நீங்களும் ஞாபகத்துல வச்சுக் கொள்ளுங்க...!

கணே: பாத்தியா... அவன் வாயெ....!

(மீண்டும் அடிக்கப் பாய்கிறான். மீண்டும் குழப்பம். ராஜம், சிவாவை உள்ளே இழுத்துச் செல்கிறாள். தனம், கணேசை வீட்டு வாசல் வரை தள்ளிக் கொண்டு செல்கிறாள்.)

கணே: (எல்லை மீறிய ஆத்திரமுடன்) டேய்.. இதுக்கு பிறகு நீ இந்த வாசல மிதிக்கக் கூடாது...!

தன: சரி... சரி.. வீட்டுக்குள்ள வாங்க.. நமக்கெதுக்கு வீண் வம்பு... பேசாம காணியெ பிரிச்சுட்டா போச்சு...

**(மேடை விளக்குகள் அணைகின்றன)**

## காட்சி : 7.

**இடம் : கணேசன் வீடு.** **காலம் : இரவு.**

*( நிலவு, வானத்தில் பூரண நிலவாக ஜொலிக்கிறது. இரண்டு வீடுகளினதும் வெளி விளக்குகள் எரிகின்றன. வீட்டினுள்ளே கதைப்பது வெளியே கேட்கிறது.)*

சர: (கனிவாக) சிவா... நீ கொஞ்சம் பணிஞ்சு போய் இருக்கனும்...!

சிவா: அண்ணி தான் கண்ட மாதிரி ஏசினாங்க...!

சர: அவளோட மாதிரி எங்களுக்கு தெரியும் தானே..? ஏசிட்டுத் தான் போகட்டுமே... அவ உனக்கு அண்ணி தானே...!

ராஜ: காணியெ பிரிக்கனும்ன்னு சொல்றாங்க...!

சர: என்னத்தையாவது செஞ்சுட்டு போகட்டும்.. அது அவங்க இஸ்டம்.. ம்.. நானும் ரெண்டொருத்தர் கிட்ட வீடொன்னு பார்க்க சொல்லி இருக்கிறேன்...!

ராஜ: எதுக்கு வெலைக்கு வாங்கவா...!

சர: இப்போ அதுக்கு வசதியில்ல.. கூலிக்குத் தான்... நல்ல வீடா கெடைச்சா போயிடுவோம்.

சிவா: இது நல்லா பழகின எடம் அத்தான்.....!

சர: பழகின எடத்துல பகை வந்துட்டா... என்னடா... செய்யிறது...? காணியும் வேணாம்... பூமியும் வேணாம்... ஊர் சிரிக்காம பகையில்லாம மானத்தோடு வாழ்ந்தா...அதுவே போதும்... ம் சிவா.. நீ போய் படு, காலையில கிளாஸ் போகனும் இல்லையா...!

(சரவணன் வீட்டு முன் விளக்கு அணைகிறது)

தன: (கெஞ்சலாக) இந்தாங்க.. இந்தாங்க...!

கணே: (கோபமுடன்)என்னது...?

தன: என்ன யோசிக்கிறீங்க...!

கணே: யோசிக்க என்ன இருக்கு...!

தன: இப்போ... நாம வீட்ட பெரிசா கட்ட முடிவு பண்ணி இருக்குறோம்.... காணியெ பிரிச்சுட்டு வீட்டக் கட்டினாத்தான் நாம எதிர்காலத்துல நிம்மதியா வாழலாம்?

கணே: நான் எதுக்கும் போய் நாளைக்கு சித்தப்பாவப் பார்க்குறேன்!

தன: அவர் தான் உங்க ஜென்ம விரோதியாச்சே....!

கணே: ஒரு விரோதியெ வச்சுத் தான் இன்னொரு விரோதிய மடக்கனும்...!

(கணேசன் வீட்டு வெளி விளக்கும் அணைகிறது)

**(மேடை விளக்குகள் அணைந்து, மீண்டும் எரிகின்றன)**

## காட்சி : 8.

**இடம்: கணேசன் வீடு.** **காலம்: இரவு.**

*(கணேசன் தன் வீட்டின் முன்னால் அமர்ந்து, தன் முன்னாள் எதிரியான தனது சித்தப்பாவுடன் மது அருந்திக் கொண்டிருக்கிறான்.)*

செல்: மகன்.... கணேஸ்...இந்தக் காணியில எனக்கும் பங்கு இருக்குங்கிறத இப்போ சரி நீ ஒத்துக்கிறீயா...?

கணே: (மதுவெறியுடன்)அளந்து பிரிச்சு எடுத்துக் கொள்ளுங்க..சித்தப்பா! இல்லேன்னா எல்லாத்தையுமே நீங்களே எடுத்துக் கொள்ளுங்க. சாகுற நேரம் நான் என்ன கொண்டு போகவா போறேன்...!

செல்: (மதுவெறியுடன்)அது சரி... ம்... என் மகன் கல்யாணத்துக்கு, நான் இந்த ராஜத்துக்கும் அவ புருஷனுக்கும் சொன்னேன். ஆனா... அவங்க வரல்ல...!

கணே: எனக்கு நீங்க சொல்லி இருந்தா... யார் வரல்லேன்னாலும் கட்டாயமா நான் வந்திருப்பேன் சித்தப்பா... நம்ம தகப்பன் பேர சொல்ல இருக்கிற ஒரே ஆள் நீங்கதானே...! சித்தப்பா! (குடிவெறியில் அழுகிறான்)

செல்: அது சரி... போனதெல்லாம் போகட்டும்.. இனி நானும் நீயும் ஒரே ரெத்தம் ... நம்மள யாருமே பிரிக்க முடியாது...! (அழுகிறார்)

கணே: ஆனா.. காணியெ மட்டும் பிரிக்க முடியும்...!

செல்: சரியா சொன்ன கணேஸ்... வெட்டு ஒன்னு துண்டு ரெண்டா காணியெ பிரிக்கனும்.. அத யாராவது தடுக்க வந்தா, அவங்களெ ரெண்டு துண்டா வெட்டனும்...!

(ராஜம் வாளியுடன் கிணற்றடிக்கு தண்ணீர் அள்ள போக, தன் வீட்டினுள்ளிருந்து வருகிறாள்.)

செல்: (ராஜத்தை மறித்து) இந்தா பார் ராஜம்! நாங்க இந்தக் காணியெ பிரிக்கப் போறோம்...!

ராஜ: பிரிச்சுக் கொள்ளுங்க சித்தப்பா....!

செல்: இல்ல நீ பிரிக்க வேணாம்னு சொல்லு..... சொன்னா நாங்க என்னா கேட்டுட்டு சும்மா இருந்துடுவோமா என்னா....!

ராஜ: நான் வேணாம்ன்னு சொல்ல மாட்டேன் சித்தப்பா...!

செல்: இல்ல.... வேணாம்ன்னு நீ சொல்லு பார்ப்போம்...!

கணே: அப்படி சொல்லி வாயெ மூடுறதுக்குள்ள உன்ன வெட்டி அந்த வாழ மரத்தடியிலேயே பொதச்சிடுவேன்டி....!

ராஜ: இப்படியெல்லாம் பேச உனக்கு எப்படி அண்ணா மனசு வருது! (அழுகிறாள்) அண்ணா... உன் உயிர் இருக்கிற வரைக்கும் இந்தக் காணியெ பிரிக்கிறதில்லேன்னும் இது எல்லாருக்குமே சொந்தம்ன்னு நீ ஒரு நாள் சொன்னதெ மறந்துட்டியா...?

கணே: அப்போ... நான் தான் அப்படி சொன்னேன்.... இப்போ நானே தான் இப்படி சொல்றேன்... ஆஹா... பாசம் பொங்கி வழியுது... அநியாயமா வெளியெக் கொட்டிடும் – வாளியெ பிடி...!

செல்: அடேய் மகன் கணேஸ்... இது சகோதரப் பாசத்தால வந்த அழுகை இல்லடா... காணியெப் பிரிச்சு வேலி போடப் போறாங்களே... அப்போ தண்ணி எடுக்க கிணறு இல்லாமப் போயிடுமேங்கிற கவலையால வந்த கண்ணீர்டா....!

கணே: சரியா.... சொன்னீங்க சித்தப்பா...!

(சரவணன் வீட்டினுள்ளிருந்து அவர்களிடம் வருகிறான்.)

செல்: (சரவணனைப் பார்த்து) என்ன.... ஒரு "சொட்" எடுக்கலாம்ன்னு வந்தியா...?

சர: ஐயோ... இல்ல மாமா... நான் குடிக்க மாட்டேன்....!

செல்: நாய்க்கு எங்க நெய்சோறோட அரும தெரியப் போவுது!

சர: மச்சான்...மாமா.... நீங்க பேசினதெல்லாம் நான் கேட்டுகிட்டு தான் இருந்தேன்...!

செல்: அப்போ..... நாங்க பேசுறதெ நீ ஒற்றுக் கேட்டுகிட்டு இருந்தியா...?

சர: ஒட்டு கேட்கல்ல மாமா... நீங்க சத்தம் போட்டு பேசினது என் காதுல விழுந்திச்சி.... நீங்க காணிய தாராளமா பிரிச்சுக் கொள்ளுங்க... எங்களுக்கு கிணறு இல்லன்னாலும் பரவாயில்ல... நாங்க 'பைப்லைன்' எடுத்துக் கொள்றோம்...!

செல்: பார்த்தியாடா... இவரு "பைப்லைன்" எடுத்துக் கொள்வாராம் இல்ல...!

கணே: பணத்திமிர்...!

செல்: பிரிக்காத காணியில எப்படி கணேஸ் "பைப்லைன்" போட முடியும்...?

கணே: அது தானே.. நாளைக்கி நாங்களும் ஒரு மரம்மட்டைய நாட்ட குழி வெட்டுவோம்... "பைப் லைன்" வெட்டுப்படும்.. அப்புறம் அதுக்காக வேற புதிய பிரச்சினை வரும்....!

சர: காணிய பிரிச்ச பிறகுன்னு தானே சொன்னேன்...!

கணே: சித்தப்பா – அப்போ – காணியெ பிரிக்காம இருப்போம்!

செல்: அது நல்ல யோசனை... நாம காணிய பிரிச்சா இவரு வீட்டுக்குள்ளேயே தண்ணி வந்திடும்.... அதனால பிரிக்காமலே இருந்துடுவோம்....!

சர: அப்படின்னா.... நான் வேற வீடு பார்த்துகிட்டு போறோம்... காணி முழுதையுமே நீங்களே எடுத்துக்குங்க... ஆனா, அது வரைக்கும் கொஞ்சம் பொறுமையா இருங்க...!

செல்: என்ன. பொறுமையா இருக்கவா..? அப்போ கணேஸ் நாங்க கழுதையா... என்ன?

கணே: அது தானே... கழுதை தானே பொறுமையா இருக்கும்...!

சர: ஊர் சிரிக்காம நாங்க வாழனும் மச்சான்.....!

செல்: என்னா.. ஊர் சிரிக்கிறதா... இனியா உங்களப் பார்த்து ஊர் சிரிக்கப் போவுது... முன்னால சிரிச்சா பல்லு தெரியும்ன்னு இப்போ பின்னால சிரிக்கிறாங்க...!

சர: நான் அதக் காணல்லையே மாமா...!

செல்: நீ காண்கிறதுக்கு என்னடா.. நான் அவுத்து போட்டா இருக்கேன்.....!

ராஜ: அவங்க தான் சுய நெனைவு இல்லாம பேசுறாங்கன்னா... நீங்களுமா... என்ன...?

கணே: யாருக்குடி சுய நெனைவு இல்ல...!

செல்: அப்போ... நாங்க என்ன குடிகாரனுங்களா...?

(செல்வரத்தினம் அடிக்க எழும்புகிறான். கணேசும் எழுகிறான். ராஜம் கணவனை தன் வீட்டுக்குள் இழுத்துச் செல்கிறாள்.)

**(மேடை விளக்குகள் அணைத்து, மீண்டும் இரவுக்கான குறைவான விளக்குகள் எரிகின்றன.)**

## காட்சி : 9.

*இடம் : கணேசன் வீடு.* *காலம் : இரவு.*

*(கணேசன் தன் வீட்டு வாசலில் மோகன், என்ற நண்பனுடன் மது அருந்திக் கொண்டிருக்கிறான். அவர்கள் நல்ல வெறியில் இருக்கின்றனர். இரண்டு நாட்காலிகள் காலியாக இருக்கின்றன.ராஜத்தின் வீட்டு கதவு மூடி இருக்கிறது.)*

மோக: நீங்க ஒன்னுக்குமே பயப்படாதீங்க... ஒங்களுக்கு எது நடந்தாலும்..... எது வந்தாலும் பெஸ்ட்ல நான் தான் இருப்பேன்!

கணே: தெங்கியூ மச்சான் மோகன்... இன்னைக்கு இந்த உலகத்துல கூடப் பொறந்தவன விட... அந்நியன் ரொம்ப நல்லவன்டா...!

மோக: அதனாலத் தானே நானும் நீயும் கூடப் பொறக்கல்ல...!

கணே: நல்ல வேளை கடவுள் நம்மள காப்பாத்திட்டார்...!

(இச்சமயம் தனம் பொறிச்ச இறைச்சி கொண்டு வந்து வைக்கிறாள்.)

மோக: (எட்டிப் பார்த்து விட்டு) அட இறைச்சி பிஸ்டேக்கா...! குட் தங்கச்சி.. இந்தா பாருங்க தங்கச்சி. ஒங்களுக்கும் தான்... நான் சொல்றேன்.. ஒன்னுக்குமே நீங்க பயப்படாதீங்க... யாராவது "பல்பாட்" போட்டா எனக்கு சொல்லுங்க.... நீ கவலைப்படாதே... கணேஸ் இல்லேன்னாலும் நீ கவலைப்படாதே... உனக்கு நான் இருக்கேன்....!

தன: ஒருத்தர் இல்லேன்னா என்னா..?. இன்னொருத்தர் இருக்காங்க...!

மோக: வெரிகுட் அப்படித் தான் தைரியமா இருக்கணும்... நான் ஒருத்தனே ஒனக்கு பத்து கணேசுக்கு சமமம்...!

(தனம் உள்ளே செல்கிறாள்.)

(சோடா, கடலை வாங்கச் சென்ற கணேசின் நண்பர்களான அருளும், சேகரும் போதையில் வருகின்றனர்.)

கணே: என்ன மச்சான் சேகர்? டேஸ்ட் கடல இருந்திச்சா...!

சேக: ஆமா கணேஸ்..... ஆனா, மஞ்ஞுக்கா பொரியல் இல்ல...!

கணே: இல்லாதத விடு... மச்சான் அருள் ஜொயின்ட்....!

(அருளும் சேகரும் அமர்ந்து குடிக்கின்றனர்.)

சேக: மச்சான் கணேஸ்... விடிஞ்சா தீபாவளி... புது உடுப்பு எல்லாம் வாங்கியாச்சா... இல்லேன்னா சொல்லு நான் வாங்கித் தர்ரேன்...!

கணே: ஒ... யெஸ்... நான் வாங்கிட்டேன் மச்சான் சேகர்.. ஆனா... இந்த தடவ எனக்கு செலவு ரொம்ப கொறவு...!

அருள்: இது என்னடா அதிசயமா இருக்கு....! போன வருஷத்த விட இந்த வருஷம் பாண் வெலையே... சிங்கள் டபளாகி ... டபள் ட்ரிபளாகி ... ட்ரபள் போரபளாகியிருக்கு. இந்த லெட்சணத்துல எப்படிடா உடுப்பு வெல கொறையும்...?

கணே: மச்சான் அருள்.. நான் முந்தி அஞ்சு ஆறு பேருக்கு உடுப்பு வாங்கனும்.. இந்த தடவ எனக்கும் வைப்புக்கும் மட்டும் தானே... ம்... எடு...!

அரு: ஏன் மத்தவங்க எல்லாம் டுபாய் போயிட்டாங்களா?

கணே: இல்ல.... மனசுக்குள்ளயே அவங்கெல்லாம் செத்துப் போயிட்டாங்க....!

சேக: இதென்னடா மச்சான் – வெளங்கல்லியே...!

மோக: முந்தி தம்பி... தங்கச்சி, மச்சான்னு எல்லாம் வாங்கனும்... இப்போ இவரோட அவங்க பகை... அதனால அவங்களுக்கு நஷ்டம் ... நம்ம கணேசுக்கு லாபம்....!

அரு: கேட்டகவே ரொம்ப சந்தோஷமா இருக்குடா...!

சேக: அப்போ நம்ம கணேசுக்கு இந்த வருஷம் நல்ல லாபம்ன்னு சொல்லு...!

மோக: அந்த லாப காசுல தான்... நமக்கு இந்த பார்ட்டி...!

அரு: குட்.. வெரி குட்.. மச்சான். கணேஸ்! உனக்கு யாராவது பல்பாட்... பூட்.... வலி.. ஜல்பரி ஏதாவது போட வந்தா... நீ என் கிட்ட சொல்லு.... நான் நல்ல சய்லன்ஸா கதையெ குடுத்துடுவேன்...!

அரு: ஆமா மச்சான்... ஆளோட பொடி மாத்தரையிலயும் தல மாத்தளையிலுமா மாத்தி வச்சிடுவோம்...!

மோக: யூ...டோன் வொரி கணேஸ்... அந்த மூனு பேர் போனா என்ன... நாங்க மூனு பேர் இருக்கோம்....!

கணே: நோ... நோ.. ஐ நெவர் வொரி....! (இறைச்சியை பிய்க்க முயலுகிறான். முடியவில்லை) .. தனம் ... தனம்...தனம்....!

தன: (வந்து கொண்டே குரல்) என்ன வேணும்?

கணே: இந்த இறைச்சியெ பிய்க்க ஏலாது...!

தன: அம்மியில வச்சு தட்டி தரவா...?

கணே: என்னை என்ன பல்லு இல்லாத பொக்க வாயன்னா நெனைச்ச... நீ கத்தியெக் கொண்டா... நான் வெட்டிகிறேன்...!

மோக: (தனத்தைப் பார்த்துக் கொண்டே) வெட்டிக் கடிச்சுத் தின்னாத்தான் டேஸ்ட்.....!

(தனம் உள்ளே போகிறாள்.)

சேக: ஆமா... மச்சான் கணேஸ்.. நீ கல்யாணம் கட்டி எத்தென வருஷம்...?

கணே: ஆறு வருஷமாகுது...!

அருள்: இது வரைக்கும் பேபி இல்லையா...?

கணே: இல்லையே.. ஆனா... மலடின்னு மட்டும் நெனைக்காதே....!

(இச்சமயம் ராஜமும் சிவாவும் வெளியிலிருந்து பொருட்களுடன் வருகின்றனர். ராஜம் வீட்டை திறந்துக் கொண்டு உள்ளே செல்ல, சிவா தன் சேர்ட்டைக் கழற்றி கொடியில் போடுகிறான் )

கணே: ப்பூ...! (சிவாவுக்கு கிண்டல் செய்கிறான்.)

மோக: மச்சான் கணேஷ்.! பொடியனுக்கு ரெண்டு பிடரியில வைக்கவா...?

கணே: டைம் வரும். அப்போ நான் சொல்றேன்...!

அருள்: டைம் வர்ர வரைக்கும் பார்த்துக்கிட்டிருக்க இது என்ன தாலி கட்டுற விஷயமா...?

சேக: பொடியனுக்கு இப்பவே ரெண்டு தட்டு தட்டி வச்சா தான்... எல்லாம் சரியா வரும்....!

மோக: கணேஸ்... உனக்கு வர்ர எந்த ஜல்பரிக்கும் நாங்க இருக்குறோம்...!

(மது வெறியுடன் ஆடி – பாடிக் கூக்குரலிடுகின்றனர்)

(இச் சமயம் சிவா டவலையும் சோப் பெட்டியையும் எடுத்துக் கொண்டு கிணற்றடிக்கு போக வெளியே வருகிறான். மோகன், அருள், சேகர் மூவரும் சிவாவை வட்ட வடிவமாக சுற்றி ஆடிப் பாடுகின்றனர். பின் அருள் சிவாவின் பின் புறமாக நின்று மோகன் பக்கமாகத் தள்ளுகிறான். மோகன், சேகர் பக்கமாகத் தள்ளுகிறான். இப்படியே ஆள்மாறி ஆள் தள்ளி விட, சோப் பெட்டி கீழே விழுகிறது. அதனை எடுக்க சிவா குனியும்போது சேகர் சோப் பெட்டியை உதைத்து விடுகிறான். சிவா சேகருக்கு அறைந்து விடுகிறான். மூவரும் சிவாவை மடக்கி பிடிக்கின்றனர்.

கணே: (நல்ல போதையில்) மோகன் இப்போ... அவனெ..விடுங்க...!

(மோகன் கணேசிடம் ஓடி வருகிறான்.)

கணே: டேய்! இப்ப – அவன விடு.. இன்னொரு நேரம் பார்ப்போம்...!

சேக: (ஆத்திரத்துடன்) அவன் தானேடா மொதல்ல என்ன அடிச்சான்...?

(சேகர் இறைச்சி வெட்டிய கத்தியை எடுத்துக் கொண்டு ஓடுகிறான்.)

கணே: (மது வெறியுடன்) டேய்... மோகன்.. மோகன்!

(கணேசன் எழ முயன்றும் நடக்க முடியாமல் நிலை தடுமாறுகிறான்...)

(சிவாவை சேகரும் அருளும் இறுக்கிப் பிடிக்க, சேகர்; சிவாவின் அடி வயிற்றில் கத்தியால் குத்துகிறான்...)

சிவா: ஐயோ... அம்மா... அம்மா... அக்கா.... அக்கா.. எனக்கு கத்தியால குத்திட்டான்...!

(ராஜம் உள்ளேயிருந்து ஓடி வருகிறாள்)

ராஜ: சிவா... சிவா... டேய்... தம்பி... ஐயோ இதென்னடா ரெத்தம்...?

(நண்பர்கள் மூவரும் ஓடி விடுகின்றனர்.)

சிவா: (சிவா தன் வயிற்றைப் பிடித்தவாறே) எனக்கு.... அவன் கத்தியால குத்திட்டான்... ஐயோ... அம்மா! (தரையில் விழுகிறான். ராஜம் கட்டிப் பிடித்து அழுகிறாள்.)

கணே: (எழமுடியாமல் மதுவெறியில் நிலைதடுமாறி நிற்கிறான்...) குத்திட்டானா..? குத்திட்டானா?

ராஜ: ஐயோ... இவனப் பிடியேன்..அண்ணா . ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவோம்.....!

கணே: ஆ... அவன்... வாழ ....மரத்தெ கூப்பிடு....! வாழ மரத்தெக் கூப்பிடு...

தன: (வீட்டினுள்ளே இருந்து வந்து) என்ன சத்தம்... ஆ... இதென்ன.. ரெத்தம்... டேய் சிவா... என்னடா இது...!

சிவா: அண்...ணி... அண்ணா...வோட கூட்டாளி என்னக் குத்திட்டான்... அக்...கா.. அண்ணாவக் காட்டிக் கொடுக்காத... அக்கா...அண்....ணாவைக் காட்டிக் கொடுக்காத... தண்ணி... தண்ணி....!

(ராஜம் தண்ணீர் கொண்டு வர வீட்டினுள் ஓடிச் சென்று தண்ணீர் கொண்டு வருகிறாள். சிவா தண்ணீர் அருந்தாமலேயே மரணமடைகிறான். ராஜம் அழுகிறாள்.)

தனம்: (கதறியழுது) ஐயோ தம்பியைப் பாருங்களேன்....! பாருங்களேன்....!.!

(கணவனை உசுப்புகிறாள். கணேசன் மதுவெறியில் சுயநினைவின்றி மயங்கிக் கிடக்கிறான்)

**(மேடை விளக்குகள் மிக மெதுவாக அணைகின்றன.)**

## காட்சி : 10.

***இடம்: கணேசன் வீடு.*** ***காலம்: பகல்.***

*(வாழை மரத்துக்கு* Focus Light. *அது சொற்பநேரத்தில்* Genaral Light *ஆக மாறுகிறது.*

*முற்றம் வெறிச்சோடி இருக்கிறது. முற்றத்தில் நிற்கும் சரவணன் வாழை மரத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறான்.*

*முன்னொரு போது தன்னிடம் சிவா மோட்டார் சைக்கிள் கேட்ட சம்பவம் ஞாபகம் வருகிறது. பின்னணியில் மோட்டார் சைக்கிள் ஒலி கேட்கிறது.*

*தனம் தேய்ந்த பழைய கூட்டுமாரைக் கொண்டு வந்து முற்றத்தைக் கூட்டுகிறாள். சரவணன் கண்களில் பெருகும் கண்ணீரை துடைத்தவாறே திரும்புகிறான். தனம் மரியாதை இன்றி சரவணன் மேல் குப்பை விழும்படி கூட்டுகிறாள். தொடர்ந்து கூட்டிக் கொண்டே முன்னே வருகிறாள்.*

*உள்ளே சென்று சரவணன் வெட்டுக் கத்தியோடு வந்து, வாழை மரத்தை நோக்கி விரைவாகச் செல்கிறான். இதைக் காணும் தனம்....)*

தன: வாழக் கொழைய வெட்டவா போறிங்க.. அது இன்னும் பிஞ்சு...!

சர: இத வெட்டி வித்து நான் சோறு தின்ன நெனைக்கல்ல. இந்த வாழ மரத்த பார்க்க, பார்க்க எனக்கு சிவாவோட நெனைவு வந்து என் இதயமே வெடிக்கப் பார்க்குது...!

தன: (கலகலவென்று சிரித்து) அவன் செத்த அன்னைக்கே வெடிக்காத அந்த இதயம் இப்போவா வெடிக்கப் போவுது...?

சர: இத வெட்டித் தொலைச்சாத் தான் நான் இந்த வீட்டுல நிம்மதியா இருக்கமுடியும்.

தன: அட.... பொண்டாட்டி செத்து ஆறாம் மாசம் புளியங் கொட்டைப் போல விழுந்திச்சாம் கண்ணீர்....!

சர: தனம்! குடும்பம் அழிஞ்சது போதும்... இனியும் அழிய வழி பண்ணாதீங்க...!

தன: (மிக அமைதியாக) யார் அழிஞ்சாலும் பரவாயில்ல... நானும் என் புருஷனும் உயிரோட, நல்லா இருந்தா எனக்கு அதுவே போதும்....!

சர: நான் இதெ வெட்டியே தீருவேன்...!

தன: இது இன்னமும் பிரிக்கப்படாத காணி...! நீங்க அத வெட்டக் கூடாது.

சர: எனக்கு காணி வேணாம்.. இந்த சனியன என் கண்ணுல படாம வெட்டித் தொலைச்சா எனக்கு போதும்....!

(சரவணன் மரத்தருகே சென்று கத்தியை ஓங்குகிறான். கூட்டுமாருடன் சரவணனின் பின்னால் வரும்....)

தன: அட... இவ்வளவு சொல்லியும் உறைக்கல்லியே!

(கூட்டுமாரால் சரவணனின் முதுகில் அடிக்கிறாள் திகைப்புற்று திரும்பும் சரவணன் மீண்டும் தன்னை அடிக்க கூட்டுமாரை ஓங்கும் தனத்தைக் கண்டு திகைக்கிறான். சரவணனின் திகைப்பைக் கண்டு அஞ்சி கூட்டுமாரை தரையில் போட்டு விட்டு தனம் வீட்டினுள்ளே ஓடி விடுகிறாள். திகைத்து நிற்கும் சரவணனின் கையிலிருந்த கத்தி நழுவி தரையில் விழுகிறது.)

சர: ஆ...! ஆ....ஆ... (என்று திணறுகிறான். சத்தம் கேட்டு ராஜம் வீட்டினுள்ளே இருந்து ஓடி வருகிறாள். சரவணன் நிலை கண்டு பதறி...)

ராஜ: என்ன இது ... உங்களுக்கென்ன...?

(தனக்கு மாரடைப்பு ஏற்பட்டிருப்பதாக சரவணன் சைகை மூலம் மனைவிக்கு சொல்கிறான். இச் சமயம் கணேசன் கடையிலிருந்து மதுவெறியுடன் தள்ளாடியவாறே பொருட்களுடன் வருகிறான்.)

ராஜ: அண்ணா.... அண்ணா... இவருக்கு பேச முடியல்ல... என்னான்னு பாரேன் அண்ணா...!

(கணேசன் தயங்கி நிற்கிறான். தனக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளதாகவும் சைகை மூலம் தன்னை ஆஸ்பத்திரிக்கு கூட்டிச் செல்லும் படியும் சரவணன், கணேசுக்கு சொல்கிறான்.)

ராஜ: அவர ஆஸ்பத்திரிக்கு கூட்டி போகட்டுமாம். அண்ணா! அவர பிடி அண்ணா... ஐயோ... இவருக்கு மறுபடியும் ஹாட் எட்டேக்கோ தெரியல்லையே....!

(கணேசன், சரவணனை நோக்கி இரண்டடி முன்னால் வைக்கிறான்)

தனம்: (வாசலில் வந்து நின்றபடியே...) எங்க போறீங்க...? வந்தா வீட்டுக்குள்ள வாங்களேன்...!

(தலையை குனிந்து கொண்டே கணேசன் தன் வீட்டினுள்ளே போகிறான். ராஜம் அவனை பின் தொடர்ந்து ஓடுகிறாள். கணேசனின் வீட்டுக் கதவு சாத்தப்படுகிறது. சரவணன் தடாலென்று தரையில் விழுந்து துடிக்கிறான்.)

ராஜ: (திரும்பி கணவனிடம் ஓடிவந்து)ஐயோ.. ஐயோ... உங்களுக்கு என்ன.?. உங்களுக்குகென்னங்க...? ஐயோ.. நான் என்ன செய்வேன்... ஐயோ...!

(சரவணன் தனக்கு வருத்தம் கடுமையாக இருக்கிறதென்று உடனடியாக தன்னை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லும்படி சைகை மூலம் சொல்கிறான்.

ராஜம் மீண்டும் கணேசன் வீட்டை தட்டி....)

ராஜ: அண்ணா... அண்ணி... அண்ணா....!

கணே: (உள்ளே இருந்தவாறே) என்னா....!

ராஜ: (கதறி) ஓடி வாங்களேன்... அவர் விழுந்து கெடக்குறாரு. ஓடி வாங்களேன்... கொஞ்சம் வந்து தூக்குங்களேன்... ஐயோ.. பேச்சு மூச்சு இல்லாம இருக்கிறாரு. அண்ணா....! சீக்கிரமா வாயேன்.

(நிறை குடிவெறியில் கையில் மதுக்கிளாசுடன் தள்ளாடியவாறே கணேசன் வாசலுக்கு வருகிறான்)

கணே: (மதுபோதையுடன்) ஒன் காணியையும் வாழ மரத்தையும் கூப்பிடு. வந்து தூக்கிட்டு ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவும்....! (வாசற்படியில் அமர்கிறான்.)

ராஜ: ஐயோ.. அண்ணா... இந்த நேரம் அதெல்லாம் பார்க்காதீங்களேன். அண்ணி நீங்களாவது வாங்களேன்..!

தன: (எதுவுமே பேசாமல் தன் வீட்டினுள்ளே போகிறாள்)

(ராஜம் ஓடி வந்து மீண்டும் கணவனை தூக்க முயலுகிறாள். அவளால் முடியவில்லை. அழுகிறாள். பின் மீண்டும் அண்ணனிடம் சென்று முறையிடுகிறாள். அவன் மித மிஞ்சிய மதுவெறியில் தரையில் மல்லாந்து கிடக்கிறான்)

ராஜ: எங்களுக்கு அம்மாவும் இல்ல.. அப்பாவும் இல்ல. நம்ம குடும்பத்துல உள்ளதே நானும் நீயும். தம்பி சிவாவும் மட்டும் தானே.. இதுல நாம ஒருத்தர ஒருத்தர் மதிக்காம நடந்துக்கிட்டா. ஊர் எங்களப் பார்த்து சிரிக்கும்ன்னு அன்னைக்கு ஒரு நாள் சொன்னியே.. அண்ணா... அதெ எப்படியண்ணா இப்போ மறந்துட்டே.. அண்ணா... இன்னைக்கு சிவாவும் எங்களோட இல்ல. இனி என்னைக்குமே அவன் எங்களோட வாழ வர மாட்டான். இனி வாழ வேண்டியவங்க நானும் நீயும் தானே அண்ணா... வா.. அண்ணா இவர ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவோம்.. இவருக்கு இந்த எடத்துல ஏதாவது நடந்துட்டா நாளைக்கு இந்த உலகம் நம்மளப் பார்த்து சிரிக்கும் அண்ணா...!

கணே: சிரிக்கட்டும்... நல்லா சிரிக்கட்டும்....

(கணேசன் அதிக மதுவெறியினால் சுய நினைவின்றி உளறுகிறான்)

ராஜ: (பதறியவாறே)அவரைக் கொஞ்சம் தூக்கு அண்ணா..?

கணே: ம்... தூக்கவா.. அவரு .... என்ன சின்ன பிள்ளையா...?

ராஜ: ஐயோ... பிடியேன் அண்ணா..

கணே: ம்...ம்.....(மதுவெறி அதிகமானதால் எழுந்து மதி கெட்டு மயங்கிச் சாய்கிறான்)

ர்ாஜ: (ராஜம்... சரவணனைத் தூக்க முயலுகிறாள். சரவணன் மரணித்துவிடுகிறான். கணவன் இறந்து கிடக்கிறான் என்பதை தெரிந்து கொண்டதும் கதறுகிறாள்)

ராஜ: அண்ணா! கூடப் பிறந்தவளோட துன்பத்துல பங்கெடுக்கவேண்டிய நீ, இப்படி வஞ்சம் தீர்த்துட்டியே...! ஒரு தாய் பெற்ற மக்களான நாங்க, சமாதானமா,

ஒற்றுமையா... என்னைக்குமே வாழனும்ன்னு நீ அடிக்கடி சொல்லுவியே..., இப்போ இந்த மண்ணாசையால அந்த சமாதானத்தையும் ஒற்றுமையையும் குழிதோண்டி புதைச்சிட்டியே...

கேவலம் அழிஞ்சு போகிற ஒரு அற்பப் பொருளுக்காக சொந்த சகோதரனையே அன்றைக்கு பழிகொடுத்தே.. இப்போ என் தாலியையே பறிச்சுட்டியே....

கடவுளே நீ படைச்ச மனிதன் உன்னதமான படைப்புன்னு சொன்னியே! அந்த உன்னதமான படைப்போட இழிவான செயலை நீ பார்த்தாயா?

இப்படி மண்ணாசை பிடித்தவர்களால, என்னைப் போல எத்தனைப் பேர் பெற்றதாய்; தகப்பன் உடன்பிறந்த அண்ணன், தம்பி அக்காமாரை இழந்துதவிக்கிறார்களே.. இது ஏன்...

உன் படைப்பில் இந்த அவலமான, கேவலமான நிலை ஏன்? இப்படிப்பட்ட வக்கிர புத்தியுள்ள மனிதனிடம் இருந்து நீ என்ன எதிர்பார்க்கிறாய்? சொல்!!

மனிதன் மனித நேயம் இன்றி மிருகத்தைவிட இழிவான நிலைக்கு வரக் காரணம் என்ன...? மனிதனிடம் இல்லாத மனித நேயத்தை எப்படி நீ உலகுக்கு காட்டப் போற... சொல்! அநீதியே நிலைத்து வரும் இந்த மனித உலகத்துக்கு நீ தரப்போகும் **தீர்ப்பு** தான் என்ன? உன் **தீர்ப்பு** என்ன...? உன் **தீர்ப்பு** என்ன..?

(பலமான காற்று அடிக்கிறது. காற்றின் தாக்கத்தால் வாழை மரம் குலையோடு தரையில் சரிந்து விழுகிறது. எந்த வாழைக்காக ஒரு குடும்பம் பிரச்சினைப்பட்டு சின்னாபின்னமானதோ அந்த வாழை மரம் யாருக்குமே பிரயோசமின்றி அழிந்து போகிறது. இதனைக் கண்டு ராஜம் கதறிக் கதறி சுய நினைவற்று மயங்கிச் சாய்கின்றாள)

(இது எதுவும் புரியாமல் கணேசன் குறட்டை விட்டு மறுவெறியில் தூங்கிக் கொண்டிருக்கிறான்)

**(மேடையில் மெல்ல, மெல்ல இருள் கவிழ்கிறது)**

**முற்றும்.**

## நிழல் நாடக மன்றத்தின் "விடிவு இல்லாத முடிவு!"

கல்வி கற்கச் செல்லும் மாணவ – மாணவிகள் தாம் பள்ளி வயதில் கல்வி கற்பதையே முழு நேர நோக்கமாகவும் செயற்பாடாகவும் இலட்சியமாகவும் கொள்ளல் வேண்டும்.

வயதுக்கோளாறும் சூழ்நிலை காரணிகளும் பழக்க வழக்கங்களும் சக மாணவ – மாணவிகளின் சகவாசதோசங்களும் சேர்ந்து கல்வியை விட்டு மனதையும் கண்களையும் திசை திருப்பி விடாமல் தன்னைத் தற்காத்துக் கொள்ளல் வேண்டும்.

இங்கே, கல்வி கற்க வேண்டிய ஒரு மாணவி கற்கவேண்டிய வயதில் தன் மனதை கல்யாண ஆசையில் அலைபாய விட்டதால், 'கண்மணி' போன்ற அவளின் வாழ்க்கையும் குடும்ப கௌரவமும் தாய், சகோதரனின் அபிலாசைகளும் எவ்வாறு பாழ்பட்டுப் போயின என்பதை தெளிவுற விளக்குவதே இந்த **"விடிவு இல்லாத முடிவு!"**

இந்த அவலமான "விடிவு இல்லாத முடிவு!" யாருக்குமே வரவேண்டாம் என்ற பிரார்த்தனையே இந் நாடகம்.

இதனைப் படித்த பின்னர் உங்கள் பிரார்த்தனையும் அதுவே ஆகட்டும்.

## அரங்கில்

| நடித்த நடிகர்கள் | : | ஏற்ற கதாபாத்திரங்கள் |
|---|---|---|
| ஜோபு நஸீர் | :– | சாந்தன் |
| செல்வம் பெர்னாண்டோ | :– | கோகிலா |
| ஆர். மணிமேகலை | :– | கண்மணி |
| ஆர். மகேஸ்வரி | :– | சரோஜா |
| ஆர்.எஸ். சிதம்பரம் | :– | ஸ்ரீதர் |
| ஆர்.எஸ். ராஜா | :– | சிவா |

| | | |
|---|---|---|
| நாடகம் மேடையேறிய தினம் | :– | 21.09.1995 மாலை 6 மணி |
| நாடகம் மேடையேறிய இடம் | :– | டவர் மண்டபம் (மருதானை) |
| தயாரிப்பு | :– | வி. ஜெகன்னாதன் |
| | :– | எஸ்.வி.ரஞ்சன் |
| இசை | :– | "தேசிய பாடகர்" வி. முத்தழகு |
| ஒப்பனை | :– | எஸ்.மனோஜ். |
| ஒளி | :– | எஸ்.சரவணா |
| அனுசரணை | :– | எம்.அன்பழகன் (அகில இலங்கை தெலுங்கு காங்கிரஸ் –நாடக விழா) |

**கதை, வசனம், நாடகவாக்கம் : பேராதனை ஏ.ஏ.ஜுனைதீன்**

## காட்சி: 1.

*இடம்: சாந்தன் வீடு (வராந்தா) .* *காலம்: முற்பகல்.*

*(சாந்தன் பத்திரிகை படித்துக் கொண்டிருக்கிறான். அவன் தாய் கோகிலா தேநீர் கொண்டு வந்து வைத்துவிட்டு அவனருகே கதிரையில் அமர்கிறாள். வெளியே தபால்காரனின்குரல்....)*

தபால்: (குரல்) லெட்டர்.

(கோகிலா எழுந்து சென்று கடிதத்தை வாங்கி, பிரித்து படித்தவாறே வருகிறாள்.)

சாந்: யாரம்மா எழுதியிருக்காங்க...?

கோகி: எங்களுக்கு கடிதம் எழுத யார் இருக்காங்க.. சாந்தன்! உன் தங்கச்சி கண்மணி தான் எழுதியிருக்கிறா!

(பிரித்த கடிதத்தை சாந்தனிடம் நீட்ட, அவன் வாங்கிப் படித்து விட்டு...)

சாந்: ரெண்டு வாரத்துக்கு முந்தி தான் 1000 ரூபா அனுப்பினேன். அதுக்குள்ள 500 ரூபா அவுசரமா தேவைன்னு எழுதியிருக்கிறா...!

கோகி: ம்...யூனுவசிட்டில படிக்கிறதுன்னா லேசு பட்ட விஷயமா? பெரிய பெரிய பணக்காரங்களே திண்டாடுகிற நேரம், எங்களப் போல ஏழைங்க பாட்டக் கேட்கவா வேணும்!

சாந்: அம்மா! பேராதனை யூனுவசிட்டிய அவசரமா மூடியாச்சாம் அங்க படிக்கிற எல்லாரையுமே உடனடியாக வெளியேறச் சொல்லிட்டாங்களாம்.. பேப்பர்ல இருக்கு! தங்கச்சி பேசாம நேத்தே வீட்டுக்கு வந்திருக்கலாம்.

கோகி: பேராதனையிலிருந்து கொழும்புக்கு வரவும் போகவும் லேசுபட்ட செலவா...?

சாந்: இவ பொம்புளப் புள்ளத்தானே.. யூனுவசிட்டிய மூடின கையோட வீட்டுக்கு வந்துட்டா எங்களுக்கு நிம்மதி தானேம்மா...!

கோகி: போன முறை லீவுல வீட்டுக்கு வந்தப்போ ஏதும் குழப்பம் அது இதுன்னா நேரா வீட்டுக்கு வந்துடுன்னு நான் அவகிட்ட சொன்னேன்! அவ தங்கி இருக்கிற வீட்டுல சாப்பிட்டாலும் சாப்பிடா விட்டாலும்.. தங்கினாலும் தங்கா விட்டாலும் மாசா மாசம் தவறாம போடிங் பீஸ் கட்டணுமாம்.. இங்க வந்துட்டா அது அநியாயம்ன்னு சொல்றா.. இங்க வந்து சும்மா இருக்கிறத விட ... அங்க இருந்தா அவ சினேகிதிகளோட இருந்து படிக்கிறது பிரயோசனமா இருக்கும்ன்னு சொல்றா...!

சாந்: ம்.. அதுவும் சரி தான்!

கோகி: ம்...அது சரி சாந்தன்! இப்ப அனுப்புறதுக்கு காசுக்கு என்ன செய்யப் போற?

சாந்: அன்டைக்கு கடையில மொதலாளிகிட்ட மேலதிகமாத்தான் வாங்கினேன்! இதையும் கேட்டு அனுப்புறேன்!

கோகி: தங்கச்சிட படிப்பு செலவு நாளுக்கு நாள் கூடிகிட்டே வருது! நீ கடையில சேல்ஸ்மனா இருந்து வாங்குற சம்பளத்துல எப்படியப்பா இந்த செலவுகள ஈடுகட்ட போற....?

சாந்: ம்... எனக்கு தெரிஞ்ச சில கடைகள்ல அவுங்க கணக்கு வழக்குகள எழுதி கேக்குறாங்க.. கடையில இருந்து வந்ததும் வீட்டுல இருந்தே அந்த வேலைகளை செய்யலாம்ன்னு நெனைக்கிறேன்ம்மா...!

கோகி: தகப்பனுக்கு தகப்பனா இருந்து தகப்பன் இல்லாத குறையெ தீர்த்து வைக்கிற உன் போல... வீட்டுக்கு ஒரு மகன் இருந்தா, எந்த வீட்டுலயும் எந்தக் குறையும் இருக்காதப்பா......!

சாந்: எனக்கு புகழ்ச்சி பிடிக்காதம்மா...

கோகி: உண்மையெத் தானே சொன்னேன்... ஆமா இவர் பெரிய அரசியல்வாதி!

சாந்: அரசியல்வாதி மட்டுமா புகழ்ச்சியெ விரும்புறான்! மன்றம்ங்குற பெயர்ல லெட்டர் ஹெட் அடிச்சு வச்சுக்கிட்டு ஒன்னுமே பண்ணுறதில்ல.. ஆனா பத்திரிகைகளுக்கு அறிக்கைகள் மட்டும் விட்டுட்டு இருப்பாங்க!

தமிழே ஒழுங்கா பேச வராதவங்க தமிழ் மணியாகிடுவாங்க! நாடகம்.. சினிமா பார்க்காதவன் கூட இன்னைக்கு கலைமணின்னு.. கலைபிரம்மான்னும் மார் தட்டிக்கிட்டு இருக்கிறானுக. இன்னும் சிலர் ஆள், கால், வால் புடிச்சு முதலாம் பரிசை வாங்கிக் கொண்டு படம்போட பேப்பர் கந்தோர் வழிய திரிவாங்க! விருந்து... விருதுன்னு வாய் கூசாம மான ரோசமில்லாம கேட்டு வாங்குறானுக! அம்மா விருந்தும் விருதும் நம்மளத் தேடி வரனும்! நாம அதெ தேடிப் போனா அது விருந்தும் இல்ல.. விருதும் இல்ல.. அதுக்குப் பேர் தான் பிச்சை!

கோகி: டேய் என்னையே சந்தேகப்படுறியாடா...!

சாந்: சரி.. அத விடம்மா... சும்மா கேலிக்கு சொன்னா.. கோபிச்சுக்கிறீயே.. (கவலை ததும்ப) அப்பா இருக்கிற நேரம் நல்லா உழைச்சாரு.. என்னையும் தங்கச்சியையும் முடிஞ்சளவு படிக்க வைக்கனும்ன்னு ஆசப்பட்டார்... என்ன செய்றது....? எங்கட துரதிஷ்டம்.... அற்ப ஆயுசுலயே அவர் எங்கள விட்டுப் பிரிஞ்சிட்டார்...ம்... அவர் போயும் விளையாட்டப் போல மூனு வருஷமாச்சு...!

கோகி: உன்ன ஒரு டொக்டராக்கனும்ன்னு தான் அவர் ரொம்ப ஆசப்பட்டார்...!

சாந்: அந்த ஆசயத்தான் என் தங்கச்சி கண்மணியெ படிக்க வச்சு ஈடுகட்டப் போறேன்!

கோகி: கடவுள் தான் உன் முயற்சிக்கு கைக் கொடுக்கனும்... ம்.. பக்கத்து தெருவுல காதர் நானாவோட மனுசி விழுந்து கால் முறிஞ்சிட்டுதாம்... பார்த்துட்டு வந்துடுறேன்!

சாந்: நாளைக்கு போங்களேன்ம்மா...!

கோகி: இன்னைக்கு ஞாயிற்றுக்கிழமை நீ வீட்டுல இருக்கிற நேரம் நான் போயிட்டு

வந்தாத்தான்.. ..சீக்கிரம் வந்துடுறேன்! சாப்பாடு எடுத்து வச்சிருக்கேன், சாப்பிடு.

(கோகிலா வீட்டினுள்ளே போகிறாள்)

(சாந்தன் மீண்டும் தங்கையின் கடிதத்தை வாசிக்கிறான். கோகிலம் தனது ஆடையை சீர் செய்து கொண்டு உள்ளே இருந்து வந்து கொண்டே...)

கோகி: ம்... நான் வர்ரேன்!

சாந்: சரியம்மா...!

(கோகிலா போகிறாள். சாந்தன் பத்திரிகை படிக்க ஆரம்பிக்கிறான். சிறிது நேரத்தில் சாந்தனின் மாமன் மகளும் காதலியுமான சரோஜா வருகிறாள்)

சரோ: மாமி...(உரத்து) மாமி!!

சாந்: அம்மா வெளியே போறவரைக்கும் ஒளிஞ்சு இருந்து பார்த்துட்டு அப்புறம் ஒன்னும் தெரியாத மாதிரி மாமி,மாமின்னு குயில் மாதிரி கூவிக்கிட்டு வர்ர இல்ல.

சரோ: உங்கம்மா எப்போ வெளியே போனாங்கன்னு நான் ஒன்னும் கிளி ஜோஷ்யம் பார்த்துட்டு வரல்ல.

சாந்: அப்போ இது ஆலமரத்தடி ஜோஷ்யமா...?

சரோ: (பொய்க் கோபத்துடன்) மாமி எங்கே...? உள்ளே இல்லையா?

சாந்: இருந்தாத்தான் நீ கோட்டான் மாதிரி கூவினதைக் கேட்டு ஓடி வந்திருப்பாங்களே..?

சரோ: என்ன... கோட்டானா...?

சந்: சே... சே.. குயில் மாதிரின்னு சொன்னேன்...!

சரோ: எனக்கு வேறு மாதிரி கேட்டிச்சு! சரி! அத்தான், மாமி எங்கே?

சார்: பக்கத்து தெருவுல இருக்காங்களே! அவுங்க ஆருயிர்த் தோழி! அவங்க காதல் முறிஞ்சிருச்சு...ன்னு..

சரோ: என்னது.. காதலா?

சாந்: சே..சே... கால் முறிஞ்சுடிச்சுன்னு பார்க்க போனாங்க!

சரோ: (போலி கோபத்துடன்) நீங்க என்னோட இப்படி ஏட்டிக்கு போட்டியா பேசிக்கிட்டிருந்தா நம்ம காதலோட காலும் முறியும்... கவனம்...!

சாந்: பரவாயில்ல.. டேக் இட் ஈஸி... ரோஸ்... நொண்டிக் காதலர்களுன்னு நம்மை இலக்கியம் வர்ணிக்கும்....!

சரோ: ஆமா.. இவர் பெரிய ஹீரோ.... (மேசை மேலுள்ள கடிதத்தைக் கண்டு) இதென்ன கடிதம் அத்தான்?

சாந்: தங்கச்சி எழுதியிருக்கா...!

சரோ: நான் மறந்தே போயிட்டேன்.. முந்தா நாள் பேராதனை யூனுவசிட்டில பெரிய

குழப்பமாம். நாலு மணித்தியாலத்துக்குள்ள எல்லா ஸ்டூடென்சையும் வெளியேற சொல்லிட்டாங்களாம். ரேடியோவுல கேட்டேன்! நான் நெனைச்சேன் கண்மணியும் வந்திருப்பான்னு....!

சாந்: இங்க வந்தாலும் போடின் பீஸ் கட்டனுமாமே.. அது தான் அங்க இருந்தே படிக்கிறா.

சரோ: அதுவும் சரி தான்...!

சாந்: ஏய்... உங்க வீட்டுல எல்லாம் சௌக்கியமா...? மாமி. மாமா... ரௌடி ரங்கன்.. அது தான் ஒன் அண்ணன் மாணிக்கம் எல்லாம் சௌக்கியமா...?

சரோ: எல்லோரும் சுகமா இருக்கிறாங்க.. ஆனா, எனக்கு மட்டும் தான் சுகமில்ல...!

சாந்: குத்து கல்லு மாதிரி நிக்கிற.. ஒனக்கென்ன கேடு!

சரோ: கேடு எனக்கு மட்டுமில்ல.. நம்ம ரெண்டு பேருக்கும் தான்.. ஏன்னா.. எனக்கு வேற எடத்துல கல்யாணம் பேசினா என்னான்னு யோசிக்கிற அளவுக்கு எங்க வீட்டுல நெலமை மாறிடிச்சி....!

சாந்: சரோ.. நீ என்ன சொல்ற...?

சரோ: உங்களை எதிர்பார்த்துக்கிட்டிருந்தா என் கல்யாணம் இந்த ஜென்மத்துல நடக்காதாம்.. என் கல்யாணத்த முடிக்காத வரைக்கும் அவங்களுக்கு நிம்மதி இல்லையாம்! நீங்க சீக்கிரமா என்னைக் கல்யாணம் செய்து கொள்ள இல்லேன்னா.. நிச்சயமா எனக்கு இன்னொரு எடத்துல கல்யாணம் நடக்கத்தான் போவுது...!

சாந்: அத நீ ஏத்துக்கிவியா...?

சரோ: வேற வழி...!

சாந்: அப்போ... நீ என்ன முழுமையா விரும்பல்லையா...?

சரோ: ஏன் விரும்பாம...? நீங்க என் முறை அத்தான்.. நானும் நீங்களும் கல்யாணம் செஞ்சுக் கொள்றத எங்க ரெண்டு குடும்பமும் விரும்புது... தங்கச்சி படிப்பு முடியட்டும்ன்னு நீங்க தான் தட்டிக் கழிச்சிக்கிட்டு வர்ரீங்க...

சாந்: சரோஜா! தங்கச்சி வாசிட்டிக்கு போய் ஒரு வருஷம் தான் ஆகுது.. அதுக்குள்ள நான் கல்யாணம் கட்டிக்கிட்டா... அவ படிப்பு வீணாகிடும்.. அவ படிப்பு முடிகிற வரைக்கும் நீ எனக்காக காத்திருக்கனும் சரோ...!

சரோ: காலமெல்லாம் நான் உங்களுக்காக காத்திருக்க தயார் அத்தான்! ஆனா அது வரைக்கும் என்னை வீட்டுல காக்க வைக்க என் அம்மா.. அப்பாவுக்கு பொறுமையில்லையே!

சாந்: ஒன்னு பண்ணுரேன்.. எங்க அம்மாவை அனுப்பி மாமா, மாமியோட பேசச் சொல்றேன்... ஓ.. கே...!

சரோ: அத்தான்! என் அண்ணன் மணியப் பத்தித்தான் உங்களுக்கு நல்லாத் தெரியுமே... இந்த ஊர் அறிந்த முரடன்...! உங்க தங்கச்சி படிப்பு முடிஞ்ச பிறகு

தான் நம்ம கல்யாணம் நடக்குமுன்னு சொன்னேன்.. சாந்தன் அவன் தங்கச்சியை பத்தி நெனைக்குறதுன்னா... நான் என் தங்கச்சிய பத்தியும் நெனைக்கனும். சாந்தனோட தங்கச்சி படிச்சு டொக்டராகிடுவா.. அவனுக்காக காத்திருந்த என் தங்கச்சி வீட்டுலயே கெழவியாயிடுவா! இனி சாந்தன நம்பி சரிவராது... சரோஜாவுக்கு வேறிடத்துல மாப்புள பாருங்கன்னு அம்மா கிட்ட சொல்விட்டான் அண்ணன்.!

சாந்: (கவலையுடன்) இப்போ... என்னை... என்ன செய்யச் சொல்ற... சரோ!

சரோ: சீக்கிரமா கல்யாணத்துக்கு ஏற்பாடுபண்ணும்படி மாமிகிட்ட சொல்லச் சொன்னாங்க அம்மா..!

சாந்: இல்ல சரோ... என்னெ நீ மன்னிக்கனும்... என் தங்கச்சி படிப்பு முடியிறவரைக்கும் நான் என்னைப் பத்தி சிந்திக்க தயாராயில்ல... ஐ.. ஏம்.. சொறி....!

சரோ: உங்க தங்கச்சி படிப்புக்கும்.. நம்ம கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தம் அத்தான்....!

சாந்: என்ன சரோ புதுசா கேட்குற...? எனக்கு எல்லாமே என் தங்கச்சிதான். சரோ! இப்ப எனக்கு கெடைக்கிற சம்பளத்துல தான்... நானும் அம்மாவும் சாப்பிடனும். தங்கச்சியோட போடிங் பீஸ், போக்குவரத்து... மத்த செலவுகளையும் பார்க்கனும்.. இதுக்கு இந்த சம்பளம் போதாதுன்னு தான் வேறு சில கடைகள்ல கணக்குகளையும் செய்யலாம்ன்னு இருக்கேன்... இந்த இக்கட்டான நெலைமையில ஒன்ன நான் கல்யாணம் பண்ணிக்கிட்டா.. சரோ! உன் வாழ்க்கையே பாழாகிடும். வறும ஒன்ன தான் நீ அனுபவிக்க வேண்டி வரும்! அதனாலத் தான் தங்கச்சி படிச்சி.. ஒரு உத்தியோகம் கெடைக்கிற வரைக்கும் நான் கல்யாணத்தெப் பத்தி சிந்திக்க மாட்டேன்னு சொல்றேன்!

சரோ: நான் உங்க தாய் மாமன் மகள்! பல வருஷங்களாக உங்களுக்காகவே காத்துக்கிட்டிருக்கேன் சாந்தன்! இது தான் உங்க இறுதியான முடிவா...?

சாந்: என் சந்தோஷத்தை விட, என் தங்கச்சியோட படிப்பு தான் முக்கியம் சரோ...!

சரோ: அப்போ என் கதி?

சாந்: (வேதனையுடன்) உன் அம்மா... அப்பா. பேச்சுக்கு நீ கட்டுப்படு சரோ!

சரோ: (அதிர்ச்சியுடன்) சாந்தன்!

சாந்: இதைத் தவிர எனக்கு வேற வழியே தெரியல்ல சரோஜா!

(அழுகிறான் – சரோவும் அழுகிறாள்)

**மேடை விளக்குகள் அணைந்து, மீண்டும் எரிகின்றன.**

## காட்சி : 2

***இடம்: சாந்தன் வீடு. காலம் : காலை.***

*(கோகிலம் நாற்காலிகளைத் தட்டித் துடைத்துக் கொண்டிருக்கிறாள். இச் சமயம் வாசிற்றியில் படித்துக் கொண்டிருக்கும் அவள் மகள் கண்மணி சல்வாரி ஆடையுடன் மிக ஆடம்பரமாக உள்ளே நுழைகிறாள்.)*

கண்: (ஆனந்தமுடன்) ஹேய்.... அம்மா....!

(கோகிலம் வரண்ட புன்னகையுடன் மகளை வரவேற்கிறாள். பின் அழ ஆரம்பிக்கிறாள். கண்மணி கலக்கமுடன் தாயை அணைத்துக் கொண்டு....)

கண்: (ஆச்சரியமாக) என்னம்மா... என்ன நடந்திச்சி.....!

கோகி: சரோஜாவுக்கு........ வேறு எடத்துல கல்யாணம் முடிஞ்சிடிச்சம்மா.

கண்: (அதிர்ச்சியாக) என்ன.... என்ன... உண்மையாகவா அம்மா...?

கோகி: (அழுதவாறே) ஆமம்மா...!

கண்: இப்போ அண்ணா எங்கம்மா...?

(உள்ளேயிருந்து வாடிய முகத்துடனும் தளர்ந்த நடையுடனும் சாந்தன் வருகிறான். அவனை கலவரமுடன் நோக்கிய வாறே....)

கண்: அண்ணா... இது..?.

சாந்: கண்மணி..! (சாந்தன் முகத்தை தன் கரங்களால் மூடிக் கொண்டு விம்முகிறான்)

கண்: யூ டோன்ட் வொறி அண்ணா... உண்மையிலேயே உன் மீது சரோஜாவுக்கு பாசம் இருந்திருந்தா நிச்சயமா வேறொருத்தன கட்ட சம்மதிச்சி இருக்கவே மாட்டா அண்ணா..!

கோகி: சரோஜாவை குறை சொல்லாதே கண்மணி!

கண்: பின்னே யாரையம்மா குறை சொல்றது?

கோகி: எல்லாத்துக்கும் உன் அண்ணா தான் காரணம்!

கண்: அண்ணா...! அம்மா சொல்றது உண்மையா அண்ணா.?

(அவனிடம் அமர்ந்து அவன் முகத்தை ஏறிட்டு நோக்குகிறாள். தங்கையை ஏறிட்டு நோக்கும் சாந்தன் குலுங்கி குலுங்கி அழுகிறான்.)

கண்: நீ அழாதே அண்ணா....!

(வேகமாக தன் தாயை நோக்கி வரும் கண்மணி...)

கண்: அம்மா! சரோஜா ஒரு துரோகி!

சாந்: அவளை அப்படி சொல்லாதே கண்மணி!

கண்: ஏன் அண்ணா.. அவள் தானே உனக்குத் துரோகம் செய்தா...!

சாந்: இல்ல கண்மணி!

கண்: (ஆச்சரியமாக) இல்லையா.. அப்போ...

சாந்: நான் தான் அவளுக்கு துரோகம் பண்ணிட்டேன்...!

கண்: அம்மா... (தாயிடம் ஓடி வருகிறாள்.) அம்மா எனக்கு எதுவுமே வெளங்கல்லையே.. என்ன நடந்ததம்மா... எனக்கு ஒன்னுமே புரிய மாட்டேங்குதே...!

கோகி: சரோஜாவை சீக்கிரமா கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொல்லி அவங்க வீட்டால எங்களைக் கேட்டாங்க!

கண்: இனி செய்ய இருந்தது தானேம்மா...!

கோகி: நானும் உன் அண்ணாகிட்ட அப்படித்தான் சொன்னேன்.. ஆனா..

கண்: ஆனா என்னம்மா.. சரோஜா மாட்டேன்னு சொல்லிட்டாளா...?

கோகி: ஒன் அண்ணா தான் மாட்டேன்னு சொல்லிட்டான்!

கண்: ஏன் அண்ணா.. அவ வேற யாரையாவது...

சாந்: (பதற்றமுடன்) ச்சீ... அவ அப்படிப்பட்டவளில்ல கண்மணி...!

கண்: பின் ஏனண்ணா இப்படி நீ செஞ்சிட்ட...? அவள் உன் மீது உயிரையே வச்சு இருந்தாளே...!

கோகி: கண்மணி! இப்போ கெடைக்கிற அவன் சம்பளம் எங்கட செலவுக்கும்.. உன் படிப்புக்குமே பத்தல்ல... வர.. வர உன் படிப்பு செலவு கூடிக்கொண்டே வருகுது. அதனால இப்ப சரோஜாவ கல்யாணம் பண்ணிக்கிட்டா ஒன் படிப்பு கெட்டுடும்ன்னு.. ஒன் படிப்பு முடிகிற வரைக்கும் கல்யாணம் கட்ட முடியாதுன்னு சொல்லிட்டான்...!

கண்: (பேராவலுடன்)... அண்ணா.... ! உன் தங்கையா பிறக்க நான் எவ்வளவு புண்ணியம் செய்திருக்கணும்!

சாந்: கண்மணி இந்த ஒலகத்துல எனக்கு நீ ... உனக்கு நான்.. எங்க இரண்டு பேருக்குமே அம்மா தான் எல்லாம். ஆயிரமாயிரம் சரோஜாக்களை தேடிக் கொள்ள முடியும்... என் உயிருக்குயிரான உன்னெ, தங்கச்சியா என்னால தேடிக்க முடியுமா...?

கோகி: சரோஜாவ அவள் வீட்டுல சீக்கிரமா கல்யாணம் செய்யச் சொல்லி கட்டாயப் படுத்தினதாலத் தான்... சரோஜா வேறு ஒருத்தன கல்யாணம் பண்ணிக்க நேர்ந்திடிச்சு...! வீட்டுல நெருக்கடி வந்துட்டா அவ எப்படி தாக்கு பிடிக்கப் போறா?

கண்: (பெருமையுடன்) அண்ணா! உன் மாதிரி அண்ணன்மார் இருக்கிறதாக கதைகளிலேயும்...சினிமாவுலேயும்... நாடகங்களிலேயும் தான் படிச்சும் பார்த்துமிருக்கிறேன். தங்கை மேல பாசமுள்ள அப்படிப்பட்ட அண்ணன்மார் இருப்பாங்கன்னு நான் நம்பவே இல்ல... ஆனா... என்கூடப் பொறந்த அண்ணனே இப்படியொரு தியாகியாக இருப்பான்னு நான் நெனைக்கவே இல்ல...(தாயைப் பார்த்து) அம்மா...! அம்மா! இப்படியொரு தியாகியெ

பெறுகிறதுக்காக நீ என்னம்மா புண்ணியம் செய்தே...! (தாயைக் கட்டிக் கொண்டு விம்முகிறாள். கோகிலாவும் அழுகிறாள்.)

கண்: அண்ணா! காதலர்கள்னா உயிரும் உடலும் போல இருக்கனும். அதுல ஒன்னு இல்லன்னா.. மற்றொன்னு இருக்க முடியாதண்ணா!

சாந்: ம்..ம்... சொல்றது லேசம்மா... செயல்படுத்துறது தான் கஷ்டம்!

கண்: என்ன கஷ்டம் அண்ணா...? (உணர்ச்சியுடன்) நானாக இருந்தேன்னா சரோஜாவப் போல திசைமாற மாட்டேன்.. என்ன கஷ்டம் வந்தாலும் என் அம்மா... அண்ணா இல்ல, யார் எதிர்த்தாலும் என் பாதையிலிருந்து கடுகளவும் மாற மாட்டேன்! (கண்மணி காதல் போதையில் மிதக்கிறாள். மகளின் பேச்சைக் கேட்ட கோகிலம் பிரமித்து போய் சிந்தனையில் ஆழ்கிறாள். சாந்தன் வியப்போடு தங்கையையும்,தாயையும் மாறி மாறி பார்க்கிறான்.)

கண்: காதல்ங்குறது காட்டாற்று வெள்ளம்... அதெ யாராலும் அணைபோட்டு தடுத்திட முடியாதண்ணா.. சரோஜா அவ அம்மா, அப்பா, அண்ணா எல்லாரையும் எதிர்த்து போராடி இருக்கனும். அவ ஒரு கோழையாயிட்டா.. அவ கோழையாயிட்டா...!

(கோகிலம் வியப்போடு மகளைப் பார்க்க, சாந்தன் கலக்கமோடு தாயைப் பார்க்கிறான்.)

கண்: (தன்னை மறந்து) காதல்ங்குறது மனிதனுக்கு மட்டுமில்லன்னா, சகல ஜீவராசிகளுக்கு மட்டுமல்ல..மரம்.. செடி.. கொடி.. புல் பூண்டுகளுக்கு கூட இருக்கு! உண்மையான காதலுக்கு முன்னால இந்த உலகத்துல உள்ள சகல வஸ்துக்களும் காதலர்களோட கால் தூசுக்கு கூட சமமாகாதண்ணா....!

(சாந்தனும் கோகிலாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்கின்றனர்)

கண்: அன்டைக்கு வாசிற்றியில "காதல்ல சிறந்தவங்க ஆண்களா? இல்ல பெண்களா?" ன்னு ஒரு பட்டி மன்றம் நடந்திச்சு... நான் தான் பெண்கள் அணித் தலைவி. "காதல்ல சிறந்தவங்க பெண்கள் தான்!" ன்னு நான் கொடுத்த லெக்ஷர்ல போய்சுக்கு தண்ணி கேட்டிச்சு!

கோகி: (எரிச்சலுடன்) அப்போ.. மகாவலி ஆத்துல உள்ள தண்ணி எல்லாத்தையும் அந்த போய்ஸ்சுங்க குடிச்சிட்டாங்களாக்கும்.

கண்: நெக்ஸ்ட் வீக் இன்னொரு பட்டிமன்றம் இருக்கு. அதுக்கு தலைப்பு என்ன தெரியுமா...? "பாரதி கண்ட புதுமைப் பெண் யதார்த்தமாகி விட்டாளா?"

கோகி: (எரிச்சலுடன்) ம்... போதும்.. போதும் .. நீ உள்ள போய் உடுப்ப மாத்து...!

(கண்மணி புன்னகையுடன் தாயையும் தமையனையும் பார்த்து விட்டு துள்ளிக்குதித்துக் கொண்டு உள்ளே போகிறாள். தாயும், மகனும் கலவரமுடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர்.)

சாந்: (பலமாகச் சிரித்து) வேல மெனக்கெட்டவன் எல்லாம் பட்டிமன்றம் வச்சே வயிறு வளர்க்கிற காலம் இது. தங்கச்சி என்னம்மா செய்வா?

**(மேடை விளக்குகள் அணைந்து, மீண்டும் எரிகின்றன.)**

## காட்சி : 3.

***இடம்: சாந்தனின் வீடு.*** ***காலம் : பகல்.***

*(கண்மணி வராந்தா சோபாவில் அமர்ந்தவாறே புத்தகம் ஒன்றை புரட்டியவாறு பாடல் ஒன்றை முனுமுனுத்துக் கொண்டிருக்கிறாள். இச் சமயம் கதவு தட்டப்படுகிறது)*

கண்: (சிந்தனையுடன் தனக்குள்) ம்... அண்ணாவும் அம்மாவும் அதுக்குள்ளாக வந்துட்டாங்களா....? (கதவைத் திறக்கிறாள். மகிழ்ச்சியுடன் பின்வாங்கி).. நீங்களா... வெல் கம் டார்லிங்..!

(அவளின் காதலன் ஸ்ரீதர் உள்ளே வந்தவாறே)

ஸ்ரீத: உள்ளே வரலாமா...? (தயக்கமுடன் வீட்டைச் சுற்றும் முற்றும் பார்க்கிறான்)

கண்: (மகிழ்ச்சியுடன்) வெல்கம்... டார்லிங்... வெல்கம். தாராளமாக வரலாம்!

ஸ்ரீத: (தயக்கமுடன்) வீட்டுல...?

கண்: யாருமே இல்ல! அண்ணா, அம்மாவக் கூட்டிக்கிட்டு ஆஸ்பத்திரிக்கு போயிட்டார், வர ரெண்டு மணிக்கு மேலாகும்.

ஸ்ரீத: (தன் கைக் கடிகாரத்தைப் பார்த்து விட்டு) இப்போ மணி 11–30.

கண்: ம்.. உட்காருங்களேன்!

ஸ்ரீத: (அவள் கையைப் பற்றி அன்புடன்) நீ வந்து ஒரு வாரமாகுது... உன்னைப் பார்க்காமல் என்னால இருக்க முடியல்ல கண்மணி.

(அமர்கிறான். கண்மணியும் அவனருகில் இணைந்து அமர்கிறாள்)

கண்: (கெஞ்சலாக) ம்... உங்களுக்கு மட்டுமா அப்படி..? எனக்கும் தான்... என்ன செய்கிறது ஸ்ரீதர். வாசிற்றியில குழப்பம்னு அம்மாவும் அண்ணாவும் என்னை அங்க வர விடுறாங்கல்லையே!

கண்: வாசிற்றி குழப்பத்த அரசாங்கம் எப்படியும் அடக்கிடும். ஆனா.. என் மனசுல உள்ள உன் பிரிவுக் குழப்பத்த நீ தானே அடக்கனும். அதுதான் உன்னைப் பார்க்க நான் ஓடோடி வந்தேன் கண்மணி.

கண்: இருங்க ரீ கொண்டு வாரேன்..

(கண்மணி எழுகிறாள், அவள் கையைப் பற்றி இழுத்து மீண்டும் தன்னருகே அமரச் செய்து)

ஸ்ரீத: அத பிறகு பாப்போம்.. அதுக்கு முன்னால முக்கியமான ஒரு விஷயம்!

கண்: (கலக்கமுடன்) என்னது ஸ்ரீதர்...?

ஸ்ரீத: பயப்பட ஒன்னுமில்ல. எனக்கு அவசரமாக ஒரு தவுசண் ரூபீஸ் வேணும்!

கண்: மை கோட்!

ஸ்ரீத: என்ன? நீ இப்படி வாயெப் பிளந்துட்ட...?

கண்: இப்போ உடனடியா எடுக்க இருக்காதே ஸ்ரீதர்!

ஸ்ரீத: எனக்கு ஒரு முக்கியமான அவசர தேவ கண்மணி!

கண்: அன்டைக்குக் கூட அண்ணா சிரமப்பட்டுத் தான் ஆயிரம் ரூபா அனுப்பியிருக்கிறார்.

ஸ்ரீத: (சற்று அவசரமாக எழுந்து) ம்... அப்போ, என் அவசரம் உன் அவசரமில்லையா...?

கண்: (சிந்தனையுடன் எழுந்தவாறே) ம்... என்ன செய்யிறது... ம்... இந்தாங்க.. இத அடகு வச்சு எடுங்க! (தன் கையிலுள்ள வளையலைக் கழற்றி கொடுக்கிறாள்.)

ஸ்ரீத: (வாங்கிக் கொண்டே) வீட்டுல கேட்டாங்கன்னா...!

கண்: நான் அதெ சமாளிச்சுக் கொள்றேன். நீங்க இருங்களேன். நான் ரீ கொண்டு வர்ரேன்.

ஸ்ரீத: தேவையில்ல கண்மணி! அண்ணாவும் அம்மாவும் வந்துட்டாங்கன்னா?

கண்: அவங்க வர எப்படியுமே ரெண்டு மணிக்கு மேலாவும்

ஸ்ரீத: ம்.. நீ எப்போ வரப்போற?

கண்: (சிறிது யோசித்து விட்டு) ம்... நீங்க போனதும் வாசிற்றியில இருந்து கொடுக்கிறதப் போல எனக்கொரு தந்தி கொடுங்க! நான் உடனே புறப்பட்டு வர்ரேன்!

ஸ்ரீத: (குதூகலத்துடன்) வெரிகுட்! அப்போ நான் வரட்டுமா?

கண்: (கெஞ்சலாக) கொஞ்சம் நின்னுட்டு போங்களேன் ஸ்ரீதர்.

ஸ்ரீத: (அன்புடன் அவள் கைகளைப் பற்றிக் கொண்டே) இல்ல கண்மணி! அவசரமா போகனும். போனதும் நான் இன்னைக்கே தந்தி கொடுத்துடுறேன். நாளைக்கு பேராதெனியில சந்திப்போம்! நான் வர்ரேன்.

( கண்மணி வாசல்வரை வந்து வழியனுப்ப, ஸ்ரீதர் போகிறான்.)

(கண்மணி கதவைச் சாத்திவிட்டு உள்ளே போகிறாள் சற்று நேரத்தில் கதவு தட்டப்படுகிறது. கதவைத் திறந்தவள் கோகிலாவையும் சாந்தனையும் கண்டு திடுக்கிட்டு பின் வாங்கிக் கொண்டே..)

கண்: இன்னைக்கு சீக்கிரமா வந்துட்டீங்களே... என்னம்மா காரணம்...?

கோகி: இன்னைக்கு டொக்டர்மாரெல்லாம் ஸ்டிரைக்காம்!

(சாந்தனும், கோகிலாவும் உள்ளே நுழைகின்றனர். சாந்தன் சோபாவிலுள்ள புத்தகம் இருந்த இடத்தில் கையிலிருந்த பத்திரிகையை போட்டுவிட்டு, மறு கையிலுள்ள மரக்கறி பையை கண்மணியிடம் கொடுத்து விட்டு....)

சாந்: ப்..பூ என்னா வெயில்!

(கோகிலம் உள்ளே செல்கிறாள்.அறையினுள் சென்ற சாந்தன் ஆடை மாற்றிக் கொண்டு வந்து முன்னர்தான் அமர்ந்திருந்த செற்றி ஆசனத்தின் மேல் போடப்பட்ட பத்திரிகையை எடுக்கிறான். அவன் பார்வை அந்த ஆசனத்தில் நிலைகுத்தி நிற்கிறது.)

(கலவரத்துடனும், அதிசயத்துடனும் பத்திரிகை இருந்த இடத்திலிருந்து ஒரு தடித்த மணி பேர்சை எடுக்கிறான். ஆச்சரியமுடன் அதைப் பார்த்தவன் பின் விரித்து பார்த்து, அதிலுள்ள புகைப்படத்தைக் கண்டு ஆச்சரியடைகிறான். அதனுள்ளே இருக்கும் பொருட்களை எடுக்கிறான். அடையாள அட்டை இருக்கவே அதனுடன் புகைப்படத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கிறான்.)

(அதன் பின்னர் அதிலிருந்து சில கடிதங்களை எடுக்கிறான். கண்மணியின் கையெழுத்தைக் கண்ட சாந்தன் திகைத்துப் போய் வாசிக்கிறான்.)

(கண்மணியின் குரல்.....)

என் அருமை ஸ்ரீதர்!

நீங்கள் கேட்ட 500 ரூபா இத்துடன் உண்டு. இன்று மாலை ஆறு மணி ஷோவுக்கு நான் ரீகல் தியேட்டரில் நிற்பேன். வரவும். மற்றவை நேரில். இப்படிக்கு, உங்கள் கண்மணி.

(படபடவென மற்றும் கடிதங்களை வாசிக்கிறான். எல்லாம் கண்மணியின் கையெழுத்து, பைத்தியக்காரனைப் போல் கண்மணி வைத்துச் சென்ற புத்தகத்தை கிளறுகிறான்.)

(அதிலிருந்து படம் ஒன்று தரையில் விழுகிறது. எடுத்துப் பார்க்கிறான். அதுவும் அதே படம். நிலை தடுமாறி சோபாவில் பின் நோக்கிச் சாய்கிறான்.

கண்மணி வந்து புத்தகத்தை எடுத்துக் கொண்டு உள்ளே செல்கிறாள். சாந்தனின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுக்கிறது. மௌனமாக துடைத்துக் கொள்கிறான்.)

(சற்று நேரத்தில் கண்மணி வந்து, அண்ணன் கண்டு கொள்ளாதவாறு புத்தகம் இருந்த இடம், சோபாவின் கீழ், தரை எல்லா இடங்களையும் மிகவும் கலவரத்துடன் எதையோ தேடிப் பார்க்கிறாள். கண்மணியின் நடமாட்டத்தைச் சாந்தன் கலவரத்துடன் உன்னிப்பாக கவனிக்கிறான். உள்ளே இருந்து கோகிலா தேநீருடன் வருகிறாள்.)

கோகி: அண்ணாவுக்கு தேநீர்க் கொடுன்னு ரெண்டு தடவ சொல்லிட்டேன்.. நீ இங்க வந்து நிக்கிறீயே...!

கண்: இந்தாப் போறேன்! (உள்ளே விரைகிறாள். கலவரத்துடன் தண்ணீர் கிளாசைக்கொண்டு வந்து சாந்தனிடம் நீட்டுகிறாள். கையில் தேநீருடன் அமர்ந்திருக்கும் சாந்தன் தங்கையை கலவரமுடன் ஏறிட்டுப் பார்க்கிறான்.)

கோகி: யாருடி இப்ப தண்ணி கேட்டாங்க..?

கண்: நீங்க தானே இப்ப தண்ணி கொண்டு வந்து கொடுக்கச் சொன்னீங்க...!

கோகி: தேத்தண்ணிய கொண்டு வந்து கொடுன்னா.. நீ தண்ணியெ கொண்டு வந்து நீட்டுறியே... நீ என்ன குடிச்சிப் போட்டாடி இருக்கிற...?

கண்: (தடுமாற்றமுடன்) என்னம்மா சொல்றீங்க...?

கோகி: என்ன உனக்கு மயக்கமான்னு கேட்டேன்?

சாந்: (தழுதழுக்கும் குரலில்) காதல் மயக்கம்!

கண்: (கலக்கமுடன்) யாருக்கண்ணா... உனக்கா..?

சாந்: அது எனக்கா.. இல்ல உனக்கான்னு இதெப்பார்த்ததும் உனக்கே புரிஞ்சிடும்.. அம்மா! இவளுக்கு இனி படிப்பு சரிபட்டு வராதம்மா.. இதுகளப் பாருங்கம்மா!

(சாந்தன் தன் கையிலுள்ள மணி பேர்சை பிரித்து அதிலுள்ள ஸ்ரீதரின் படத்தை தாயிடம் காட்டுகிறான். அதைக் கண்டு அதிர்வுற்று தடுமாறியபடி இரண்டடி முன்னால் வருகிறாள் கண்மணி.)

கோகி: (எதுவும் புரியாமல்) நீ என்ன சாந்தன் சொல்லுற?

சாந்: அம்மா! வாசிற்றிக்குப் போனா அங்குள்ள பெண்களுக்கு என் தங்கச்சி கண்மணி ஒரு முன் மாதிரியாக இருப்பாள்ன்னு நெனைச்சேன்! ஆனா.. அவ எங்க ஆசைகள் எல்லாத்துலயுமே ஒரேயடியா மண்ணை அள்ளி போட்டுட்டாளம்மா...!

கோகி: (கோபத்துடன்) இப்ப அவ என்ன செஞ்சிட்டா?

சாந்: அம்மா... சொர்க்க... வாசல் இப்ப தொறக்கும்.. இப்ப தொறக்கும்ன்னு ஒருத்தன் சொர்க்க வாசல் கதவையே பார்த்துக்கிட்டு நின்னானாம். அப்படி வருஷக்கணக்கா காத்துக்கிட்டு நின்னும் கதவு திறக்கல்ல! ஆனா.. ஒரு நாள் கதவு திறந்திச்சி.. அப்போ அவன் தூங்கிட்டு இருந்தானாம். அத மாதிரி ஆகிடிச்சம்மா நம்ம கதெ! ஒன் மக, ஒனக்கு சிரமமே இல்லாம ஒரு மருகமன தேடிகிட்டா.

கோகி: (அதிர்ச்சியுடன்) என்னது...?

சாந்: (வேதனையுடன்) ஆமம்மா.. இப்போ அவளுக்கு தேவை, கல்வி இல்லம்மா... கல்யாணம்!

கோகி: (அதிர்ச்சியுடன் மகளைப் பார்த்து) என்னடி...! உண்மையா..?

கண்: (மிக நிதானமாக) அண்ணனுக்குத் தான் பைத்தியம்ன்னா.. உனக்குமா அம்மா பைத்தியம்?

சாந்: (ஆத்திரமுடன்) எனக்கா பைத்தியம்...? அப்போ உன் கையெழுத்துள்ள இந்த கடிதங்கள்..? நீயும் அவனும் ஒன்னா இருந்து எடுத்துள்ள இந்தப் படங்கள்... ம்... ! இந்தப் படத்துல உன்தோள் மேல கையைப் போட்டபடி உன்னோட ஒன்னா இருக்கிற இவன் யாரு...? சொல்லு!

கண்: (ஆத்திரமுடன்) இங்க தாங்க...! (பறித்து எடுப்பதற்காக தன் முன்னால் பாய்ந்து வரும் கண்மணியை இடைமறிந்த கோகிலம் பிடித்து இழுத்தெடுக்கிறாள்.)

கோகி: (கோபமுடன்) சொல்லுடி.. சொல்லு.. இதெல்லாம்... இங்க எப்படி வந்திச்சி..? ஒன் கூட அந்த படத்துல இருக்கிறவன் யாருடி.. சொல்லு! ஒன் கூட படிக்கிறவனா...?

கண்: (மிக நிதானமாக)... இல்ல!

கோகி: அப்போ.. யாருடி அவன்?

கண்: எங்க போடிங் ஹவுஸ் என்டியோட தம்பி...!

கோகி: (வேதனையுடன்) இதுக்காடி உன்ன படிக்க அனுப்பினேன்.. சொல்லுடி.. சொல்லு!

சாந்: (அன்புடன் இடைமறித்து) சும்மா இருங்கம்மா.. அவ தான் ஏதோ தெரிஞ்சும் தெரியாம செஞ்சிட்டான்னா, நீங்களும் அவளப் போய் அதட்டுறீங்களே!

கோகி: வயது வந்த ஒரு பொண்ணு ஒரு ஆம்புளைக்கு கடிதம் எழுதுறதும்.. ஒன்னா இருந்து படம் புடிக்கிறதும்.. வீட்டுல யாருமே இல்லாத நேரம் ஒரு ஆம்புளைய வீட்டுக்குள்ள எடுக்கிறதும்.. தெரியாம செய்யிற காரியமாடா...!

சாந்: (கண்மணி அருகே சென்று அன்புடன்) இந்தா பாரம்மா கண்மணிங்கிறது ஒன் பெயர் மட்டுமில்லம்மா! எங்க கண்மணியே நீ தானம்மா... நீ படிக்கிறவ,.. படிச்சு ஒழுங்கா பாஸ் பண்ணிடு, அப்புறம் நீ யாரை விரும்புறியோ அவனையே உனக்கு கல்யாணம் செஞ்சு வைக்கிறேன். என் கண்மணியில்ல.. நீ மொதல்ல படிப்ப முடியம்மா... ம்.. அம்மா.. நீயும் இதெ பெரிசு படுத்தாதம்மா..!

கோகி: (கண்டிப்பாக) சரி.. நடந்தது போகட்டும்.. இனிமே இது மாதிரி நடந்து கொள்ளாதே... சரியா..?

கண்: (அழுதவாறே, மிகவும் அழுத்தம் திருத்தமாக) யார் என்ன சொன்னாலும் சரி.. நான் என் முடிவ மாத்திக்க மாட்டேன்!

கோகி: உனக்காகத்தானேடி ஒன் அண்ணன் இவ்வளவு கஷ்டப்படுறான்!

சாந்: கண்மணி! நீ படிச்சு முன்னேறனும்ங்குறதுக்காகத் தான் எனக்காக பல வருஷங்கள் காத்திருந்த நம்ம மாமா மகள் சரோஜாவக் கூட நான் புறக்கணிச்சேன்!

கோகி: இப்படிப்பட்ட தியாகியோட மனத நோகச் செய்யிற நீ உருப்பட மாட்டேடி....!

கண்: அப்படிப்பட்ட தியாகி – என் இஸ்டப்படி நான் வாழ இடமளிக்கலாம் தானே!

கோகி: இடமளிக்கலாம்டி.. ஒன் படிப்புக்காக ஒன் அண்ணா பட்டக்கஷ்டம்... அவன் உனக்காக இழந்த இழப்புக்கள்....!

சாந்: (அன்புடன்)கண்மணி! கோயிலுக்குள்ள இருக்கிறவரைக்கும் தாம்மா... அதுக்கு தெய்வம்ன்னு பேரு! அந்த தெய்வமும் தெருவுல வந்து விழுந்திட்டா, அது வெறும் சிலை தாம்மா!

கோகி: (கண்டிப்பாக) டேய் நீ சும்மா இருடா.. அடியேய் நீ படிச்சு கிழிச்சது போதும்... இனிமே வீட்டுல இருடி

கண்: (உறுதியாக) அது மட்டும் நடக்காதம்மா.

சாந்: வீண் பிடிவாதம் பிடிச்சி நீ ஒன் வாழ்க்கையெ சீரழிச்சுக் கொள்ளாதம்மா.

கண்: (ஆத்திரமாக) நீங்க ரெண்டு பேரும் என்ன சொன்னாலும் சரி. என் முடிவ நான் மாத்திக்க மாட்டேன்.. ஒங்களப் போல ஒரு அம்மாவும் அண்ணாவும் எனக்குக் கெடைச்சதே நான் இந்த ஜென்மத்துல செஞ்ச பெரிய பாவம்.. தூ!... ம் தாங்க அந்த படத்த...! (முன்னே பாய்கிறாள்)

சாந்: ஒனக்கு அவ்வளவு திமிரா..

(சாந்தன் கண்மணியை அடிக்க பாய்கிறான். அதை தடுக்க இடையில் பாயும் கோகிலம் மோதுண்டு தரையில் விழும் போது. மேசை விளிம்பில் தலை அடிப்பட்டு மயங்கி விடுகிறாள். கண்மணி விரைவாக உள்ளே செல்கிறாள். மயங்கிக் கிடக்கும் தாயோடு சாந்தன் பரிதாபமாக தடுமாறுகிறான். கண்மணி தன் துணிமணிகளை அள்ளியெடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறுகிறாள்.

கண்: நீங்க சந்தோஷமா இருங்க... நான் போறேன்.

**(மேடை விளக்குகள் அணைந்து, மீண்டும் எரிகின்றன)**

**காட்சி : 4.**

***இடம். சாந்தன்வீடு.*** ***காலம்: பகல்.***

*(சாந்தன் தோற்றத்தில் உருமாறி, தலைமயிர் இடைக்கிடை நரைத்து தளர்ந்து போய் காட்சியளிக்கிறான். சாந்தன் கடைக் கணக்குகள் எழுதிக் கொண்டிருக்கிறான். இச் சமயம் சரோஜா அங்கே வருகிறாள்.)*

சரோ: (அமைதியாக) சாந்தன்...

சாந்: (அதிர்ச்சியோடு) சரோ... நீயா..(தன்னையறியாமலயே எழுந்து நிற்கிறான்.)

சரோ: என்ன இது... சாந்தன்.. நீங்க ஆளே மாறிட்டீங்களே!

சாந்: (வரட்டுச் சிரிப்புடன்) மனுசன் தான் என்னைக்குமே ஒரே மாதிரி இருக்கிறதில்லையே... சரோ.. நீ மட்டுமா வந்தே...

சரோ: இல்ல... (தலையால் வெளியே இருக்கும் தன் கணவன் சிவாவைக் கூப்பிட, அவர் உள்ளே வருகிறார்)

சரோ: இவர் தான் என் கணவர். நீங்க தான் என் கல்யாணத்துக்குக்கூட வர இல்லையே!

சாந்: கிளாட் மீட் யூ.. உட்காருங்க..(கைக்குலுக்குகிறான்)

சிவா: தேங்கி யூ... நான் சிவா...(அமர்கிறான்)

சாந்: (ஏக்கமுடன் பார்த்து) நீ சந்தோஷமா இருக்கிறியா சரோ...?

சரோ: கடவுளேன்னு எனக்குன்னா எந்தக் கொறையுமே இல்ல..ம்... மாமி எங்க?

சாந்: அம்மாவுக்கு கண் பார்வ வர வர மோசம்.. ஒபரேசன் பண்ணி கண் ஆஸ்பத்திரியில இருக்கிறாங்க.. நான் அந்தியில தான் பார்க்க போவேன்.

சரோ: ம்.. தங்கச்சி கண்மணி இப்போ டொக்டராகி இருப்பாளே!

சாந்: ..................

சரோ: ஏன் ஒரு மாதிரியாயிட்டீங்க...?

சாந்: அவ படிப்புல மட்டுமில்ல, வாழ்க்கையிலேயும் பெயிலாயிட்டா சரோ...!

சரோ: (ஆச்சரியமாக) சாந்தன்! நீங்க என்ன சொல்றீங்க?

சாந்: அவ படிப்பு பாதியிலே நின்னு போச்சி.

சரோ: காரணம்..?

சாந்: காதல்!

சரோ: (வியப்புடன்) யாருக்கு... கண்மணிக்கா....?

சாந்: இந்தப் பூனையும் பால் குடிக்குமான்னு நெனைச்சேன். அது பால் மட்டும் குடிக்கல்ல சரோ.. குடும்ப மானத்துல மண்ண அள்ளிப் போட்டுட்டு, எங்கள ஊருக்குள்ள தலைகாட்ட முடியாமப் பண்ணிட்டு, எவனோ ஒருத்தனோட ஓடிப் போயிட்டா....!

சரோ: அப்போ நீங்க அவளுக்காகப் பட்டக் கஷ்டம்!

சாந்: நெல்லுக்கு இறைச்ச நீர் புல்லுக்கு போன விதமாச்சு. பாலைவனத்துல கானல் நீர தேடுற நிலையாச்சு... மண் வீடு கட்டி மழையில நனைய விட்ட கதையாச்சு.....!

சரோ: ஓ...மை.. கோட்!

(சிவா எழுந்து சாந்தனிடம் வந்து அமைதியாக)

சிவா: சாந்தன்.. இதெல்லாம் இன்னைக்கு இந்த உலகத்துல சர்வசாதாரணம்.. நாம எந்த விஷயத்த எப்படி எடுத்துக் கொள்கிறோமோ, அதன் படித்தான் அதன் தாக்கமும்! எதையும் ரொம்ப சாதாரணமாக நெனைக்கனும் அப்போ எந்தவொரு விஷயமும் எங்களை பாதிக்காது.

சாந்: எல்லாராலேயும் அப்படி நெனைக்க முடியும்ன்னு நீங்க நெனைக்கிறீங்களா?

சிவா: முடியாது தான்.. ஆறுதல் சொல்லுறத விட.. ஏற்றுக் கொள்றது கஷ்டமான காரியம் தான் சாந்தன்.. ஆனாலும் மனிதர்களான நாங்க ஒருத்தருக்கொருத்தர் ஆறுதல் சொல்லிக் கொள்ள வேண்டியது நம்ம கடம இல்லையா...?

சாந்: (அன்புடன்) நன்றி சிவா!

சிவா: சாந்தன்... Love is Blind ன்னு வெள்ளைக்காரன் ஏன் சொன்னான் தெரியுமா? காதல்ங்குற போதையில வாழ்க்கையில இடறி இரவு விழுந்த குழியிலயே பகல்லையும் விழுகிறதாலத்தான். ஆணைப்போல இல்ல பெண்.. ஒரு பெண்ணால ஒரு குடும்பத்துக்கு கெட்ட பெயர் வந்துட்டா... அது பரம்பர பரம்பரையா நெலைச்சி நிற்கும்.. But நடக்க வேண்டியது நடந்து முடிஞ்சாச்சு.. இனி நடக்க வேண்டியது உங்க வாழ்க்கை... அதுக்கு நல்லதொருப் பெண்ணைப் பார்த்து கல்யாணம் பண்ணிக் கொள்ளுங்க...!

(சாந்தனும் சரோஜாவும் வேதனையோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர். இதை சிவா காண்கிறார்)

சிவா: (மறுபுறம் திரும்பி) உங்களுக்கும் சரோஜாவுக்கும் இருந்த காதல் தொடர்பு பத்தி சரோ என்கிட்ட சொல்லிட்டா. என்ன செய்யிறது.. படைச்சவன், அவ தலைவிதிய என்னோட எழுதிட்டானே!

சாந்: (திகைப்புடன்) சிவா.. ஒரு கணவன் தன்னோட முன்னைய காதல மனைவிகிட்ட சொன்னா.. அவ சிரிச்சிக்கிட்டே கேட்பா.. அது அவ தலைவிதி.. ஒரு மனைவியோட முன்னைய காதல தன் கணவன் தெரிஞ்சுக்கிட்டா.. அவன், அவ வாழ்க்கையையே பாழாக்கிடுவான்... ஓ.. சிவா.. உங்களால இத எப்படி ஜீரணிக்க முடியுது..?

சிவா: (மிக அமைதியாக) இந்த உலகத்துல யார் தான் தவறு செய்யல்ல.. நீங்க செய்யல்லையா.. நான் செய்யல்லையா... நான் முன்னசொன்னதப் போல எதையும் லேசா எடுத்துக்கப் பழகணும்.... அப்போ தான் நாம இந்த மண்ணுக்கு மேல நிம்மதியா வாழலாம்.

சரோ: சாந்தன்! இவரோட அம்மாவும் அப்பாவும் கனடாவுல இருக்கிறாங்க... எங்க ரெண்டு பேரையும் அங்க செட்டிலாகிட வரச் சொல்லி எல்லா ஏற்பாடுகளையும் செஞ்சிட்டாங்க!

சிவா: நாங்க ரெண்டு பேரும் அங்கேயே போய் தங்கிட முடிவு பண்ணிட்டோம்!

சரோ: நாட்ட விட்டே போக முடிவு பண்ணிட்டீங்களா சரோ.?

சரோ: அவர் முடிவு தானே என் முடிவும்!

சிவா: இனி எங்களுக்கு இங்க வர்ர நோக்கமே இல்ல சாந்தன். அதனால எங்களுக்கு இங்குள்ள சொத்துக்கள என்ன செய்கிறதுங்குற பிரச்சினை வந்திடிச்சு. உங்க பெயருக்கு எழுதிடச் சொல்லி சரோ தான் சொன்னா...!

(சாந்தன் இருவரையும் மாறி மாறி பார்க்கிறான்)

சிவா: இந்தாங்க அந்த டீட்... வாங்கிக் கொள்ளுங்க.. உங்க பெயருக்கு ஏற்கனவே நான் எழுதி முடிச்சிட்டேன்.

(சாந்தன் தயக்கம் காட்டுகிறான்.)

சரோ: வாங்கிக் கொள்ளுங்க சாந்தன்.

(சாந்தன் தயங்குகிறான்.)

சிவா: வாங்கிக் கொள்ளுங்க.. சாந்தன்.. இந்த வீட்ட விட்டு என் ஊருக்கு போயிடுங்க.. அப்போ இந்த ஊர்ல உங்களுக்கிருக்கிற மானப் பிரச்சினை தீரும்.. மனதுலயும் ஒரு ஆறுதல் பிறக்கும்!

சாந்: (பைலை வாங்கிக் கொண்டே) இதற்கு நான் என்ன கைமாறு....(விம்முகிறான்)

சிவா: (மிகவும் நிதானமாக) சாந்தன்! எனக்கு நீங்க ஒரேயொரு கைம்மாறு செஞ்சா மட்டும் போதும்!

சாந்: சொல்லுங்க சிவா! சொல்லுங்க.. மனிதர்கள்ல மாணிக்கமான உங்களோட வேண்டுகோள நான் நிச்சயம் புறக்கணிக்க மாட்டேன்.. சொல்லுங்க சிவா... நான் என்ன செய்யனும்.. சொல்லுங்க...(கைகளைப் பற்றிக் கொள்கிறான்.)

சிவா: (அமைதியாக) நான் உங்க வாழ்க்கையில வசந்தத்த விரைவா எதிர்பார்க்கிறேன்...!

சாந்: சிவா! (அழுகிறான்.)

சரோ! (சாந்தனின் அருகில் சென்று) நாங்க வரட்டுமா..?

(சாந்தன் கலக்கமுடன் தலையசைக்கிறான்.)

சிவா: (சரோஜாவை நோக்கி) சரோ! உனக்கு அவரோட ஏதும் தனிமையில பேசனுமா..?

சரோ: இல்ல...(கலங்குகிறாள்.)

சாந்: மனிதர்கள்ல தெய்வம் இருக்குன்னு நான் கேட்டிருக்கிறேன்.. படிச்சிருக்கேன்.. ஆனா.. இப்போ தான் நேர்ல பார்க்கிறேன்..!

(சிவாவை அணைத்துக் கொள்கிறான்.)

**(மேடை விளக்குகள் அணைந்து மீண்டும் எரிகின்றன.)**

## காட்சி : 5.

***இடம்: சாந்தனின் புதிய வீடு. காலம் : பகல்.***

*(சிவா அன்பளிப்பாகக் கொடுத்த வீட்டின் வராந்தாவில் அமர்ந்து கோகிலா தலைவாரிக் கொண்டிருக்கிறாள். வீட்டினுள்ளே இருந்து அங்கே சாந்தன் வருகிறான்.)*

கோகி: நான் குளிச்சிக்கிட்டிருந்த நேரம் யாரோ வந்துட்டுப் போனாங்களே.. யாரப்பா.. அது..?

(சாந்தன் பதில் சொல்லாமல் அந்த இடத்தை விட்டு நகர்கிறான்.)

கோகி: என்னப்பா.. பேச்சையே காணோம்!

சாந்: (கவலையோடு) அம்மா – உங்க மகள் கண்மணி இப்ப இருக்கிற வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரனம்மா...! உங்க மகள் சுகமா இருக்கிறாளாம். அவன் பெரிய முரடனாம்.. தெனமும் அடியும் உதையும் தானாம்.. போதாத குறைக்கு ஒரு குழந்தையும் இருக்காம்... அது உனக்கு பேத்தியாம்..!

கோகி: ம்.. எனக்கு பேத்தின்னா... உனக்கு மருமகள்... உனக்கு சந்தோஷமில்லையா..?

சாந்: சந்தோஷம் – ஹா. அன்பக் கொட்டி – வளர்த்த அம்மாவோட ஆசையையும், பாசத்தைக் கொட்டிப் பார்த்த இந்த அண்ணனோட பேச்சையும் மதிச்சு நடந்து.. நாங்க பார்த்த ஒரு மாப்பிள்ளைய கட்டிக்கிட்டு ஒரு கொழந்தையெ பெத்திருந்தா... அந்தக் கொழந்த தன் பிஞ்சுக் காலால என் நெஞ்சில உதைச்சி வெளையாட இந்த மார்புல போட்டு வளர்த்திருப்பேன்.. என் கண்மணியோட கண்மணிக்கு என் தோள தொட்டிலாக்கி ஆராரோ.. ஆராரோன்னு பாடி.. தூங்க வச்சிருப்பேனம்மா... அம்மா... அவ எப்படி என் முகத்துல கரியப் பூசிட்டு ஓடினாளோ.... அதே மாதிரி .. அந்த கொழந்த வளர்ந்து, பெரியவளாகி அவ முகத்துல கரியப் பூசிட்டு ஓடனும். அப்போ தானம்மா.. எனக்கு சந்தோஷம்.

கோகி: வேணாம்ப்பா... வேணாம் .... கொல்ல வரும் விரோதிக்குக் கூட எங்கட நெலம ஏற்பட வேணாம்ப்பா...!

சாந்: (வேதனையுடன்) அவளுக்காக நான் என் சரோஜாவை இழந்தேன்... மானம் மரியாதை எல்லாத்தையும் இழந்தேன் – இன்னைக்கு ஓடிப்போனவளோட அண்ணன்ங்குற அவமானப் பட்டத்தோட வாழ்ந்துகிட்டிருக்கேன்!

கோ: போனதைப் பேசி என்னப்பா நடக்கப் போவுது?

சாந்: உலகத்துல எல்லாத்தையும் மறந்துடலாம். மறைச்சுடலாம்.. ஆனா.. ஒரு பெண்ணால ஏற்படுற தலைக்குனிவ மட்டும் மறக்கவும் முடியாது..மறைக்கவும் முடியாதம்மா. அது பரம்பரை பரம்பரையா தொடர்ந்துகிட்டே இருக்குமம்மா...

(தோகிலா மௌனமாக இருக்கிறாள். அவள் அருகே வரும் சாந்தன்...)

சாந்: அம்மா... நான் கொஞ்ச நாளா ... உங்ககிட்ட ஒன்னு கேட்கனும்ன்னு நெனைச்சுக்கிட்டு இருக்கேன்...!

கோகி: இதென்னடா.. அநியாயம்.. இந்த வீட்டுல இருக்கிறதே நீயும் நானும் தான்.. பேச... என்னடா தடை...

(சாந்தன் அவளருகில் வந்தமர்கிறான். கோகிலா அவன் தலையை அன்புடன் வருடுகிறாள்.)

சாந்: அம்மா.. நீங்க தங்கச்சியோட அதிக அன்பா.. இல்ல என்னோட அதிக அன்பா...?

கோகி: (கலக்கமுடன்) நான் ரெண்டு பேரோடையுமே அன்பு தானப்பா....

சாந்: தங்கச்சி எவ்வளவு பெரிய தவறு செஞ்சவ... இன்னும் அவ மேல அன்பு செலுத்த உங்களால எப்படியம்மா முடியுது...?

கோகி: இந்த உலகத்துல அளவிட முடியாததும்... புரிந்து கொள்ள முடியாததும் பெத்தவங்களோட பாசம் தானப்பா. ஒரு குழந்தையெ பெத்தவங்களாளத் தான் பிள்ளைப்பாசம் என்னான்னு புரிஞ்சிக்கொள்ள முடியும். அது இல்லாத வரைக்கும் பெத்த பாசம் என்னான்னே யாராலும் புரிஞ்சுக் கொள்ள முடியாதப்பா!

சாந்: அப்போ... தங்கச்சிக்கு தாய்ப்பாசம் என்னான்னு இப்போ புரிஞ்சிருக்கும்ன்னு நீங்க நெனைக்கிறீங்களம்மா?

கோகி: நிச்சயமா! அவளுக்கு இப்போ தாயோட அருமை புரிஞ்சு இருக்கும்.. இரவு பகலா அவ குழந்தையோட கஷ்டப்படுற நேரம்.. என் அம்மாவும் இப்படித்தானே.. என்னோட கஷ்டப்பட்டிருப்பான்னு.. நிச்சயமா உணர்ந்திருப்பா.

சாந்: நான் அவளுக்கு அடிக்கப் போக.. நீங்க மோதுப்பட்டு விழுந்ததாலத் தானேம்மா... உங்க கண்பார்வையில பாதிப்பு ஏற்பட்டிச்சு.. ஏம்மா உங்களுக்கு என் மேல கோபமில்லையே!

கோகி: இல்லடா.. என் கண்ணா.. அந்த அடி அவளுக்குப் பட்டு அவ கண்பார்வை கொறைகிறத விட, என் பார்வை கொறைஞ்சதுக்காக நான் சந்தோஷப்படுறேன் சாந்தன்!

சாந்: (வியப்புடன்) உண்மையாகவா.. அம்மா...!

கோகி: அது தாண்டா தாய்ப்பாசம்.. தன் பிள்ளைக்கு ஏதும் நடந்தா தாங்கிக் கொள்ளாது.. தனக்கு வந்தா பொறுத்துக் கொள்ளும்.. அது தான் சாந்தன் தாய்ப்பாசம்ங்கிறது. சாந்தன்! என் கண்மணியான மகனே— உன்னைப் போல ஒரு மகன் ஆயிரம் தாய்மார்கள்ல ஒருத்திக்குத்தான்டா பொறப்பான்.. என் ராஜா – நீ என்கிட்ட குடிச்ச பாலுக்கு .. என்னைக்குமே எனக்கு நீ கடனில்லடா..! என்னைக்குமே நீ கடனில்லடா...!

சாந்: அம்மா.... (ஆனந்தமாக அழுகிறான்.)

(இச்சமயம் கண்மணி கையில் குழந்தையோடு அங்கே அலங்கோலமாக வருகிறாள்.)

கண்: (அலறலுடன்) அம்மா..!

(திடுக்கிட்டு) நீயா...?

(நெருங்கி வந்து) அண்ணா..!

சாந்: (பின்னால் நகர்ந்து) ச்சீ!

கோகி: (பாசம் பொங்க) என் கண்மணி! நீயா....?

கண்: ஆமம்மா... (தாயைக் கட்டிக் கொண்டு அழுகிறாள்.)

சாந்: ஏன் இங்க வந்தே.. ஒன்னப் பார்க்கிறதே பாவம்.. போடி வெளியெ...!

கண்: அண்ணா.. உனக்கு செஞ்ச அநியாயத்துக்கு நான் நல்லா பலன் அனுபவிச்சிட்டேன் அண்ணா....!

சாந்: காதல் போதையில குடும்ப மானத்த நாசமாக்கிட்டு ஓடிப் போய், இப்ப கையில குழந்தையோட வந்து நிற்கிறீயே. ஒனக்கு வெட்கமா.. இல்ல.. போ வெளியே!

கோகி: (கண்மணியின் கையிலுள்ள குழந்தையை வாங்கிக் கொள்கிறாள்) சாந்தன் அவள இப்படி வெரட்டினா அவ எங்கடா போவா..?

சாந்: தாய் அடிபட்டு மயங்கிக் கெடக்கிற நேரம் காதல் வெறியோட திக்கு திசை தெரிஞ்சா ஓடிப்போன..? அன்னைக்கு காதல் மயக்கத்துல ஓடிப்போனவ...இன்னைக்கு துணையா கையில குழந்தையோட வந்து நிற்கிறாளே, அதையும் வழித்துணையா கூட்டிக்கிட்டு போடி வெளியே!

கோகி: ஐயோ... எனக்கொரு சாவு இல்லையா...?

சாந்: (பெரும் வேதனையுடன்) சாவு உங்களுக்கில்லம்மா.. அது .. எனக்கு வரனும்... என் ஆசைகள், அபிலாசைகள் எல்லாத்தையும் மண்ணாக்கிட்டு.. குடும்பத்து மானத்த நாசமாக்கிட்டு பார்க்கிறவங்களெல்லாம் எங்க மொகத்துல காரித்துப்பவச்சிட்டு போன ஓடுகாலிய கட்டியணைச்சுக்கிட்டு அழுவுறீங்களே! இந்த மானங்கெட்ட காட்சியெ பார்க்காம இருக்க எனக்குத் தானம்மா.. சாவு வரனும்....! எனக்குத்தானம்மா ஒரு சாவு வரணும்!!

கோகி: (வேதனையுடன்) சாந்தன்! என்னை என்னடா செய்யச்சொல்ற....?

சாந்: அந்த அவமானச் சின்னத்த அவ கையில கொடுத்து அவ மொகத்துல காரித்துப்பி அனுப்பி வைங்கம்மா...!

கோகி: அத நான் செய்ய மாட்டேன்.. சாந்தன் தாய்ப்பாசம்ங்கிறது மானம், மரியாதைங்கிறதப் போல ஒரு சமூக உணர்வு இல்லடா..அது கடவுளோட சக்தி!

சாந்: தூ! தாய்ப்பாசம்ங்கிறது இவளுக்கும் ஒரு கேடா....!

கண்: அம்மா.. அவர் என் மேல முன் போல அன்பில்லம்மா!

சாந்: எப்படிடி அது வரும்? எப்படி வரும்? நீ என்ன அம்மி மிதிச்சு, அருந்ததி பார்த்து.. மேளம் கொட்டி நாலு பேர் வாழ்த்த தாலி கட்டிக்கிட்டவளா? பெத்த தாயையும், கூடப் பொறந்த அண்ணனையும் கதற வச்சிட்டு ஓடிப் போனவள் தானே நீ! எப்படி ஒன் வாழ்க்கை சிறப்பா அமையும்...?

கண்: அந்த தவற இப்ப நான் உணர்ரேன் அண்ணா.. என் போல பெண்களுக்கு என்னோட வாழ்க்கை ஒரு பாடம் அண்ணா!

சாந்: உன் வாழ்க்கை மத்த பெண்களுக்கு பாடமா இருக்க... உன் வாழ்கை வரலாற கின்னஸ் புத்தகத்துலயா எழுதப் போற? நீ வந்த சுவடு தெரியாமப் போயிடு...!

கோகி: நீ போய் ஒன் புருசனோட வாழும்மா...!

கண்: அவரோட வாழ முடியல்லம்மா... குடிச்சிட்டு வந்து தெனமும் அடியும் ஒதையும் தானம்மா....!

சாந்: காதல் வெறியோட குடும்பத்த மதிக்காம ஓடின.. அவன் மனசுல இருந்த ஆச வெறிய ஒன் கையில தந்துட்டான்.. எப்படிடீ அவனுக்கு இனி ஒன் மேல பாசம் வரும்!

(இச் சமயம் கண்மணியின் கணவன் ஸ்ரீதர் குடிவெறியோடு வீடடினுள் நுழைகிறான்.)

ஸ்ரீத: வீட்ட விட்டு போறேன்னு கடிதம் எழுதி வச்சிட்டு வந்தா.. நான்.. சும்மா இருந்துடுவேன்னு நெனைச்சியா...?

சாந்: பிறந்த வீட்டுல இருந்துத்தான் ஓடிப் போன.. புகுந்த வீட்டுல இருந்து ஏன் ஓடிவந்தே..?

ஸ்ரீத: சபாஷ்! பழகின பழக்கம் சுடுகாடு மட்டும்.. சரியான கேள்வி கேட்டீங்க மச்சான்!

சாந்: ச்சீ! வாயெ மூடுடா ராஸ்கல்! மச்சானாம்.. மச்சான்!

ஸ்ரீத: (குடிவெறியில்) ச்சீ!...! வரவேற்பு நல்லா இல்லையே...!

சாந்: வரவேற்பு தர்ரதுக்கு நீ என்னடா முறையர வந்த மாப்பிள்ளையா...? ஒரு குடும்பத்த தலை குனிய வச்சிட்டு ஒருத்திய ஏமாத்திக் கூட்டிக்கிட்டு ஓடினவன் தானேடா நீ...!

ஸ்ரீத: ஏமாத்திக் கூட்டிக்கிட்டு போறதுக்கு ஒன் தங்கச்சி என்ன...சின்ன பேபியா...?

சாந்: அடியே ஓடு காலி.. அம்மா கையில இருக்கிற ஒன் அவமானச் சின்னத்தை வாங்கிட்டு.. இந்த தடியனையும் கூட்டிக்கிட்டு போ வெளியெ...!

கண்: போ வெளியெ..போ வெளியேங்குறீயே அண்ணா.. உண்மையிலேயே உன் இதயத்துல என்மேல பாசம் இல்லேன்னு சத்தியம் செய்.. நான் போயிடுறேன் அண்ணா...!

சாந்: (தலை குனிகிறான்.)

கண்: (கனிவுடன்) அண்ணா! தவறு செஞ்சிட்டேன் – என் வாழ்க்கையிலயும் நான் தவறிட்டேன். இனி நான் வாழ்க்கையில தவறு செய்ய வேற வாய்ப்பே இல்லண்ணா.. (தன் கணவன் பக்கம் திரும்பி)அத்தான் நடந்ததெல்லாம் நடந்து போச்சு.. என்ன இருந்தாலும் பெத்த பாசமும் உடன் பிறந்த நேசமும் இல்லேன்னு போகாது.. நான் உங்களுக்காக என் படிப்பப் பாழக்கிக்கிட்டேன். அண்ணாவோட வாழ்க்கையையும் நாசமாக்கிட்டேன்... அம்மாவையும் அண்ணாவையும் உதறித் தள்ளினேன்.. எல்லாமே நீங்கதான்னு நான் உங்களோட வந்துடேன்.. இனிமேலாவது நாங்க சந்தோஷமா வாழ வழி பார்ப்போம்!

ஸ்ரீத: வெரி குட் .. அதுக்கு நான் ரெடி! ஆனா.. ஒன் அண்ணாகிட்ட இருந்து ரெண்டு லெட்சம் காசு வாங்கிக் கொடு...!

கண்: அவர்கிட்ட ஏது அவ்வளவு பணம்?

ஸ்ரீத: ஏன் ஒன் அண்ணாவோட காதலி மூலமா வீடு, வாசல், பணம் எல்லாம் கிடைச்சிருக்குன்னு நேத்து நம்ம வீட்டுக்கு வந்த சிவலிங்கம் சொன்னானே.. அதெ நீயும் கேட்டு கிட்டு தானே இருந்த.. அவன் தான் எல்லாம் தெளிவா சொன்னானே!

கண்: வீண் பிடிவாதம் பிடிக்காம.. உங்க போக்க மாத்திக்கிட்டு..இந்தக் கொழந்தைக்காக சரி மனுசனா வாழப் பாருங்க அத்தான்!

ஸ்ரீத: நான் என்னா மாட்டேன்னா.. சொல்றேன்.. பணம் கேட்டு கொடு...!

சாந்: ஒரு சதம் கூட கெடையாது.. போடா.. வெளியே!

ஸ்ரீத: (கோகிலத்திடம் இருக்கும் குழந்தையை சட்டென்று பிடுங்கி எடுத்துக் கொண்டு) நீ பணம் கொடுக்கல்லேன்னா இந்த கொழந்தையெ இந்த எடத்துலயே தூக்கி தரையில அடிச்சுக் கொன்னுடுவேன்!

கண்: (பதறி) அத்தான்...

கோகி: (கதறி) வேண்டாம் அப்பா! அப்படி செஞ்சிடாதே!

சாந்: அத தரையில அடிச்சுக் கொன்னுடாதே...!

ஸ்ரீத: அப்போ கேட்ட பணம் கொடுப்பியா...?

சாந்: பணம் நான் தரமாட்டேன்.. அதப் பெத்தாளே இந்த ஓடு காலி, அவ தலையில அதெ அடிச்சுக் கொல்லுடா.. அப்போத்தாண்டா ஒனக்கும் அவளுக்கும் பொறந்த பாவத்துக்கான சரியான பலன் அதுக்குக் கெடைக்கும்....!

கண்: (கெஞ்சலாக) அண்ணா! அவருக்கு எவ்வளவு சரி பணம் கொடன்னா.. இல்லேன்னா – அவர் குழந்தையெ கொன்னுடுவாரு அண்ணா....! (காலைப் பிடிக்கிறாள்.)

சாந்: பெத்த பாசம்ங்கிறது என்னான்னு உனக்கு இப்போ புரியுதா.. நீ வீட்ட விட்டு ஓடினதும்... அம்மாவும் இப்படித்தானே கதறினாங்க.. ச்சீ..! (காலால் தள்ளி விடுகிறான்.)

ஸ்ரீத: டேய் நீ அடிக்க அவ.. என் பொண்டாட்டியா.. இல்ல ஒன் பொண்டாட்டியா..?

சாந்: என்னடா சொன்ன... (ஸ்ரீதரோடு போராடுகிறான். கண்மணி இருவரையும் விலக்கி குழந்தையை பிடுங்கி எடுக்கிறாள்.)

சாந்: போடா வெளியே...!

ஸ்ரீத: தாடி.. என் .. கொழந்தைய...

கண்: அது.. என் ... கொழந்த.. நான் தரமாட்டேன்!

(கோகிலாவிடம் குழந்தைக் கொடுக்கிறாள்.)

ஸ்ரீத: நான் இல்லாம உனக்கு எப்படிடி கொழுந்த வந்திச்சி!

கண்: ஒங்களப் போல ஒரு மனுசனுக்கு அது பொறந்ததே பாவம்...!

ஸ்ரீத: ஒ... ஹோ... அப்போ ஒன் அண்ணன்கிட்ட சொல்லி ஒரு பாக்கியமான குழந்தைய யாருக்காவது பெத்துகடி...!

சாந்: ச்சீ... நீயும் ஒரு மனுசனா..?

(ஆத்திரம் மேலீட்டால் ஸ்ரீதருடன் அடிபட, கண்மணி கோகிலம் கையில் குழந்தையுடன் இடையில் நுழைய நால்வரும் போராட ஸ்ரீதர் தரையில் 'தடார்' என்று விழுகிறான்.)

கோகி: சாந்தன் அவருக்கு எவ்வளவு சரி பணம் கொடுத்து அனுப்பிடு!

சாந்! சரியம்மா – உங்களுக்காக நான் செய்றேன்!

கண்: அத்தான்...! அத்தான்.....!! அத்தான்.......!!! எழும்புங்க...!

(ஸ்ரீ தரை கண்மணி எழுப்புகிறாள். ஸ்ரீதர் இறந்திருக்கிறான்)

சாந்: (சாந்தனும் அவனை எழுப்பி பார்த்துவிட்டு) கண்மணி... இவன் செத்துட்டானம்மா...!

கண்: (கதறியவாறே) ஐயோ!(கதறி அழுகிறாள்) தெரியாத வயசுல அப்பாவ இழந்தேன். அறிவு தெரிஞ்ச வயசுல அம்மா, அ ண்ணன உதறித் தள்ளிட்டு காதல் வெறியில வீட்டை விட்டு ஓடினேன் – படிக்கிற வயசுல பாதை தவறி பாழும் கெணத்துல விழுந்தேன்.. துணையா இருப்பீங்கன்னு நெனைச்சேன்.. வெனையா வந்து வேதனைய தந்தீங்க.. அப்பாவியாகஇருந்த என் மனசுல புகுந்து ஆசைய வளர்த்து... கடைசியில என்னை அனாதையாக்கிட்டீங்களே.. ஐயோ.. என் வாழ்க்கை மற்ற பெண்களுக்காவது ஒரு பாடமா இருக்கட்டும்.. ஆனா.. அவங்கள வாழ்க்கை விடிவில்லாத முடிவாக இருக்கவேண்டாம்.... விடிவில்லாத முடிவா இருக்க வேண்டாம்....!

(கண்மணி வீட்டினுள்ளே விரைவாகப் போகிறாள். கோகிலா குழந்தையுடன் பின் தொடர்கிறாள். சற்று நேரத்தில்.. கோகிலம் கையில் குழந்தையுடன் வீட்டினுள்ளேயிருந்து ஓடி வந்து...)

கோகி: ஐயோ என்.. கண்மணி...! கண்மணி!! சாந்தன்! தங்கச்சி நெருப்பு வச்சிக்கிட்டா....!

சாந்: (கதறி) தங்கச்சி.....!

(கையில் குழந்தையுடன் கோகிலாவும் சாந்தனும் சிலையாக நிற்கின்றனர்)

(வீட்டினுள்ளே பற்றி எரியும் தீச்சுவாலையின் ஒளிதெரிகிறது. கண்மணியின் மரண ஓலமும் கேட்டு ஓய்கிறது)

குரல்: **"கண்மணி என்ற பெண்மணி தனது அடங்காத குணத்தால், குடும்பத்தவர்களின் நெஞ்சங்களிலே தீ மூட்டினாள். இன்று அந்தத்தீ அவளையே பற்றிக் கொண்டது... இந்த கண்மணிக்கு நடந்த "விடிவு இல்லாத முடிவு" இனி எந்தப் பெண்மணிக்கும் வரவேண்டாம்.. என்பதே எங்களது பிரார்த்தனையாகும்".**

**(மெதுவாக திரை மேடையை மூடுகிறது)**

**முற்றும்.**

# உள்ளே இருந்து சில துளிகள்

குண: அந்த காலத்துல நாங்க யாப்பனே போய்.... நாக விகாரே.. கீரிமலே... நல்லூர் கோவில்..... மாவிட்ட புர எல்லாங் சுத்தி திரிஞ்சி வாற போது.. ஒடியல், பினாட்டு,,, முருங்கா எல்லாங் கட்டி கொண்டு வருவாங் தானே.. ம்... அது அந்தக் காலங் ...ம்... இனி அப்புடி ஒரு காலங் வருவானா...?

நவ: நாங்க மட்டும்... என்னா? மாத்தரை... கதிர்காமம்... கண்டி தலதா மாளிகா.... அனுராதபுரம்ன்னு எல்லாம் போவோம்... இன்னிக்கு அந்த பகுதிக்கு போறத விட்டுட்டு நெனைச்சுக் கூட பார்க்க முடியாது...!

குண: அது மட்டுமா? இன்னைக்கு நாட்டுல மனுசயன்ட வெடிய (மனிதனைப் பார்க்க) ஐடியன்டிகார்ட் தான் லொகு வெலா தியென்னெ... (முக்கியமானதாக) இருக்கு சொந்த நாட்டுலயே நாங்க வெளிநாட்டுக்காரன் மாதிரி தானே இருக்கிறான்...!

## "தீர்வு" நாடகத்தில் ...

ராஜ: எங்களுக்கு அம்மாவும் இல்ல.. அப்பாவும் இல்ல. நம்ம குடும்பத்துல உள்ளதே நானும் நீயும். தம்பி சிவாவும் மட்டும் தானே.. இதுல நாம ஒருத்தர ஒருத்தர் மதிக்காம நடந்துக்கிட்டா. ஊர் எங்களப் பார்த்து சிரிக்கும்ன்னு அன்னைக்கு ஒரு நாள் சொன்னியே.. அண்ணா... அதெ எப்படியண்ணா இப்போ மறந்துட்டே.. அண்ணா... இன்னைக்கு சிவாவும் எங்களோட இல்ல. இனி என்னைக்குமே அவன் எங்களோட வாழ வர மாட்டான். இனி வாழ வேண்டியவங்க நானும் நீயும் தானே அண்ணா... வா.. அண்ணா இவர ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவோம்.. இவருக்கு இந்த எடத்துல ஏதாவது நடந்துட்டா நாளைக்கு இந்த உலகம் நம்மளப் பார்த்து சிரிக்கும் அண்ணா...!

## "தீர்ப்பு" நாடகத்தில் ...

சாந்: சந்தோஷம் – ஹா. அன்பக் கொட்டி – வளர்த்த அம்மாவோட ஆசையையும், பாசத்தைக் கொட்டிப் பார்த்த இந்த அண்ணனோட பேச்சையும் மதிச்சு நடந்து.. நாங்க பார்த்த ஒரு மாப்பிள்ளைய கட்டிக்கிட்டு ஒரு கொழந்தையெ பெத்திருந்தா... அந்தக் கொழந்த தன் பிஞ்சுக் காலால என் நெஞ்சில உதைச்சி வெளையாட இந்த மார்புல போட்டு வளர்த்திருப்பேன்.. என் கண்மணியோட கண்மணிக்கு என் தோள தொட்டிலாக்கி ஆராரோ.. ஆராரோன்னு பாடி.. தூங்க வச்சிருப்பேனம்மா... அம்மா... அவ எப்படி என் முகத்துல கரியப் பூசிட்டு ஓடினாளோ.... அதே மாதிரி .. அந்த கொழந்த வளர்ந்து, பெரியவளாகி அவ முகத்துல கரியப் பூசிட்டு ஓடனும். அப்போ தானம்மா.. எனக்கு சந்தோஷம்.

## "விடிவு இல்லாத முடிவு" நாடகத்தில் ...